# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 32 கதிர் 355 ஐப்பசி 30ஆம் நாள் வியாழக்கிழமை 16 நவம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


## ஆபத்தான இந்திய மருத்துவக் கழிவு வடக்குக் கடலில் கொட்டப்படுகின்றதா?

*தொண்டமானாற்றில் அள்ளுகொள்ளையாக ஒதுக்கம்*

யாழ்ப்பாணம், நவ.16
காலாவதியான மருந்துப் பொருள்கள், ஆயிரத்துக்கும் மேலான கண்ணாடிப் போத்தல்கள், பொலித்தீன்கள், ஊசிவகைகள் போன்ற மருத்துவக் கழிவுகள் கடந்த மூன்று நாள்களாக வடமராட்சி தொண்டமானாறு கடற்பரப்பில் கரையொதுங்குகின்றன. இவை ஆபத்தான மருத்துவக் கழிவுகளா என்கிற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.
அந்தப் பொருள்கள் இந்தியாவிலிருந்தே இங்கு வருகின்றன என சுகாதாரப் பிரிவினர் சந்தேகிக்கின்றனர். பொருள்களில் உள்ள இந்திய அரச முத்திரைகள், அங்குள்ள வர்த்தக நிலையங்களின் பெயர்களை வைத்தே அவர்கள் இவ்வாறு சந்தேகிக்கின்றனர்.
கரையொதுங்கும் மருத்துவக் கழிவுகள் தொண்டமானாறு மீனவர்கள் மத்தியிலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவின் மருத்துவக் கழிவுகள் படகுகளில் எடுத்துவரப்பட்டு நடுக் கடலில் கொட்டப்படுகின்றனவா என்கிற சந்தேகத்தையும் இது கிளப்பிவிட்

>> 04

## சுனாமி வதந்தியால் மக்கள் அலைக்கழிவு

முல்லைத்தீவில் நேற்றுப் பரபரப்பு

(விரிவு 6ஆம் பக்கத்தில்)

## சிங்களவரின் சம்பந்தி விக்கி இனவாதத்தைத் தூண்டக்கூடாது

*இப்படிச் சொல்கிறார் மேல் மாகாண முதலமைச்சர்*

கொழும்பு, நவ. 16
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சிங்கள இனத்துடன் குடும்ப உறவுகளை வைத்துக்கொண்டு

>> 25

நாவற்குழியில் சுற்றிவளைப்பு நடத்தி

# ராணுவம் பிடித்துச் சென்ற மூவர் தொடர்பில் விசாரணை ஆரம்பம்

*தளபதிகளுக்கு அறிவித்தல் அனுப்ப யாழ். மேல் நீதிமன்று கட்டளை*

யாழ்ப்பாணம், நவம்பர் 16
நாவற்குழியில் 21 ஆண்டுகளுக்கு முன்னர் இராணுவத்தினரின் சுற்றி வளைப்பில் பிடித்துச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட மூவர் தொடர்பான ஆள்கொணர்வு மனுக்கள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் விசாரணைக்கு ஏற்கப்பட்டது.
வழக்கின் பிரதிவாதிகளான இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க, யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதி மற்றும் சட்டமா அதிபருக்கு இது தொடர்பான அறிவித்தல்களை அனுப்ப யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தரவிட்டார்.
1996ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் திகதி சுற்றி வளைப்பில் கைது செய்யப்பட்ட 24 இளைஞர்கள் இன்று வரைவீடு திரும்பவில்லை. அவர்கள் காணாமல்ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 12 பேர் சார்பில் கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை மேல் நீதிமன்றில் ஆள்கொணர்வு மனு தாக்கல் செய்

>> 25

யாழ். குடாநாட்டிலுள்ள

## பொலிஸார் அனைவரதும் விடுப்புக்கள் திடீர் நிறுத்தம்

*வாள்வெட்டுக் கும்பல்களின் அடாவடியை அடுத்து*

யாழ்ப்பாணம், நவ. 16
யாழ்ப்பாணத்தில் மீளவும் அதிகரித்துள்ள வாள்வெட்டுக் கும்பல்களின் அட்டூழியங்களையடுத்து அனைத்துப் பொலிஸாரினதும் விடுப்புக்கள் நேற்று இடைநிறுத்தப்பட்டன.
இதற்கான அறிவுறுத்தலை வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ்ப் பாணப் பிராந்தியத்தில் உள்ள அனைத்துப்

>> 25



## சிம்பாப்வேயில் இராணுவ ஆட்சி

முடிவுக்கு வந்தது முகாபேயின் சகாப்தம்

>> 25

## வடக்கு ரயில் சேவை இன்று வழமைக்கு

யாழ்ப்பாணம், நவ. 16
வடக்குக்கான தொடருந்துப் போக்குவரத்து நேற்று முற்றாகப் பாதிப்படைந்திருந்தது. இன்று அது வழமைக்குத் திரும்பவுள்ளதாக தொடருந்துத் திணைக்களம் தெரிவித்தது.
நேற்றுமுன்தினம் இரவு மாத்தறையிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த ரஜரட்ட ரெஜின நகர்சேர் கடுகதி தொட

>> 25

## பிணையில் வெளிவந்தோரே வாள்வெட்டில் ஈடுபடுகிறார்கள்

*பொலிஸார் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், நவ. 16
வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்பில் கைதாகிப் பிணையில் விடுவிக்கப்பட்ட சந்தேக நபர்களே, கடந்த சில நாள்களாக நடைபெறும் வாள்வெட்டுக்களுடன் தொடர்புபட்டுள்ளார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில்

>> 25

குடாநாட்டு வாள்வெட்டுக்கள் தொடர்பில்

## இளைஞர்கள் மூவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், நவ. 16
வாள்களுடன் நடமாடிய குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் விசாரணைக்காக யாழ்ப்பாணப் பொலிஸாரால் நேற்று அழைக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டனர்.
கைது செய்யப்பட்ட மூவரும் 22

>> 25

## பெரும்பான்மையினரைச் சீண்டிவிட்டு இனவாதிகள் என்கின்றனர் தமிழர்கள்

*சம்பந்தனுக்கு நாமல் நேற்றுச் சாடல்*

கொழும்பு, நவ. 16
எப்பொழுதும் பெரும்பான்மை இனத்தினரை நீங்களே சீண்டிவிட்டு, எம்மைப் பார்த்து இனவாதிகள் என்று கூறுவதில் என்ன நியாயம் இருக்கின்றது ஐயா?
இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, எதிர்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான

>> 25

3 அரசியல் கைதிகளின் வழக்கில்

## வவுனியா மேல் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க ஒருவர் சம்மதம்

*மேலும் இருவரின் முடிவு தெரியவரவில்லை*

யாழ்ப்பாணம், நவ. 16
அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்ட தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கில், முன்னாள் போராளிகளான 3 சாட்சிகளில் ஒருவர் வவுனியா மேல் நீதிமன்றுக்கு வந்து சாட்சியமளிக்கச் சம்மதம் தெரிவித்துள்ளார். ஏனைய 2 சாட்சிகளும் வெளிநாட்டில் இருப்பதனால் அவர்களின் முடிவை அறிய முடியவில்லை. இவ்வாறு சட்டமா அதிபர் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு நேற்று அறிவிக்கப்பட்டது.

>> 04

## உள்ளூராட்சி எல்லைகளை எதிர்த்து நீதிமன்றத்தில் மனு

கொழும்பு, நவ. 16
உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றதாக அறிவிக்கக் கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆறு வாக்காளர்களால் நேற்று மனுத் தாக்கல் செய்யப்பட்டது.
சட்டத்தரணி மலிக சுசந்தி அல்லபிட்டவினால் இந்த மனு மன்றில் தாக்கல் செய்யப்பட்டது.
இந்த மனுவின் பிரதிவாதிகளாக, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா மற்றும்

>> 25

## நல்லிணக்க 'பட்ஜட்' மாவை நேற்றுப் பாராட்டு

கொழும்பு, நவ. 16
இன நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வரவு -செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நேற்று (நேற்று முன்தினம்) நிதி அமைச்சரைச் சந்தித்து மேலதிக கோரிக்கைகளையும் நாம் முன்வைத்தோம். அவற்றை நிறைவேற்றுவதாகவும் நிதி அமைச்சர் எமக்கு உறுதியளித்தார். நல்லிணக்கத் துக்கான வரவு- செலவுத்திட்டமொன்றை கொண்டு வந்தமையால்

>> 25

## இன்று வாக்கெடுப்பு

கொழும்பு, நவ. 16
வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ளது. அதனை ஆதரிப்பதா இல்லையா என்பது குறித்துத் தீர்மானம் எடுப்பதற்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இரா.சம்பந்

>> 25




## யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கும்
# அடாவடிகளை நிறுத்த பூஜித்திடம் கோரிக்கை

யாழ்ப்பாணம் நவ 16
யாழ்ப்பணத்தில் அதிகரித்து வரும் சமூகவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கவுள்ளேன்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
யாழ்ப்பணத்தில் நேற்றுமுன்தினம் வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று கூறுகின்றீர்கள். அதற்கு நான் என்ன செய்வது?. கடந்த நாள்களில் இடம்பெற்ற சம்பவங்களை அறிந்துள்ளேன். தெற்கிலும் இவ்வாறான சம்பவங்கள் நடக்கின்றன.

இங்குள்ளவர்களில் ஒருதரப்பினர் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லைஎனக்குற்றஞ்சாட்டுகின்றனர். இன்னொரு தரப்பு பொலிஸார் மேலும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்றனர். இது தொடர்பில் நான் ஆராய்கின்றேன். யாழ்ப்பாணத்தில் நடக்கும் சமூக விரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொலிஸ் மா அதிபரிடம் கோரவுள்ளேன்.

யாழ்ப்பாணத்தில் தனியார் காணிகளில் நிலைகொண்டுள்ள இலங்கை இராணுவத்தினரை யாழ்ப்பாணம் நகரில் அமைந்துள்ள கோட்டைக்குள் அமர்த்தி தனியார் காணிகளை மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று இலங்கை அரச தலைவருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பணத்தில் நகரில் உள்ள சிங்கள மகாவித்தியாலத்தில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர், பண்ணையில் அமைந்துள்ள சிறப்பு அதிரடிப்படையினரின் முகாம், இராணுவ முகாம் என்பவற்றை அப்புறப்படுத்தி அங்கிருக்கும் பாதுகாப்புத் தரப்பினரை கோட்டைக்குள் இடமாற்ற வேண்டும். அதற்கான ஆலோசனையை நான் அரச தலைவருக்கு எழுத்து மூலமாக அனுப்பியுள்ளேன் அதே வேளை வடக்கு மாகாணத்தில் மதிப்பளிக்கப்பட வேண்டிய சமூக பிரமுகர் களை தெரிவு செய்து அவர்களுக்கு மதிப்பளிக்கவுள்ளேன். வடக்கு மாகாண முதல்வரும் அவ்வாறு செய்துவருகின்றார். அதற்காக நான் அவர் செய்யும் பணியையே செய்யப்போகின்றேன் என்று கூறவில்லை.

எமது பிரதேசத்தில் உள்ள நன்கொடையாளர்கள், சமூக சேவையாளர்கள், தற்போதைய காலத்துக்கு ஏற்ற சிறந்த விவசாயிகள், சிறந்த அதிகாரிகள் என மதிப்பளிப்பு நிகழ்வொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளேன். உதாரணமாக எத்தனையோ தனிநபர்கள் தனது காணிகளை பொது வேலைகளுக்கு, பாடசாலைகளுக்கு என வழங்கியுள்ளனர். நாம் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம் - என்றார். (ந-8)



வன்னிவிளாங்கும் மாவீரர் துயிலும் இல்லத்தைத் துப்புரவாக்கும் நடவடிக்கைகள் நேற்று நடைபெற்றன. மாவீரர் நினைவேந்தலை முன்னெடுப்பதற்கான பணிக்குழுவைச் உருவாக்கப்பட்டது. மாவீரர் களின் பெற்றோர்கள் மற்றும் பிரதேச இளைஞர்கள், பணிக்குழுவினை சார்ந்தவர்கள் மாவீரர் துயிலும் இல்லத்தை துப்புரவாக்கினர். எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நினைவேந்தலை உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டது. (ந-ரி3)

## வறட்சி நிவாரணத்தில் புறக்கணிப்பு சாந்திபுரம் மக்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

மன்னார்.நவ.16
மன்னார் சாந்திபுரம் கிராம மக்கள் ஒன்றிணைந்து நேற்றுக் காலை மன்னார் பிரதேசச் செயலகத்துக்கு முன் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வறட்சி நிவாரணம் வழங்கியதில் தமது கிராம மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும், தமது கிராமத்துக் குப் பொறுப்பான கிராம அலுவலகரின் செயற்பாட்டைக் கண்டித்தும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

சாந்திபுரம் கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக் கான ஆண்கள், பெண்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

452 குடும்பங்கள் வசித்து வருகின்ற நிலையில் கிராமத்தில் 60 குடும்பங்களுக்கு மட்டுமே நிவாரணங்கள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன.

ஏனைய குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை. இந்த விடயம் தொடர்பில் சாந்திபுரம் கிராம அலுவலர் மற்றும் மன்னார் பிரதேச செயலர் ஆகியோரிடம் தெரியப்படுத்தியிருந்தோம்.

இது வரை பாதிக்கப்பட்ட ஏனைய குடும்பங்களுக்கு நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என சாந்திபுரம் கிராம மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சாந்திபுரம் கிராமத்தைச் சேர்ந்த பெண் ஒருவரையும் சாந்திபுரம் கிராம அலுவலர் தகாதா வார்த்தைகளால் பேசினார் என்றும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து சாந்திபுரம் கிராமத்தில் உள்ள கிராம மட்டத் தலைவர்களுக்கும், மன்னார் பிரதேச செயலர் என்.பரமதாஸுக்கும் இடையில் பிரதேச செயலகத்தில் சந்திப்பு இடம் பெற்றது.

உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என மன்னார் பிரதேசச் செயலர் வழங்கிய உறுதி மொழியையடுத்து மக்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டுச் சென்றனர்.

"மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 3ஆயிரத்து 519 குடும்பங்க ளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க அனுமதி கிடைத்துள்ளது. அதன் அடிப்படையில் கிராமங்கள் தோறும் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது.

பாதிக்கப்பட்ட ஏனைய குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என மன்னார் பிரதேச செயலர் என்.பரமதாஸ் தெரிவித்தார். (ரி2,56)

## முன்னாள் போராளிகளுக்கு அடுத்தாண்டு வீட்டுத் திட்டம்

வவுனியா, நவ.16
அடுத்த ஆண்டு வவுனியா மாவட்டத்தில் முன்னாள் போராளிகள் மற்றும் இந்தியாவில் இருந்து திரும்பி மீள்குடியமர்ந்தவர்களுக்கு 100 வீட்டுத் திட்டம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா தெரிவித்தார்.

வவுனியா, கள்ளிக்குளம், சிதம்பரபுரம் கிராமத்தில் நடைபெற்ற கிராம சக்தி ஆரம்ப நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
கிராம சக்தி வேலைத் திட்டம் கடந்த ஒக்ரோபர் மாதம் அரச தலைவரால் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நாடு முழுவதும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. வறுமையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது.

ஒரு ஏக்கர் காணி உள்ள 50 பயனாளிகள் முருங்கைச் செய்கைத் திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர். முருங்கை விதைகள் வழங்கப்பட்டு முருங்கைக் காய்கள் கொள்வனவு செய்யப்படும். இந்தத் திட்டத்தில் ஆர்வமுள்ளவர்கள் கிராம அலுவலரிடம் பதிவு செய்யலாம். என்றார். (ந)

## வெடிபொருள் வெடித்து ஒருவர் சாவு

கிளிநொச்சி, நவ.16
பூநகரி, கிராஞ்சியில் வெடிபொருள் வெடித்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது.

வீட்டுக்குள் நுழைந்த பாம்பு ஒன்றை அடித்து அதை வீட்டுக்கு வெளியே தீயிட்டபோதே வெடிப்புச் சம்பவம் நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது. (ந-35)

## சுனாமி எனும் வதந்தியால் மக்கள் நேற்றுப் பதகளிப்பு!

யாழ்ப்பாணம், நவ.16
சுனாமி அச்சம் காரணமாக நேற்று வடக்கு, கிழக்கு கரையோரங்களில் பதற்ற நிலைமை ஏற்பட்டது. எனினும் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என்று இடர் முகாமைத்துவப் பிரிவு அறிவித்தது.

வடக்கில் வடராட்சி கிழக்கில் நேற்றுக் காலை சுனாமி அச்சம் காரணமாக மக்களிடையே பதற்ற நிலைமை ஏற்பட்டது. கிழக்கு மாகாணத்தில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று பரவிய தகவலை அடுத்தே இந்த நிலைமை ஏற்பட்டது. கரையோர மக்கள் இடம்பெயரும் முயற்சிகளில் ஈடுபட்டனர். கரையோரப் பாடசாலைகள் சில மாணவர்களை திரும்பியனுப்பின என்று கூறப்பட்டது.

சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. மக்கள் தேவையற்று அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது என்று மாவட்டச் செயலக இடர் முகாமைத்துவப் பிரிவுத் தகவல்கள் தெரிவித்தன.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு ஒத்தாச்சிமடம், அம்பாறையில் கல்முனை, பாண்டிருப்புப் பிரதேசங்களிலும் இவ்வாறான நிலைமை காணப்பட்டது.

அங்குள்ள கிணறுகளின் நீர்மட்டம் விரைவாகக் குறைந்ததை அடுத்தே மக்கள் மத்தியில் சுனாமி அச்சம் ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது. பெற்றோர்கள் பாடசாலைகளில் இருந்து மாணவர்களை அழைத்துச் சென்றதை அவதானிக்க முடிந்தது. நாட்டின் எந்தப் பாகத்திலும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை. இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்தது. கரையோரப் பிரதேச மக்கள் அச்சப்பட வேண்டிய தேவையில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. பிற்பகலில் மக்கள் இயல்பு நிலைமைக்குத் திரும்பினர். (ந-8,26)

## காமினி செனரத் உட்பட மூவருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு,நவ.16
முன்னாள் அரசதலைவரின் தலைமை அதிகாரி காமினி செனரத் உள்ளிட்ட மூவருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

நேற்றுக் கொழும்பு கோட்டை நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போதே எதிர்வரும் 21ம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.


கடந்த ஆட்சியின் போது அமைச்சரவை அனுமதியுடன் நினோலங்கா உணவக திட்டத்துக்காக இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 18.5 பில்லியன் ரூபா நிதியில் 4 பில்லியன் ரூபாவை அம்பாந்தோட்டையில் பிறிதொரு உணவக வேலைத் திட்டத்துக்குப் பயன்படுத்தினர் என்று இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ந-ரி5)

## இடமாற்றம்பெற்றோருக்கு ஆளுநர் நியமனக் கடிதம்

யாழ்ப்பாணம், நவ.16
வடக்கு மாகாண திணைக்களங்களின் புதிய தலைமை அதிகாரிகளுக்கான நியமனக் கடிதங்களை வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே நேற்று வழங்கினார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளராக பதவி வகித்த பொ.வாகீசன் வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளராக நியமனம் பெற்றார்.

பருத்தித்துறை பிரதேச முன்னாள் செயலாளராக இருந்த ஆர்.ரி. ஜெயசீலன் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளராக நியமனம் பெற்றார். வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளராக இருந்த சிவராஜலிங்கம் விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவதன் காரணமாக பதில் பணிப்பா



ளராக எஸ்.பி.சிவநேசன் நியமிக் கப்பட்டார்.

ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண தலைமைச் செயலர் ஏ.பத்திநாதன், ஆளுநரின் செயலர் எல். இளங்கோவன். உதவிச் செயலர் ஜே.எக்ஸ்.செல்வாநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந)

### நிரந்தர நியமனம்கோரி

# சுகாதாரத் தொண்டர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம்.நவ.16

நிரந்தர நியமனம் வழங்கக்கோரி சுகாதாரத் தொண்டர்கள் நேற்றுக் காலை வடக்கு மாகாண முதலமைச்சு அலுவலகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



வடக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட சுகாதார ஊழியர்கள் தமக்கான நியமனத்தை வழங்க கோரியும்,6 மாத காலத்துக்கு மேற்பட்ட சம்பளத்தை வழங்கக் கோரியும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

"2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி தேவையின் நிமித்தம் வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவ மனைகளுக்கும் ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு சங்கங்களின் பணிப்பின் கீழ் 25 பேர் வீதம் மேலதிகமாக வவுனியா மாவட்டத்துக்கு 2 பேர் அதிகமாகவும் மொத்தமாக 127 பேர் நியமிக்கப்பட்டோம்.

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் எமது சேவைகளை நிறுத்தி எம்மை வெளியேறுமாறு மருத்துவ மனை நிர்வாகம் தெரிவித்தது.

எங்களின் நிலை அறிந்து ஒக்ரோபர் மாதம் வரை பணி புரிந்தோம். ஆனால் அன்றில் இருந்து எமக்கான சம்பளமும் வழங்கப்படவில்லை.

எமக்கு இப்போது வேலையும் இல்லை, சம்பளமும் இல்லை. எமக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்குதல் மற்றும் வேறு நியமனங்கள் வழங்கும் போது எம்மையும் உள்வாங்குவோம் என்றார்கள்.

ஆனால் நாம் இப்போது வேலை இல்லாமல் நடுத்தெருவில் நிற்கின்றோம்" எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் முதலமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதும் தெளிவான பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ரி2,ரி)

# சவுக்கடி இரட்டைக் கொலை: மூவர் நேற்று விடுவிப்பு

மட்டக்களப்பு, நவ.16

சவுக்கடி இரட்டைக் படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவரை மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தால் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

சவுக்கடி இரட்டைக் படுகொலை தொடர்பில் 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. 1 ஆம், 2 ஆம், 3 ஆம் சந்தேகநபர்கள் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர். 4ஆம், 5ஆம் சந்தேகநபர்களை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

சவுக்கடி, முருகன் கோயில் வீதியைச் சேர்ந்த திருமதி மதுவந்தி பீதாம்பரம் (வயது26) மற்றும் அவரது மகனான பீதாம்பரம் மதுஷன் (வயது11) ஆகியோர், கடந்த மாதம் 11ஆம் திகதி இரவு வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் தாக்கப்பட்டு கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். (ற)

# உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை நிலையம் திறப்பு

மன்னார், நவ.16



வடமாகாண தொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உள்ளூர் உற்பத்தி பொருள்கள் விற்பனை நிலையம் நேற்று மன்னாரில் திறக்கப்பட்டது.

மன்னார் பிரதான பாலத்தடி, பெரியகடைப் பகுதியில் அமைக்கப்பட்ட இந்த உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் விற்பனை நிலையத்தை வடமாகாண மகளிர் விவகாரம் மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் அனந்தி சசிதரன் வைபவ ரீதியாகத் திறந்தார். வடமாகாண தொழிற் திணைக்கள பணிப்பாளர், மன்னார் மாவட்ட செயலர் ஸ்ரான்லி டிமெல், வடமாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி பா.டெனிஸ்வரன், அலிக்கான் சரீப் உட்படத் தொழில் திணைக்கள பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-56)

# எட்டு மாடுகளுடன் ஒருவர் கைது

பட்டா ரக வாகனத்தில் மாடுகள் கொண்டுசென்றவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் நாவற்குளிப் பகுதியில் இடம்பெற்றது.

முல்லைத்தீவிலிருந்து பட்டா ரக வாகனத்தில் கொண்டு வரப்பட்ட 8 மாடுகள் நாவற்குளிப் பகுதியில் பொலிஸாரால் பிடிக்கப்பட்டது.

இதன்போது ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி2,26)

## 10 கைத்தொலைபேசிகளுடன் பருத்தித்துறையில் இருவர் கைது

பருத்தித்துறை.நவ.16

பருத்தித்துறைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

அதே பகுதி[illegible]ச் சேர்ந்த 20 மற்றும் 22 வய[illegible]டைய இருவரே பருத்தித்து[illegible] பொலிஸாரால் கைது[illegible]பட்டனர்.

கை[illegible]யப்பட்டவர்களிடமிரு[illegible]து 10 தொடுதிரைக் கைத்தொ[illegible]லைபேசிகள் கைப்பற்றப்பட்ட[illegible] என்று பொலிஸார் தெரிவித்[illegible]னர்.

களவாடப்பட்ட கைத்தொலைபேசி ஒன்றின் தொடர்பாடல் நடவடிக்கையைப்பின்தொடந்து குறித்த இருவரும் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பலருக்கு விற்கப்பட்டிருந்த நிலையில் கைபேசிகள் நேற்று கைப்பற்றப்பட்டன.

வெளிமாவட்டங்களிலும் கைத்தொலைபேசிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர்கள் வேறு திருட்டுக்களுடனும் தொடர்புடையவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த செப்ரெம்பர் மாதம் பருத்தித்துறை நகரப் பகுதியில் உள்ள அபான்ஸ் காட்சியறை உடைக்கப்பட்டு அங்கிருந்த கைத்தொலைபேசிகள் திருடப்பட்டிருந்தன. இதன்போது 5 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியுடைய 19 தொடுதிரைக் கைப்பேசிகள் களவாடப்பட்டிருந்தன.

இந்த நிலையிலேயே குறித்த இருவரும் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி2,26)



# வேலை தேடும் பட்டதாரிகள் கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம்.நவ.16

வடக்கு மாகாணக் வேலை தேடும் பட்டதாரிகள் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் யாழ். மாவட்டச் செயலகத்தின் முன்பாக இடம்பெற்றது.

"நாம் பல நாள்களாக யாழ்.மாவட்டச்செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டோம். அப்போது அனைத்துத் தரப்பினரும் போராட்டத்தைக் கைவிடுமாறு தெரிவித்தனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக உள்வாங்குதல் தொடர்பில் பட்டதாரிகள் இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என்றும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களை உள்வாங்குதல் தொடர்பில் பரீட்சைகள் நிறைவடைந்து 4 மாத காலமாகியும் எமக்கு எந்தவித மான பதிலும் கிடைக்கவில்லை" என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள் தெரிவித்தனர்.

அங்கிருந்து ஆளுநர் அலுவலகம் சென்ற பட்டதாரிகள் தேர்தலுக்கு முன்னர் தமக்கான தீர்வு கிடைக்க வேண்டும் என்றும் அத்துடன் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோரை சந்திக்க ஏற்பாடுகள் செய்து தரவேண்டும் எனக் கோரியும் வடக்கு மாகாண ஆளுநரிடம் மனு ஒன்றைக் கையளித்தனர். (ரி2,ரி)

உங்கள்
பிரதேசங்களில்
நடக்கும்
நிகழ்வுகளை
உலகறியச் செய்ய
எமக்கு அனுப்புங்கள்



உதயன்
DIGITAL
newuthayan.com
Leading Tamil News website in Sri Lanka
(+) 94 77 316 5555

# கடத்தலுக்குப் பயன்பட்டது கடற்படையின் 'வெள்ளைவான்'

## குற்றப் புலனாய்வுப் பிரிவு மன்றுக்கு அறிக்கை

கொழும்பு, நவ. 16
கொழும்பில் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட 'வெள்ளை வான்' கடற்படையின் கீழ் பதிவு செய்யப்பட்டது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றுக்கு நேற்று அறிக்கை சமர்ப்பித்தனர்.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மன்றுக்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வான், கடற்படையின் கீழ் பதிவு செய்யப்பட்டு 2008ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் 2010ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரை பயன்படுத்தப்பட்டது. பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ள லெப்டினன் கொமாண்டர் ஹெட்டி ஆரச்சி மற்றும் அவரது குழுவினரால் இந்த வான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேற்பார்வை செய்தோர் உள்ளிட்ட அனைத்துத் தகவல்களும் அடங்கிய கோவையை விசாரணையாளர்களிடம் கையளிக்க கடற்படை தொடர்ந்து இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. கடற்படைச் சட்டத்தின் பிரகாரம் வான் தொடர்பில் கோவை பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனாலும், அவ்வாறான கோவை இல்லை எனக் கூறி கடற்படை தொடர்ந்தும் வேண்டுமென்றே தகவல்களை மறுக்கின்றது.

இந்த 11 பேரின் கடத்தல் தொடர்பில் முதல் சந்தேக நபராக கைது செய்யப்பட்டு, தற்போது பிணையில் உள்ள சம்பத் முனசிங்கவின் கீழ் செயற்பட்ட குழுவினரை, அப்போது கடற்படைப் புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்த ஆனந்த குருகே விசாரணை செய்துள்ளார். அதில் கடத்தல் மற்றும் கொலை தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்ட போதும் அவ்வாறு விசாரணை நடக்கவில்லை என்று கடற்படை மறுத்து வருகின்றது.

விசாரணை இடம்பெற்றதை ஆனத்த குருகே குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கிய வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில் அதன் உண்மைத் தன்மையை வெளிப்படுத்த ஆனத்த குருகேயை மன்றுக்கு அழைத்து விளக்கம் கோரவேண்டும்.

குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளுக்காக கோரிய பல ஆவணங்களில் அரைவாசி ஆவணங்களே கிடைக்கப் பெற்றுள்ளன.

விசாரணைகளுக்கு அத்தியாவசியமான ஆவணங்கள் தொடர்ந்து வழங்கப்படாது இழுத்தடிக்கப்படுவதாக, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். (5,31)

## கொமடோர் தஸநாயக்காவை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு உடன்மாற்றப் பணிப்பு

கொழும்பு, நவ. 16
2008ஆம் ஆண்டு தமிழ் மாணவர்கள் ஐவர் உள்பட 11பேர் கடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி.தஸநாயக்கவை வெலிசறை கடற்படை வைத்தியசாலையிலிருந்து வெலிக்கடைச் சிறைச்சாலை வைத்தியசாலைக்கு உடனடியாக மாற்றுமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு கோட்டை நீதிவான் மன்ற நீதிவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

7ஆவது சந்தேகநபரான தஸநாயக்கவுக்கு எவ்வித நோயும் இல்லை என்று சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக நீதிவான் அறிவித்தார்.

சிறைச்சாலை அதிகாரியின் ஆலோசனைக்கமையவே தஸநாயக்க, கடற்படை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார் என்று கடற்படையினரால் நீதிமன்றத்துக்கு கடந்த அமர்வில் அறிவிக்கப்பட்டிருந்தது.

சந்தேகநபரொருவர் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பின் அரசுக்குச் சொந்தமான பொது வைத்தியசாலையொன்றிலேயே அனுமதிக்க சட்டத்தில் இடமிருப்பதாகச் சுட்டிக்காட்டிய நீதிவான், கடற்படை வைத்தியசாலை அரசுக்குச் சொந்தமானபோதும் பொது வைத்தியசாலை அல்ல என்றும் சுட்டிக்காட்டினார். அதன் காரணமாக அவரை வெலிசறை கடற்படை வைத்தியசாலையிலிருந்து வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு உடனடியாக மாற்றுமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார்.

வழக்குடன் தொடர்புடைய சமீபகால விசாரணை தொடர்பான அறிக்கைகள் சில தமக்குக் கிடைக்கவில்லை என்று மூத்த அரச சட்டத்தரணி ஜானக பண்டார நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து, இரண்டு வாரங்களுக்குள் ஆவணங்களை வழங்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபர்களின் விளக்கமறியல் எதிர்வரும் நவம்பர் மாதம் 29ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது. (5,31)

## புத்தரின் படத்தை
# பச்சை குத்தியதால் கைதாகிய பிரி. வாசிக்கு 6 லட்சம் இழப்பீடு

கொழும்பு, நவ. 16
புத்தரின் படத்தை உடலில் பச்சை குத்தியிருந்தார் என்ற குற்றச்சாட்டில், கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் கைது செய்யப்பட்ட பிரிட்டன் சுற்றுலாப் பயணிக்கு, 6 லட்சம் ரூபாவை இழப்பீடாக வழங்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த பிரிட்டன் சுற்றுலாப் பயணியான, நயோமி மிச்சேல் கோல்மன், வலது கையில் புத்தரை பச்சை குத்தியிருந்தார் என்று கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இதுதொடர்பான அடிப்படை உரிமை மீறல் வழக்கு உயர் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இந்த வழக்கில் நீதியரசர்கள் அனில் குணரத்ன, ஈவா வணசுந்தர, நளின் பெரேரா ஆகியோர் நேற்றுத் தீர்ப்பை அறிவித்தனர்.

பிரிட்டன் சுற்றுலாப் பயணி தனது உடலில் பச்சை குத்திக் கொள்வது அவரது அடிப்படைச் சுதந்திரம் என்றும், அவரை கைது செய்ததன் மூலம் அவரது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும், நீதியரசர்கள் தீர்ப்பளித்தனர். மனுதாரரான சுற்றுலாப் பயணிக்கு 5 லட்சம் ரூபா அரசு இழப்பீடாக வழங்கப்பட வேண்டும் என்றும், அவரைக் கைது செய்வதற்குப் பொறுப்பாக இருந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் தலா 50 ஆயிரம் ரூபா இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்த நீதியரசர்கள் குழாம், வழக்குச் செலவான 2 லட்சம் ரூபாவையும் அரசே செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டது. (5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி......

### வவுனியா...

தமது வழக்கை அநுராதபுரம் மேல் நீதிமன்றிலிருந்து வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றுவதற்கு சட்டமா அதிபருக்கு கட்டளையிடுமாறு அரசியல் கைதிகள் மூவர் சார்பில் கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றில் எழுத்தாணை மனு முன்வைக்கப்பட்டது. அந்த மனு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

"இந்த வழக்கில் சாட்சிகளாகப் பெயர் குறிக்கப்பட்டவர்களில் மூவர் முன்னாள் போராளிகள். அவர்களில் ஒருவர் கண்டி நாவலப்பிட்டியவில் வசிக்கின்றார். ஏனைய இருவரும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். கண்டியில் வசிப்பவர், வவுனியா மேல் நீதிமன்றில் சாட்சியமளிக்கத் தயார் என்று அறிவித்துள்ளார். வெளிநாடு சென்றுள்ளோரின் முடிவை அறிய முடியவில்லை" என்று சட்டமா அதிபரின் சார்பில் மன்றில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அவர்கள் இருவரின் முடிவை அறிவதற்காக மனு மீதான கட்டளையை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்று.

இறுதிக் கட்டப் போரின்போது, கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட இராணுவத்தினரைக் கொலை செய்ததாக, ம.சுலக்சன், க.தர்சன், இ.திருவருள் ஆகியோருக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றில் 2013ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

4 ஆண்டுகளாக வவுனியாவில் வழக்கு நடைபெற்று வந்த நிலையில், சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்து வழக்கு அநுராதபுரத்துக்கு திடீரென்று மாற்றப்பட்டது. இதனை எதிர்த்து தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (உ-5,8,26)

### ஆபத்தான...

டுள்ளது.

"கழிவுப் பொருள்கள் கடற்கரையில் கரையொதுங்குவதால் கடற்பரப்பை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். கடற்கரை முழுவதுமே குப்பைமேடாகக் காணப்படுகின்றது. கடல் வளம் பாதிப்படைகின்றது. மீன் இனம் அழிவடைகின்றது" என்கின்றனர் கடற்றொழிலாளர்கள்.

வடமராட்சியின் ஏனைய கடற்பரப்புக்களிலும் இவ்வாறான கழிவுப் பொருள்கள் கரையொதுங்குகின்றன. ஆயினும் இந்தக் கடற்கரையிலேயே அதிகமாகக் கரையொதுங்குகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது.

"இவ்வாறு மருத்துவக் கழிவுகள் கரையொதுங்குவது குறித்துஇதுவரை எமக்கு அறிவிக்கப்படவில்லை. எனினும் இது பற்றி ஆராயப்படும்" என வடமராட்சி நகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-26,21)

## சிலாவத்துறையால்
# சாள்ஸ் - ரிசாட் சபையில் மோதல்

கொழும்பு, நவ. 16
சிலாவத்துறையை நகரமாக்குதல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், அமைச்சர் ரிசாத் பதியுதீன் இருவருக்கும் இடையில் நாடாளுமன்றத்தில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதம் நேற்று நடைபெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் உரையாற்றினார்.

'வடக்கிலே போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மற்றும் ஏனைய பிரதேசங்கள் உள்வாங்காமல் சிலாவத்துறையை மாத்திரம் உள்வாங்குவதன் நோக்கம் என்ன ? சிலாவத்துறை அபிவிருத்திக்கென கைத்தொழில் வர்த்தக அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு கீழான நகர அபிவிருத்தி அமைச்சுக்கு மாற்றவேண்டும். நான் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை. அவர்களைக் காரணம் காட்டி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் அரசியல் உள்நோக்கம் இருக்கின்றது. அதனையே நான் எதிர்க்கின்றேன் ' என்று சாள்ஸ் குறிப்பிட்டார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினையை அமைச்சர் ரிசாத் பதியுதீன் எழுப்பினார்.

'சிலாவத்துறையில் வாழ்ந்த மக்கள் 1990 ஆம் ஆண்டு புலிகளால் வெளியேற்றப்பட்ட பின்னர் அந்த நகரம் காடாகியது. கடந்த 27 வருடங்களாக அந்த நகரத்தில் முஸ்லிம்கள் கால்பதிக்க எவருமே அனுமதிக்கவில்லை. அங்கிருந்த சுமார் 500 வீடுகள் முற்றாக அழிந்து போயிருந்தன. 22 பாடசாலைகளும், 24 பள்ளிவாசல்களும் தகர்த்தெறியப்பட்டன. பாதைகள் பயணம் செய்ய முடியாது காடாகின. இந்த நிலையில் சிலாவத்துறைப் பிரதேசத்தை நகரமாக்கும் முன்மொழிவை மேற்கொண்டதில் என்ன தவறு இருக்கின்றது.

வடக்கிலே 36 பிரதேச சபைகள் இருக்கின்றன. அவற்றில் சிலாவத்துறை அடங்கிய முசலி பிரதேசபை மாத்திரமே முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் முற்று முழுதாக இனவாதத்தையே கக்குகின்றார். அத்துடன் சிலாவத்துறை மாத்திரமன்றி தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழும் மன்னார் நகரத்தை நவீனமயப்படுத்தும் வகையில் கைத்தொழில் வர்த்தக அமைச்சின் கோரிக்கைக்கு அமைய வரவு - செலவுத்திட்டத்தில் முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன' - என்றார்.

சாள்ஸ் நிர்மலநாதன், அவ்வாறென்றால் போரினால் முழுமையாகப் பாதிப்படைந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு நகரத்தை மேம்படுத்துவதற்காக அல்லது நகரமயப்படுத்துவதற்காக ஏன் நிதி ஒதுக்கப்படவில்லை. சிலாவத்துறையை மட்டும் மையமாகக் கொள்வதேன். இதன் பின்னணி என்ன என்று மீண்டும் கேள்வி எழுப்பினார்.

மீண்டும் எழுந்த அமைச்சர் ரிசாத், அப்படியென்றால் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களையும் நகரமயமாக்கலில் உள்வாங்க வேண்டும் என்றும் அதற்கான நிதி ஒதுக்கீட்டினை நிதி அமைச்சு வழங்க வேண்டும் என்றும் நான் நிதி இராஜங்க அமைச்சரிடத்தில் இந்த சபையூடாக கோரிக்கை முன்வைக்கின்றேன் - என்றார்.

அந்த முன்மொழிவுக்கு தனது நன்றிகளைக் கூறிய சார்ள்ஸ் தனது உரையைத் தொடர்ந்தார். (5,31)

# இலங்கையில் மனித உரிமைகளை வேகமாக நிலைநாட்ட முடியாது

## ஐ.நா. மனித உரிமை அமர்வில் பிரதி அமைச்சர் ஹர்ச தெரிவிப்பு

ஜெனிவா, நவ. 16
இலங்கையில் மனித உரிமைகளை மீள் நிறுவ அரசு தொடர்ந்து முயற்சித்து வருகின்றது. இலங்கை போன்ற மக்களாட்சி நாட்டில் மனித உரிமைகளை வேகமாக மீள் நிறுவ முடியாது. இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் அமர்வின் பூகோள மீளாய்வுக் கூட்டத்தில் நேற்று உரையாற்றிய பிரதிய மைச்சர் ஹர்ச டி சில்வா மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சவால்கள் இல்லாத நாடுகளே இல்லை. எந்தவொரு நாட்டிலும் அந்த நாட்டுச் சட்டங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. முழுமையான அர்ப்பணிப்புடன் இயங்கினாலும் கூட மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதும் அதைப் பாதுகாப்பதும் ஒரே நாளில் நடந்துவிடக் கூடியது அல்ல.
மனித உரிமைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்த எமது முயற்சிகள் மீதான பன்னாட்டுச் சமூகத்தினது விமர்சனங்களை வரவேற்கிறோம். எமது செயற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடவும் நாம் தயாராக உள்ளோம். ஆனால், எமது இந்த முயற்சியை பன்னாட்டுத் தலையீடுகளின் மூலம் குழப்புவதற்குச் சில சக்திகள் இயங்குவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.
எனினும், மனித உரிமைகளை முழுமையாக நாட்டில் நடைமுறைப் படுத்துவதில் இலங்கை அரசு முழுமனதுடன் உழைக்கும் -என்றார். (5)



## மதுபோதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய சாரதிகளுக்குத் தண்டம்

சாவகச்சேரி, நவ. 15
மதுபோதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய இரு சாரதிகளுக்கு தலா 12 அயிரம் ரூபா வீதமும் மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் சாவகச்சேரி நீதிமன்றில் தண்டம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸாரால் போக்குவரத்து விதிமுறைகளை மீறி மதுபோதையில் வாகனம் செலுத்தினார்களெனத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 12 ஆயிரம் ரூபா வீதமும் மதுபோதையில் வாகனம் செலுத்திய மற்றொரு சாரதிக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் தண்டமாக விதித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## டெங்கு கட்டுப்பாட்டு பரிசோதனை நடவடிக்கை

சாவகச்சேரி, நவ. 16
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவினரால் சிறப்பு டெங்கு கட்டுப்பாட்டு பரிசோதனை நடவடிக்கைகள் இன்றும் நாளையும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று வரணிப் பொது சுகாதார பரிசோதகர் பிரிவிலும் நாளை மட்டுவில் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த 9, 10, 11 ஆகிய திகதிகளில் நடாத்தப்படவிருந்த டெங்கு பரிசோதனைகள் தொடர் மழை காரணமாக நிறுத்தப்பட்டன எனவும் அடுத்த வாரம் ஏனைய பகுதிகளில் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ள தெனவும் தெரிவிக்கப்பட்டது . (எ-9)

## க. பொ. த. சாதாரண தர மாணவர்களுக்கு இலவச பயிற்சிக் கருத்தரங்குகள்

சாவகச்சேரி, நவ. 16
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இலவச தொடர் மீட்டற் பயிற்சிக் கருத்தரங்குகளை நாளைமறுதினம் தொடக்கம் நடத்தவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.
முதன்மைப் பாடங்கள், தொகுதிப் பாடங்கள் தொடர்பான பயிற்சி வழிகாட்டல்கள் துறைசார் வல்லுநர்களால் நடத்தப் படவுள்ளன என கழகத் தலைவர் லயன் உ. சிசில் றெமிண்டஸ் தெரிவித்தார். முதலாவது மீட்டல் பயிற்சிக் கருத்தரங்காக நாளைமறுதினம் தமிழ் மொழிப் பாடத்துக்கான கருத்தரங்கு மீசாலை உயர்கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளதெனவும் அறிவித்துள்ளார். (எ-9)


## தமிழ் தினப் போட்டிகளில் சாதனைகள் படைத்தோருக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சிக் கல்வி வலய தமிழ் மொழிப் பிரிவினரால் வலய நிலைத் தமிழ் தினப் போட்டிகளில் சாதனைகள் படைத்தோருக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நாளைய தினம் பி.ப.2.00 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.
வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உப அதிபர் ச.லலீசன் கலந்து கொள்ளவுள்ளார்.
நிகழ்வில் தமிழ்த் தினப் போட்டிகளில் சாதனை படைத்து முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள், வலயப் பாடசாலைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியர்கள் மற்றும் தேசிய நிலையில் எழுத்தாக்கல் போட்டிகளில் பதக்கம் பெற்ற 3 மாணவர்கள் ஆகியோருக்கான மதிப்பளிப்பு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## இரண்டரை லட்சம் பனம் விதை நடுகை ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 16
பனை அபிவிருத்திச் சபை யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டரை லட்சம் பனம் விதைளை நடுகை செய்யும் பணியை ஆரம்பித்துள்ளது.
ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ஊடாகவும் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் இந்தப் பனம் விதைகள் நடுகை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சபை தெரிவித்துள்ளது.
இதற்காக உற்பத்தியாளர்களிடம் இருந்து பெருமளவு பனம் விதைகளை சபை கொள்வனவு செய்துள்ளது.
கடந்தகாலச் செய்கையில் குடாநாட்டில் பல ஆயிரக் கணக்கான பனைமரங்கள் அழிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளது.
இந்த நிலையில் சபையானது பனை வளத்தை அதிகரிக்கும் நோக்கில் வடக்கில் நீண்டகாலத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி அதனூடாக நடுகை செய்யப்படும் பனம் விதைகளை சிறந்த முறையில் பாதுகாத்துப் பராமரிக்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
குறிப்பாக வடக்கில் கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் இந்த முறை கூடுதலான பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன. (எ-17)

## ஏரிகள் மற்றும் நீர்த்தேக்கங்களில் வீச்சு வலை மீன்பிடி



யாழ்ப்பாணம்.நவ.16
யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்து தற்போது சற்று ஓய்ந்துள்ள நிலையில் நீர் ஏரிகள் மற்றும் பாலங்களின் நீர்த்தேக்கங்களில் வீச்சு வலை மீன்பிடியில் மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
நாட்டில் பல்வேறு பாகங்களிலும் கடந்த வாரங்களில் மழை பெய்தது. குறிப்பாக வடக்குமாகாணத்தில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியது. தொடர்ச்சியாக பெய்த மழையால் ஏரிகளில் நீர் நிரம்பி வழியாதவாறு வான் கதவுகளும் திறக்கப்பட்டன. இந்த நீர் தற்போது பாலங்களின் ஊடாக நீர்த்தேக்கங் களைச் சென்றடைகின்றது.
யாழ்ப்பாணத்தில் இந்தச் சிறிய அளவிலான நீர்த்தேக்கங்களில் மக்கள் வீச்சு வலை மூலம் மீன்பிடியில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. மாலை வேலையில் ஒரு குழுவாக சேர்ந்து இந்த மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். யப்பான் மீன் போன்ற சிறிய மீன்கள் இவர்களின் வலையில் அதிகமாக பிடிபடுகின்றது. பிடிக்கும் மீன்களை சிலர் தமது வீட்டு தேவைக்காவும், சிலர் அதனை தெரு ஓரத்தில் விற்பனை செய்வதையும் காணக்கூடியதாக உள்ளது. (எ-ரி)

முதலமைச்சரிடம் பரிசு பெற வந்து,

# துவிச்சக்கரவண்டியை பறிகொடுத்த பாடசாலை மாணவிக்கு புதிய வண்டி

யாழ்ப்பாணம்,நவ.16
முதலமைச்சரிடம் பரிசு பெறவந்தபோது தனது துவிச்சக்கரவண்டியைத் திருடர்களிடம் பறிகொடுத்த பாடசாலை மாணவி ஒருவருக்கு புதிய துவிச்சக்கரவண்டி ஒன்றை வடக்கு மாகாணசபை உறுப்பினர் சிவக்கொழுந்து அகிலதாஸ் கடந்த 5ஆம் திகதி வழங்கி வைத்தார்.
நெல்லியடி நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேசபை உள்ளூராட்சி வார நிகழ்வு (2017) நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு பரிசில் பெற்ற மாயக்கை அல்வாயைச் சேர்ந்த சின்னதம்பி வித்தியாலய மாணவி முருகானந்தம் சியாமினி என்பவரின் துவிச்சக்கர வண்டியைத் திருடர்கள் களவாடிச் சென்றிருந்தனர்.
ஐந்து அங்கத்தவர்களை கொண்ட குறித்த மாணவியின் குடும்பம் மிகவும் ஏழ்மையான குடும்பம் எனவும் புதிய துவிச்சக்கர வண்டியை வாங்கக்கூடிய நிலையில் குடும்பம் இல்லை எனவும் அந்தப் பாடசாலை அதிபர் மற்றும் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச செயலர், ஆகியோர் விடுத்த வேண்டுகோளின் பேரில் இந்தச் துவிச்சக்கர வண்டியை அந்த மாணவிக்கு மாகாணசபை உறுப்பினர் வழங்கி வைத்தார்.
இதேவேளை அண்மையில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் ஒருவரின் துவிச்சக்கர வண்டியும் களவாடப்பட்டது.
அவருக்கான புதிய துவிச்சக்கர வண்டியையும் வட க்கு மாகாணசபை உறுப்பினர் அகிலதாஸ் வழங்கி வைத்தார். (எ-21)



காரைநகரில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் பனை சார் பல்தொழில் தொகுப்பு உற்பத்தி நிலையக் கட்டடம் அண்மையில் சபையின் தலைவர் மருத்துவக் கலாநிதி ஆர்.சிவசங்கர், பொது முகாமையாளர் பா.சுதாகரன் மற்றும் பதவிநிலை முகாமையாளர்கள் என்போரால் திறந்து வைக்கப்பட்டது. (எ)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 | 80 |
| கத்தரி | 170 | 240 | 200 | 200 | 200 |
| மரவள்ளி | 70 | 50 | 50 | 50 | 50 |
| பயிற்றை | 170 | 240 | 300 | 300 | 160 |
| பாகல் | 240 | 320 | 350 | 300 | 260 |
| க.கிழங்கு | 80 | 80 | 60 | 100 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 130 | 120 | 130 | 180 |
| சி.வெங்காயம் | 300 | 240 | 250 | 280 | 240 |
| பூசணி | 70 | 80 | 50 | 70 | 50 |
| தக்காளி | 120 | 140 | 220 | 130 | 140 |
| வாழைக்காய் | 80 | 50 | 70 | 80 | 60 |
| கீரை | 80 | 50 | 40 | 20 | 40 |
| பொன்னாங்காணி | 50 | 30 | 40 | 30 | 40 |
| ப.மிளகாய் | 540 | 800 | 700 | 500 | 650 |
| புடோல் | 70 | 120 | 140 | 100 | 120 |
| கோவா | 120 | 160 | 120 | 140 | 140 |
| வெண்டி | 70 | 120 | 150 | 120 | 120 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 180 | 220 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 220 | 200 |
| தேங்காய் | 75 | 90 | 100 | 80 | 65 |
| உ.கிழங்கு | 90 | 80 | 100 | 80 | 180 |
| தேசிக்காய் | 80 | 100 | 150 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 25 | 15 | 20 |
| கறிமிளகாய் | 320 | 300 | 200 | 300 | 340 |
| கரட் | 120 | 200 | 200 | 140 | 220 |
| முருங்கைக்காய் | 100 | 240 | 400 | 100 | 240 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 780 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 500 | 300 |
| கணவாய் | 600 | 500 | 800 | 1000 |
| பாரை | 500 | 500 | 700 | 800 |
| சுறா | 400 | 700 | 1000 | – |
| சீலா | 300 | 400 | 400 | 500 |
| விளை | 500 | 400 | 250 | 600 |
| முரல் | 300 | 350 | 300 | 500 |
| கும்பிளா | 250 | 300 | 300 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 400 | – |
| ஓரா | 300 | 300 | 400 | 400 |
| திரளி | 200 | 200 | 200 | 100 |
| நகரை | 200 | 200 | 300 | – |
| சூடை | 100 | 120 | 120 | 200 |
| ஒட்டி | 150 | 200 | 300 | 400 |
| திருக்கை | 250 | 200 | 400 | 400 |
| மதனம் | 150 | 150 | 250 | – |
| கொய் | 100 | 100 | 50 | 100 |
| பாலை | 100 | 200 | 400 | 500 |
| வாளை | 100 | 150 | 300 | – |

# முல்லையில் 'சுனாமி' பதற்றம்

## பரப்பப்பட்ட வதந்தியால் பாதுகாப்பான இடங்களைத் தேடி விரைந்த மக்கள்



முல்லைத்தீவு, நவ. 16
நாட்டின் கரையோரப் பகுதிகளில் சுனாமி தாக்குமென பரப்பப்பட்ட வதந்தியால் முல்லைத்தீவில், நேற்றைய தினம் மக்கள் தமது இடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

நேற்றையதினம் 11.30 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி ஏற்படப் போவதாக பரவிய வதந்தி நாடு முழுவதும் காட்டுத் தீபோல் பரவியது. இதனை யடுத்து கரையோர பகுதிகளில் உள்ள மக்கள் பீதியடைந்து வீடுகளிலிருந்து வெளியேறினர்.

கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலையால் 3ஆயிரத்துக்கும் அதிகமான மக்களை இழந்தும் மிகப் பெரும் அழிவுகளைச் சந்தித்ததுமான முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இந்த வதந்தியின் காரணமாகத் தமது வீடுகளிலிருந்து முக்கியமான ஆவணங்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு பாதுகாப்பான இடங்களைத் தேடி வெளியேறினர்.

முல்லைத்தீவு நகரம், அளம்பில், செம்மலை, கொக்கிளாய், முள்ளிவாய்க் கால், புதுமாத்தளன் உள்ளிட்ட கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு இடம்பெயர்ந்தனர். பாடசாலைகளுக்குச் சென்ற தமது பிள்ளைகளை பெற்றோர் அங்கிருந்து இடையில் அழைத்துச் சென்றமையால் முல்லைத்தீவு மகா வித்தியாலயம், உள்ளிட்ட கரையோரப் பாடசாலை களும் இடையில் மூடப்பட்டன.

பொலிஸார் மக்களை வெளியேற வேண்டாம் என்று அறிவுறுத்தல்களை வழங்கிய போதிலும் மக்கள் பாதுகாப்பான பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-21-ரி3)

## கடும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொதி வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.16
கடும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கடந்த 11 ஆம் திகதி சனிக்கிழமை 500 சமைத்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுடன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தலங்காவில் பிள்ளையார் கோவில் செட்டியார் தோட்டம் மாரியம்மன் வீதி, பானங்குளம் ஆகிய பிரதேசங்களில் வாழும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வடக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதியின் அனுசரணையுடன் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட சிறிலங்கா சுதந்திர கட்சியின் அமைப்பாளர் கந்தசாமி கருணாகரனின் வழி நடத்தலில் நல்லூர் பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர், கிராம அலுவலர் முன்னிலையில் உணவு வழங்கப்பட்டது. (எ-50)



வவுனியா புளியங்குளம் மதியாமடு விவேகானந்த வித்தியாலயத்தின் ஜெகதாஸ் கிரிதாஸ் என்ற மாணவன் 'பன்மைத்துவத்திலும் ஒற்றுமையே தேசத்தின் பலம்' தலைப்பின் கீழ் இடம்பெற்ற சித்திரப் போட்டியில் கலந்து தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றார்

## வீதி விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் சிகிச்சை பயனின்றி சாவு

யாழ்ப்பாணம், நவ .16
வீதி விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த சிறுவன் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தில் ஐந்து சந்திப் பகுதியைச் சேர்ந்த முகமத் ரிசாத் (வயது -11) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் உள்ள குறித்த சிறுவன் வீட்டிலிருந்து கடைக்குச் சென்ற வேளை அந்த வழியே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிறுவனுக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேற்று அதிகாலை கொண்டுவரப்பட்ட நிலையில் குறித்த சிறுவன் நேற்று மதியம் பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இந்த இறப்பு தொடர்பான விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (எ-8-ரி1)

### பொல்லுகளினால் தாக்கி காயப்படுத்தியமைக்காக

## மாமனிடம் பகிரங்க மன்னிப்பு கோரிய மருமக்கள் மூவர்

சாவகச்சேரி, நவ 16
மாமனாரைப் பொல்லுகளினால் தாக்கிக் காயப்படுத்திய மருமக்கள் மூவர் சாவகச்சேரி நீதிமன்றில் அவரிடம் பகிரங்க மன்னிப்புக் கோரியதையடுத்து 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்குமாறு உத்தரவிடப்பட்டது.

வரணி குடமியன் பகுதியில் கடந்த ஆண்டு டிசம்பர் 12 ஆம் திகதி மாமனை மூன்று மருமக்கள் சேர்ந்து பொல்லால் தாக்கியுள்ளனர்.

காயமடைந்தவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் மூவரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மாமனிடம் மன்னிப்புக்கோருவதாககூறியதையடுத்து நீதிவான் உத்தரவின் பேரில் நீதிமன்றில் மாமனின் காலில் வீழந்து மன்னிப்புக் கோரினர். இதனையடுத்து பாதிக்கப்பட்ட மாமனுக்கு 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## பெண்ணின் கையைப் பிடித்து இழுத்தவர் விளக்கமறியலில்

தென்மராட்சி நவம். 16
கடமை முடிந்து வீடு திரும்பிய பெண்ணின் கையைப் பிடித்து இழுத்த நபரை காவலில் வைக்க உத்தரவிட்டார் சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான். இந்தச் சம்பவம் கைதடியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அலுவலகமொன்றில் கடமையாற்றும் 26 வயதுப் பெண் கடமை முடிந்து சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையில் சாலையில் நின்ற நபர் பெண்ணின் கையைப் பிடித்து இழுத்துள்ளார்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் குறித்த பெண் கொடுத்த முறைப்பாட்டையடுத்து குறித்த நபரை நேற்றுமுன்தினம் கைது செய்த பொலிஸார் இளம் பெண்ணை பாலியல் தொந்தரவுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு டன் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் நபரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## உற்பத்தி முதன்மைக் கிராமத்தின் முதலாவது கருத்தரங்கு கைதடியில்

தென்மராட்சி, நவ. 16
உற்பத்தி முதன்மைக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்ட கைதடி தெற்கு கிராம மக்களுக்கான முதலாவது கருத்தரங்கு நேற்றுமுன்தினம் கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கையை வறுமையற்ற நாடாக ஆக்கும் தேசிய இலக்கை எய்துவதற்கு ஆதரவளிக்கும் முகமாக கிராம சக்தி என்னும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேசத்தில் கைதடி தெற்கு கிராம அலுவலர் பிரிவு உற்பத்தி முதன்மைக் கிராமமாகவும் மந்துவில் தெற்கு மற்றும் வரணி வடக்கு ஆகியவை உச்ச வறுமை நிலையில் கிராம அலுவலர் பிரிவுகளாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதென பிரதேச செயலகத்தால் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பிரிவு கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், பிரதேச செயலக திட்டமிடல் அலகின் அலுவலர்களும் 150க்கு மேற்பட்ட பொது மக்களும் கலந்து கொண்டனர். வறுமை ஒழிப்பு ஆண்டாக இந்த வருடம் அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## வித்தியா படுகொலை வழக்கு: நிரபராதியின் விளக்கமறியல் நீடிப்பு

புங்குடுதீவு, நவ. 16

புங்குடுதீவு மாணவி படுகொலை வழக்கின் நிரபராதியின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டு உள்ளது.

மாணவி கொலை வழக்கில் முதலாவது சந்தேக நபராகக் கைது செய்யப்பட்ட பூபாலசிங்கம் இந்திரகுமார் ஊர்காவற்றுறை நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து ஊர்காவற்றுறைப் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரின் பெயரைக் கூறிக் கொலை அச்சுறுத்தல் விடுத்து இருந்தார்.

அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறைப் பொலிசார் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் குறித்த நீதிமன்றில் நீதவான் ஏ.எம்.எம்.றியாழ் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன் போது பொலிசார் குறித்த விசாரணை இன்னமும் முடிவடையவில்லை என.மன்றில் தெரிவித்தனர்.

அந்தவேளை சந்தேகநபர் எதிரிக்கூண்டில் நின்று "தான் செய்யாத குற்றத்துக்காக தொடர்ந்தும் சிறையில் இருக்கிறேன். என் பிள்ளைகளைக்கூடப் பார்க்க முடியவில்லை. சிறைக்குள் தொடர்ந்து இருப்பதனால் பைத்தியம் பிடிப்பது போன்று உள்ளது." என உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார். வழக்குத் தவணைக்கு வந்து போகும் போது அமைதியாக இருக்குமாறு நீதவான் கூறிய போதும் அதனைக் கேட்காது பேசியதாலையே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

மன்றில் இவ்வாறு உணர்ச்சி வசப்பட்டுப் பேசி, நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்து விசாரணைகள் முன்னெடுக்க வைக்க வேண்டாம் என எச்சரித்தார். அதனைத் தொடர்ந்து சந்தேகபரை எதிர்வரும் 21ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் அன்றைய திகதிக்கு வழக்கினை ஒத்திவைத்தார்.

(எ-21)

## மகளிர் விவகார அமைச்சுக்கு புதிய திணைக்களங்கள் நிறுவுவது தொடர்பில் நியதிச் சட்டம் விரைவில் சமர்ப்பிக்கப்படும்

யாழ்ப்பாணம்,நவ.16

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சுக்கு இரண்டு திணைக்களங்கள் நிறுவுதல் தொடர்பான நியதிச்சட்டம் விரைவில் அமைச்சர் சபைக்கு சமர்பிக்கப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என்று மாகாண மகளிர் விவகார அமைச்சு தெரிவித்தது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு என்பதற்கு அமைவாக மகளிர் விவகாரம் மற்றும் புனர்வாழ்வு விவகாரம் ஆகியவற்றின் செயல்பாட்டுக்கு அமைச்சில் தனியான திணைக்களங்கள் இல்லை. ஆகவே இந்த இரண்டு திணைக்களங்களையும் புதிதாக ஆரம்பிப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்கு முதன்மைச் செயலர் ஊடாக கொழும்பு அமைச்சுக்கு கோரிக்கை அனுப்பி வைக்கப்பட்டது.

திணைக்களங்கள் புதிதாக அமைக்கப்படும் போது அதன் நடவடிக்கை, அதன் சட்டம் மற்றும் திட்டங்கள் தொடர்பான கொள்கை அவசியமாகும். ஆகவே அதற்கான நியதிச்சட்டம் தயாரிக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. நியதிச்சட்டக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப சபையின் அனுமதி கிடைத்த பின்னர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அமைச்சின் கீழ் கூட்டுறவு, சமூக சேவைகள், தொழிற்துறை ஆகிய 3 திணைக்களங்கள் உள்ளன. மகளிர் விவகாரம் மற்றும் புனர்வாழ்வு சார்ந்த வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்குத் தனியான திணைக்களம் மற்றும் ஆளணி இல்லாமையினால் இவை சார்ந்த வேலைத்திட்டங்களைச் செய்வதற்காக அமைச்சின் கீழ் உள்ள ஏனைய 3 திணைக்களங்களை உள்வாங்கி வேலைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(எ-ரி)

## தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையினரால் அபகரிக்கப்பட்ட கரந்தாய் காணி விவகாரம்;

# முதலமைச்சர் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் எல்லோரும் வாய்ச்சொல்லில் மட்டுமே வீரர்கள்

## சாடினர் கிளிநொச்சி, கரந்தாய் மக்கள்



கிளிநொச்சி, நவ. 16

இங்குள்ள அரசியல்வாதிகள் அனைவரும் 'சுத்தவேஸ்ட்' எவராலும் எந்தப் பிரியோசனமும் இல்லை, வடக்கு மாகாண முதலமைச்சர் உட்பட அனைவரும் அப்படியே. வாய்ச்சொல்லில் மட்டும் தான் அவர்கள் வீரர்கள். செயலில் அல்ல. இவ்வாறு கிளிநொச்சி, பளை கரந்தாய் கிராம மக்கள் அங்கலாய்த்தனர்.

இது தொர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தாவது:

"எமது காணிகளை ஆக்கிரமித்த தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையினர் எங்களை அந்தக் காணிகளில் இருந்து பொலிஸாரின் உதவியுடன் அடாத்தாக வெளியேற்றினர்.

இது நடந்து 3 வருடங்கள் ஆகின்றது. அரசியல் தலைவர்களிடம் அடைக்கலம் புகுந்தோம். அவர்கள் மூலம் எமக்கு நல்ல செய்தி வரும் எப்படியும் எமது காணிகளுக்குச் செல்வோம் என்று இன்றும் நாம் உறவினர்களுடைய வீடுகளிலும் வாடகை வீடுகளிலும், கொட்டில்களிலும் காத்திருக்கின்றோம்.

எவராலும், எத்தனை கூட்டங்களாலும் எந்தப் பயனும் இல்லை. எமது காணிகளில் தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையினால் வைத்த தென்னங்கன்றுகள் தற்போது செழிப்பாக வளர்ந்துள்ளன. எமது காணிகளில் அவர்கள் நிரந்தரக் கட்டடம் அமைக்கின்றனர். இனினும்கூட அவர்கள் அங்கிருந்து செல்வார்கள் என்பதை நாம் சற்றேனும் நம்பவில்லை எல்லோரும் சேர்ந்து எம்மை ஏமாற்றிவிட்டனர். கிளிநொச்சிக்கு வந்த வீட்டுத் திட்டங்களி லெல்லாம் நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளோம் காணி இல்லாததே அதற்குக் காரணம். இப்போது நடுத்தெருவில் நிர்க்கதியற்று நிற்கின்றோம்" என்றனர்.

1976ஆம் ஆண்டு காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் கரந்தாய் மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டன. போரினால் அவர்கள் அங்கிருந்து வெளியேறினர். மீண்டும் 2015ஆம் ஆண்டு குடியமர்ந்தனர்.

அதன் பின்னரும் அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் 2016ஆம் ஆண்டு அங்கு வந்து தமது காணிகளில் கொட்டில்களை அமைத்துக் குடியிருந்தனர். அந்தக் காணிகள் தெங்கு உற்பத்தி சபையினரால் உரிமை கோரப்பட்டது. அத்துடன் தமக்கு சொந்தமான காணி எனத் தெரிவித்து அங்கு மீளக்குடியமர்ந்த 50 குடும்பங்களைச் சேர்ந்த மக்க களை பளை பொலிஸாரின் உதவியுடன் விரட்டியடித்த னர். தங்களுடைய காணிகளிலேயே அந்த மக்கள் அத்துமீறிக் குடியமர்ந்தனர் என தெங்குப் பயிர்ச் செய்கை சபையினரால் கிளிநொச்சி நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. விடயம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவுக்குக் கொண்டுவரப்பட்டது. காணி தொடர்பில் ஆராயப்பட்டன. காணி சீர்திருத்த ஆணையாளர் அது மக்களுடைய காணி தான் என்பதை ஆணித்தனமாக் கூறினார். தெங்குப் பயிர்ச்செய்கை சபையினருக்கு அந்தக் காணிகளில் இருந்து வெளியேற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கால அவகாசம் வழங்கியது. 5க்கும் மேற்பட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் இடம் பெற்றுள்ளன. அத்தனை கூட்டங்களிலும் இது தொடர்பில் கதைக்கப்படுகின்றன. இதுவரை எந்தத் தீர்வுகளும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. தெங்குப் பயிர்ச் செய்கைச் சபையினர் மக்களுடைய அந்தக் காணிகளில் தங்களுடைய ஆதிக்கத்தைத் தொடர்ந்தும் நிலைநிறுத்தி வருகின்றனர்.

(எ-21-6)

## 41 'ஜொனி' மிதிவெடிகள் மணலாற்றில் மீட்பு

முல்லைத்தீவு, நவ.16

முல்லைத்தீவு மணலாற்றுப் பகுதியில் விடுதலைப்புலிகளால் புதைத்து வைக்கப்பட்டது எனக் கூறப்படும் 41 ஜொனி மிதிவெடிகளும் அதன் வெடிப்பிகளும் சிறப்பு அதிரடிப்படையினரால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டன.

குறிப்பிட்ட பகுதியில் மிதிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன என இரகசியபொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து நீதிமன்ற உத்தரவைப் பெற்ற அதிரடிப்படையினர் அவற்றை மீட்டனர்.

நேற்று மாலை 5 மணியளவில் குறித்த இடம் இனங்காணப்பட்டுத் தோண்டப்பட்டது. இதன்போது 41 ஜொனி மதி வெடிகளும் அதற்கான வெடிப்பிகள் 19 ஆகியன கண்டெடுக்கப்பட்டுள்ளன என சிறப்பு அதிரடிப்படையினர் தெரிவித்தனர். வெடிபொருள் சட்டத்துக்கு அமைவாக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, பின்னர் மீளப்பெறப்பட்டு தகர்த்து அழிக்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

(எ-21-ரி3)

## மஹாகவியின் 'புதியதொரு வீடு' நாடகம் மீண்டும் மேடையேறுகின்றது

யாழப்பாணம், நவ. 16

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் மஹாகவியின் 'புதியதொரு வீடு' நாடகம் நாளை மறுதினம் சனிக்கிழமை இரண்டு காட்சிகளாக முற்பகல் 10.30 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இலக்கம் 286, முதன்மை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின், கலைத்தூது கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

1969 ஆம் ஆண்டு மஹாகவியினால் எழுதப்பட்ட மேற்படி நாடகம் முதன் முதலாக அ. தாசீசியசினால் 1971 ஆம் ஆண்டு கொழும்பில் மேடையேற்றப்பட்டது. அதன்பின் பல தடவைகள் பல நெறியாளர்களினால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டு வந்துள்ளது. திருமறைக் கலாமன்றத்தினாலும் பல தடவைகள் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்ட இந்த நாடகம் இறுதியாக கடந்த பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டது. தற்போது மீண்டும் மேடையேற்றப்படுகின்றது. கவிதை நாடகமாகிய இந்த நாடகம் மீனவக் கிராமமொன்றினை களமாகக் கொண்டு மீனவர்கள் எதிர்நோக்கும் வாழ்வின் சவால்களை வெளிப்படுத்துகின்றது. இந்த நாடகம் ஜீ.சி.ஈ. சாதாரண தரத்தில் நாடகமும் அரங்கியலும் பயிலும் மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்தில் பாடநூலாக உள்ளமை குறிப்பிடத் தக்கது.

(எ-21)

## போதைப்பொருள் வியாபார சூத்திரதாரியைக் கைது செய்ய பொலிஸாருக்கு ஒருவார காலக்கெடு

### யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் விதிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.16

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் சூத்திரதாரி ஒருவரைக் கைது செய்வதற்கு போதைப்பொருள் தடுப்புப்பொலிஸாருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் நேற்றுமுன்தினம் ஒருவார கால காலக்கெடு விதிக்கப்பட்டது.

கடந்த ஒக்ரோபர் மாதம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார்கள் எனத் தெரிவித்து கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களிடமிருந்து போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் நீதிமன்றில் கூறினர்.

எனினும் சந்தேகநபர்கள் தமது சட்டத்தரணியூடாக தங்களுக்கு போதைப்பொருள் பயன்படுத்தும் பழக்கம் உள்ளதாகவும், போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடும் யாழ்ப்பாண நகரத்தைச் சேர்ந்த நபரொருவரிடமே தாம் போதைப் பொருளை வாங்குவதாகவும், அந்த நபரே அலைபேசியில் தங்களை அழைத்ததாகவும் தாங்கள் அங்கு சென்ற சந்தர்ப்பத்தில் கொழும்பிலிருந்து வந்திருந்த உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் அந்த விடத்தில் இருந்ததாகவும் அவர் குறித்த போதைப்பொருள் வியாபாரியிடமிருந்து பெற்று தங்களுக்கெதிராக வழக்குகளை தாக்கல் செய்ததாகவும் தெரியப்படுத்தினர்.

அதனைத் தொடர்ந்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை வரவழைத்த நீதிவான் சி.சதீஸ்தரன் அவரை கடுமையாக எச்சரித்ததுடன் குறிப்பிட்ட போதைப்பொருள் வியாபாரியை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் கட்டளையிட்டிருந்தார். அத்துடன் கைது செய்யப்பட்ட இருவரையும் பதினான்கு நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

எனினும் பல வாரங்கள் கடந்தும் குறித்த நபர் பொலிஸாரால் நீதிமன்றில் முற்படுத்தப்படவில்லை.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டவேளையில் குறித்த உப பொலிஸ் பரிசோதகருக்கு ஒரு வார கால அவகாசம் வழங்கிய நீதிமன்றம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்குள் குறித்த போதைப் பொருள் வியாபாரியைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு கடுமையான உத்தரவு பிறப்பித்தது.

(எ-103)

# கர்ப்பவதிகளுக்கு வழங்கப்பட்ட காலாவதியாகும் திரிபோசா

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, நவ. 16
கிளிநொச்சியில் குழந்தைகளுக்கும், கர்ப்பவதிகளுக்கும் காலாவதியாகும் திரிபோசா வழங்கப்பட்டுள்ளது கிளிநொச்சியின் உருத்திரபுரம், சிவநகர், உதயநகர் போன்ற பல கிராமங்களில் காலாவதியாகும் தறுவாயில் இருந்த திரிபோசா பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று வழங்கப்பட்டுள்ள திரிபோசா பைக்கற்றுகளில் காலாவதித் திகதி நேற்றுவரை என்று காணப்பட்டது. இது குறித்து பெற்றோர்கள் மற்றும் கர்ப்பவதிகள் கேள்வி எழுப்பிய போதும் அவற்றை கவனத்தில் எடுக்காத



உத்தியோகத்தர்கள் இவை மட்டுமே இருப்பதாகவும் விரும்பினால் பெற்றுக்கொள்ளுங்கள் இல்லையெனில் விட்டுச் செல்லுங்கள் எனத் தெரிவித்தனர். வறுமை நிலையில் உள்ள பல குடும்பங்கள் வேறு வழியின்றி காலாவதியாகும் திரிபோசாவைப் பெற்றுச் சென்றனர்.

இந்தத் திரிபோசா பைக்கற்றுகள் குறைந்தது இரண்டு வாரங்களுக்கு வைத்துப் பயன்படுத்தப்படுவன.

எனவே இவ்வாறு வழங்கப்பட்டும் அதனால் எந்தவிதப் பலனும் இல்லை என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(எ-21-35)

# சின்ன வெங்காய விலை கிடுகிடு என எகிறுகிறது

## வடக்குச் சந்தைகளில் பெரும் தட்டுப்பாடும் நிலவுகிறது என மக்கள் கவலை

யாழ்ப்பாணம், நவ.16
வடக்கு மாகாணம் முழுவதும் சின்ன வெங்காயத்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் அது ஒரு கிலோ 300 ரூபாவை எட்டியுள்ளது. கிளிநொச்சியில் அறவே கிடையாது. சின்ன வெங்காயத்தைக் கண்ணில் காட்டினால் தங்கம் தருகின்றோம் என்கின்றனர் அந்தப் பகுதி வியாபாரிகள்.

'வடக்கு மக்களின் உணவுப் பாவனைகளில் சின்ன வெங்காயம் முதன்மையானது. உள்ளூரிலேயே, உள்ளூர் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் அந்த வெங்காயத்தில் தான் அதிக சுவையும், தரமும் உள்ளது. எனவே தான் அது மக்கள் மத்தியில் விருப்புப் பொருளாக மாற்றம் கண்டது.

இந்திய வெங்காயம், பாகிஸ்தான் வெங்காயம், தம்புள்ளை வெங்காயம், பம்பாய் வெங்காயம், வேதாளங்காய் என்பன வடக்குக்கு வரும் போதும், மக்கள் மத்தியில்சின்னவெங்காயத்துக்கு (உள்ளூர் வெங்காயம்) மவுசு மாறவில்லை. சந்தைகளில் மக்கள் அதையே கேட்டு வாங்குவர். அப்படிப்பட்ட வெங்காயம் இன்று அழிவடைந்து கண்ணிலேயே காணமுடியாத அளவுக்கு வந்துள்ளது' என வியாபாரிகள் கவலை தெரிவித்தனர்.

சின்ன வெங்காயம் இவ்வாறு நெருப்பு விலையைத் தொட்டது அதைக் கொள்வனவு செய்யும் மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தேங்காய் ஒன்று 100 ரூபாவாக விற்பனை செய்யப்படும் போது வெங்காயமும் 300 ரூபாவைத் தொட்டுள்ளது. இது பொருளாதாரத்தில் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. சராசரி1000 ரூபாய் உழைக்கும் ஒருவருடைய சீவியத்துக்கு இவற்றின் விலை உயர்வு தளர்வை ஏற்படுத்தியுள்ளது.

'சின்ன வெங்காயத்தைத் தான் நாம் பயன்படுத்துகின்றோம். வெங்காயம் இவ்வாறு நெருப்பு விலைக்கு விற்கப்படுகின்றபோதும் நாம் குறைந்த நிறையில் அவற்றைப் பெற்றுக் கொள்கின்றோம். உதாரணமாக 250 கிராம் வாங்கும் நாம் தற்போது 50, 100 கிராம் என்றே கொள்வனவு செய்கின்றோம். நாளை இந்த வெங்காயம் சந்தைகளில் இல்லாமல் போகலாம் அதற்காக ஒவ்வொரு நாளும் குறைந்தளவு தொகையைக் கொள்வனவு செய்கின்றோம்.' என யாழ்ப்பாணம் நவீன சந்தைக்கு நேற்று வந்த சிலர் தெரிவித்தனர்.

வெங்காயத்தின் உச்ச விலை தொடர்பில் பல்வேறு தரப்பிடம் உதயன் வினவினான்

சந்தை வியாபாரிகள் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

**மருதனார்மடம்**


'வேதாளங்காயும், சின்னக்காயும் என இரண்டு வகையில் கொள்வனவு செய்கின்றோம். வலிகிழக்கு, வலிமேற்கு, வலிதெற்கு ஆகிய இடங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் வெங்காயம் கொள்வனவு செய்யப்படுகிறது. சின்ன வெங்காயம் 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. மழையால் அது அழிவடைந்ததே இதற்குக் காரணம். வெங்காயத்தின் விளைச்சலும் இந்த முறை குறைவு' என்றனர்.

**நெல்லியடி**

'மழையால் வெங்காம் அழிவடைந்து போனதால் அது விற்பனைக்கு வருவதில்லை. இனி மார்கழிக்கு திரும்ப விதைத்தால் தான் மீண்டும் விற்பனைக்கு வரும். இங்கு சின்ன வெங்காயம் ரூபா 350 முதல் ரூபா 400 வரையில் விற்பனை செய்யப்படுகிறது. எனினும் 10 கிலோவுக்கு அதிகமாக வெங்காயம் இல்லை' என்றனர்.

**கிளிநொச்சி**

'மண்ணைவெட்டி விவசாயம் செய்வதற்கு ஆள் இல்லை என்பதால் இங்கு



சின்ன வெங்காயத்தின் உற்பத்தி இடம்பெறுவதில்லை. மகேந்திரா (பட்டா) வாகனங்கள் மூன்றில் தம்புள்ளையில் இருந்து சந்தைக்கு வெங்காயம் வருகிறது. 48 மரக்கறிக் கடைகள் இருந்தும் ஒரு கடையில் கூட வெங்காயம் இல்லை. சின்ன வெங்காயம் அழுகிய நிலையில் இருந்தாலும் மக்கள் கொள்வனவு செய்வதற்குத் தயாராக உள்ளனர். ஆனால் அது அறவே இல்லை.' என்றனர்.

**சுன்னாகம்**

'சுன்னாகம் சந்தைக்கு அதிகளவாக பாகிஸ்தான் வெங்காயங்கள் கிடைக்கப்பெறுகின்றன. இந்த வெங்காயம் ஒரு கிலோ 200 ரூபாவுக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது. இணுவில், மயிலங்காடு, ஏழாலை போன்ற பிரதேசங்களில் இருந்து ஊர் வெங்காயமானது (சின்ன வெங்காயம்) வருகிறது. 350 முதல் 400 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. இங்கு வியாபாரிகள் சிலர் தாங்களே தெரிவு செய்து அதன் விலையை அதிக விலையில் 500 ரூபாவாக விற்பனை செய்கின்றனர்' என அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

*வெங்காயத்தில் கலப்படம் சாவகச்சேரி சந்தை மேற்பார்வையாளர்*

'சாவகச்சேரிச் சந்தையில் இந்திய சிறிய ரக வெங்காயம் தாராளமாகக் கிடைக்கப் பெறுகின்றது. அந்த வெங்காயங்களை உள்ளூர் வெங்காயங்கத்துடன் கலந்து மக்களை ஏமாற்றி சின்ன வெங்காயம் என்று விற்பனை செய்கின்றனர். மக்களால் அதனைக் கண்டறிய முடியாத அளவுக்கு கலப்படம் இடம்பெறுகின்றது' என்றார்.

**எதனால் தட்டுப்பாடு**

'2016ஆம் ஆண்டு 71 ஆயிரத்து 493 மெற்றிக்தொன் சின்ன வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டது. 2017ஆம் ஆண்டு காலபோகம், சிறுபோகம் என 2 வகையாக உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. காலபோகத்தில் 2016 - 2017 வரை 2 ஆயிரத்து 418 ஏக்குயார் இலக்கு வைக்கப்பட்டது. ஆனால் 966 ஏக்குயாரே விவசாயி களால் பெறப்பட்டது. மழைவீழ்ச்சி சாதகமாக இருக்காததால் காலபோக உற்பத்தி கிடைக்கவில்லை. சிறுபோகத்துக்கு வெங்காயக் குமிழ்கள் பயிரிடப்பட்டன. 3 ஆயிரத்து 98 ஏக்குயார் இலக்கு வைக்கப்பட்டது. ஆயிரத்து 598 ஏக்குயாரே பெறக்கூடியதாக இருந்தது. வழமையை விடக் குறைவாகவே உற்பத்தி கிடைக்கப்பெற்றது. சின்ன வெங்காயம் என்ற பெயரில் விக்டோனியன் வெங்காயமானது தம்புள்ள, இந்தியாவில் இருந்து கிடைக்கப்பெறுகின்றது.

*இது குறித்து மாகாண உதவிப்பணிப்பாளர் சிவகுமார் தெரிவித்ததாவது:*

சின்னவெங்காயம் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டத்திலும் உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்திக் காலத்தில் யாழ்ப்பாண மாவட்டமே சந்தை விலையைத் தீர்மானிக்கின்றது. தற்போது குமிழ்களுக்குப் பதிலாக உண்மை விதைகளை நடுவதற்குத் தீர்மானித்து ள்ளோம். வெங்காயத்தின் தட்டுப்பாடை போக்குதற்கும் விதைப்பை அதிகரிப்பதற்கும் உண்மை விதையை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம்.'என்றார். (எ-21)

## மன்னார் மாவட்டத்தின், அபிவிருத்திப் பணிகள் எதன் அடிப்படையில் ரிசாத் பதியுதீன் அமைச்சின் கீழ் வழங்கப்பட்டது?

### கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் அரச தலைவரிடம் கேள்வி

மன்னார், நவ. 16
இடம்பெயர்ந்தவர்களிற்கான மீள்குடியேற்றம், மன்னார் மாவட்ட 'சொப்பிங் கொம்பிளக்ஸ்' மற்றும் மன்னார் பேருந்து நிலையங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் எதன் அடிப்படையில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் அமைச்சின் கீழ் ஒதுக்கப்பட்டதென நேரடியாக அரசதலைவரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ. சாள்ஸ் நிர்மலநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் மூன்று முக்கிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்தத் திட்டங்களுக்கு தொடர்புடைய அமைச்சுக்களிடம் வழங்காது பிறிதொரு அமைச்சரின் கீழ் உள்ள அமைச்சுக்களிடத்தில் குறித்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடு மன்னார் மாவட்டத்தில் வேண்டுமென்றே இன விரோதத்தை வளர்க்கும் செயலாகவே அமையும்.

அதாவது மீள்குடியேற்றப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். அதனை மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக அல்லது தேசிய நல்லிணக்க அமைச்சின் ஊடாக மேற்கொள்ள முடியும். அதே போன்று ஏனைய மாவட்டங்களில் "சொப்பிங் கொம்பிளக்ஸ்" கட்டும்போது அவை நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடாக அல்லது மாநகர அபிவிருத்தி அம்மச்சின் ஊடாகவே முன்னெ டுக்கப்பட்டது. ஆனால் மன்னாரில் மட்டும் அது எவ்வாறு கைத்தொழில் அமைச்சின் ஊடாக முன்னெடுக்க முடியும்.

இதேபோன்றே மன்னார் மாவட்டத்துக்கான பேருந்து நிலையமும் போக்குவரத்து அமைச்சின் ஊடாக அல்லது நகர அபிவிருத்தி அமைச்சின்ஊடாகமுன்னெடுக்கப்பட வேண்டும். மாறாக தொடர்புபடாத அமைச்சின் ஊடாக வழங்குவதன் மூலம் அபிவிருத்தி என்னும் பெயரில் மாவட்டத்தில் இன விரிசலை ஏற்படவே வாய்ப்பாக அமையும். எனவே அரசதலைவர் இது தொடர்பில் தலையிட்டு உடன் ஆவண செய்ய வேண்டும். ஏனெனில் குறித்த அமைச்சரின் மீது பல சர்ச்சைகள் நீடித்து வரும் நிலையில் அதற்கு அனுசரணை வழங்கும் வகையில் இவ்வாறு செயல்படுவதனை அனுமதிக்க முடியாது என்றார். (எ-101)

## போதிய ஆளணி இல்லாமையினால் பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது

### வடக்கு மாகாண விவசாய திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

யாழ்ப்பாணம், நவ. 16
வடக்கு மாகாண விவசாய திணைக்களத்துக்குப்போதிய ஆளணி இல்லாமையினால்பணிகளைமுடிப்பதில் பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என வடக்கு மாகாண விவசாய திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண விவசாய திணைக்களத்தில், விவசாய சேவை பதவிக்கு 22 பேர் பணியில் இருக்க வேண்டிய நிலையில் 5 பேர் மட்டுமே பணியாற்றி வருகின்றனர். மிகுதி 17 வெற்றிடங்களும் நிரப்பப்படாத நிலையில் காணப்படுகின்றன. விவசாயப் போதனாசிரியர் பதவியில் 161 பேர் இருக்கவேண்டிய இடத்தில் 109 பேர் மட்டுமே தற்போது கடமையில் உள்ளனர்.

தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியில் 140 பேர் இருக்க வேண்டிய இடத்தில் 29 பேர் மட்டும்தான் கடமையில் உள்ளனர் இவ்வாறு பதவி நிலைகளுக்கு அதிகளவான வெற்றிடங்கள் காணப்படுவதனால் பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த வெற்றிடங்களை முழுமை செய்து தரவேண்டும் என கோரியுள்ளனர்.

(எ-8)

## மூத்த பத்திரிகையாளர் கோபாலரத்தினம் மறைவு



யாழ்ப்பாணம், நவ. 16
கோபு என்றும், எஸ்.எம்.ஜி. என்றும் தமிழ்ப் பத்திரிகை உலகில் நன்கு அறியப்பட்ட தனக்கென தனிச் சிறப்பைக் கொண்ட பத்திரிகை ஆசிரியர், மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம் தமது 87 ஆவது வயதில் மட்டக்களப்பில் நேற்றுக் காலமானார். இவர் தமிழுக்காகவும், தமிழ்த் தேசியத்துக்காகவும் தன்னை அர்ப்பணித்த ஊடகப் போராளியாவார்.

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட கோபாலரத்தினம் 1950ஆம் ஆண்டுகளில் வீரகேசரியில் இணைந்து தனது பத்திரிகைத் தொழிலை ஆரம்பித்தார். அதன் பின்னர் 1956ஆம் ஆண்டுகளில் ஈழநாடு பத்திரிகையில் இணைந்து பின்னர் அந்தப் பத்திரிகையின் தலைமை ஆசிரியராக நீண்டகாலம் பணியாற்றினார். கோபாலரத்தினத்தின் காலத்திலேயே ஈழநாடு பத்திரிகை மக்கள் மத்தியில் பிரசித்தி பெற்றது.

1981ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தால் ஈழநாடு பத்திரிகை நிறுவனம் எரியூட்டப்பட்டபோது அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

அதன் பின்னர் ஈழமுரசு பத்திரிகையின் ஆசிரியராக இருந்தபோது இந்திய இராணுவத்தால் சிறைவைக்கப்பட்டார். அந்தச் சிறை அனுபவங்களைத் தொடராக எழுதினார். ஈழமண்ணில் ஓர் இந்திய சிறை என்ற அந்த நூலை கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் வெளியிட்டிருந்தது.

இவர் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த தினக்கதிர் தினசரிப் பத்திரிகையின் தலைமை ஆசிரியராகவும், பின்னர் ஆலோசகராகவும் கடமையாற்றினார்.

இலங்கையில் திறமைமிக்க பல பத்திரிகையாளர்களை, பல பத்திரிகை ஆசிரியர்களைச் செதுக்கிய பெருமை எஸ்.எம்.கோபாலரத்தினத்தையே சாரும்.

2000ஆம் ஆண்டின் பின்னர் மட்டக்களப்பில் தங்கியிருந்த அவர் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் ஆலோசகராக இருந்து அந்தச் சங்கத்தை வழிநடத்தினார்.

தமிழுக்காகவும், தமிழ்த் தேசியத்துக்காகவும் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்ட கோபாலரத்தினம் ஐயாவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், சமாதான காலத்தில் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தார்.

நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்த எஸ்.எம்.கோபாலரத்தினம் ஐயாவின் கைகள் இன்று ஓய்ந்து விட்டன. அன்னாரின் இழப்பு தமிழ்ப் பத்திரிகை உலகுக்குப் பேரிழப்பாகும். அவரின் ஆத்மா சாந்தி அடைய 'உதயன்' குழுமம் பிரார்த்திக்கின்றது. (5)

## ரூ.2.4 பில்லியன் இழப்பீடு கோரி அவன்ட் காட் நிறுவனம் மனு!

கொழும்பு, நவ. 16
இலங்கைக் கடற்படையினரிடம் 2.4 பில்லியன் ரூபா இழப்பீடு கோரி, அவன்ட் காட் நிறுவனத்தால், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இலங்கை அரசுக்குச் சொந்தமான ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனத்துடன் தாம் செய்துகொண்ட ஒப்பந்தம் 2015ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதியன்று இலங்கைக் கடற்படையினரால் மீறப்பட்டுள்ளதாகவும், அதற்கு இழப்பீடு கோரியுமே மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் திகதியன்று, ரக்ன லங்கா நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதா கவும் 2019ஆம் ஆண்டு ஜனவரி 13ஆம் திகதியே அந்த ஒப்பந்தம் காலாவதியாவதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பன்னாட்டுக் கடற்பரப்பில் பாதுகாப்பில் ஈடுபடுவது தொடர்பில் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதாகவும் கடற்படைத் தளபதியின் உத்தரவு என்று கூறி காலிக் கடற்பரப்பில் வைத்து, கடற்படையினர் அத்துமீறி தமது கப்பலைக் கைப்பற்றியதாகவும் அதனால் தமது நிறுவனம் இழப்பீட்டைச் சந்தித்துள்ளதாகவும் மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

தமது நிறுவனத்துக்கு 2.4 பில்லியன் ரூபா இழப்பீடு வழங்கவேண்டும் என்று கூறியுள்ள மனுதாரர்கள், சட்டமா அதிபர், முன்னாள் கடற்படைத் தளபதிகளான அட்மிரல் ஆர்.சி. விஜேகுணவர்தன, அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா ஆகியோரைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர். (5)

## வட – கிழக்கு இணைப்பை எதிர்ப்போர்

# தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல முஸ்லிம்களுக்கும் எதிரிகள்தான்

### ஹிஸ்புல்லாவுக்கு பதிலடி கொடுக்கிறார் சரவணபவன் எம்.பி.



கொழும்பு, நவ. 16
வடக்கு - கிழக்கு இணைந்தால் குருதி ஆறு ஓடும் எனக் கொக்கரிப்பவர்கள் நிச்சயமாகத் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல முஸ்லிம் மக்களுக்கும் விரோதிகள் தான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு இணைந்தால் குருதி ஆறு ஓடும் என்று இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா அரசமைப்பு நிர்ணய சபையில் உரையாற்றியிருந்தார். இதற்குப் பதிலடி கொடுத்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு- கிழக்கு தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய வாழிடம்என்பதில்இருவேறுபட்ட கருத்துகளுக்கு இடமில்லை. இலங்கையில் நாகர் இனத்தின் வழித்தோன்றல்கள் எனக் கூறப்படும் தமிழ் மக்கள் இந்த மண்ணில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதற்கொண்டு நாகரிகத்தில் முன்னேறிய ஒரு சமூகமாக வாழ்ந்து வந்துள்ளனர். அதேபோன்று கி.பி. மூன்றாம் நூற்றாண்டை அடுத்த காலப் பகுதியிலேயே முஸ்லிம் மக்கள் இங்கு வாழ்ந்ததும், வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டதும் வரலாற்று ஆதாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இரு இனங்களுக்குமிடையே இறுக்கமான பொருளாதார, கலாசார உறவு ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்களின் ஆடை அணிகள் முதற்கொண்டு அவர்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருள்கள் முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகளாலே நிறைவு செய்யப்பட்டன. அதேபோன்று முஸ்லிம்களுக்குத் தேவையான உணவுப்பொருள்கள் முதலியவற்றைத் தமிழ் மக்களே வழங்கினர். பொருளாதார அடிப்படையில் ஒருவரில் ஒருவர் தங்கி நிற்குமளவுக்கு ஒரு அன்னியோன்னியமான உறவு நிலவி வந்தது. முஸ்லிம்கள் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருந்தது மட்டுமன்றித் தமிழ்மொழிக்கு வளம் சேர்ப்பதில் பெரும் பங்காற்றி வந்துள்ளனர். முஸ்லிம்களின் பிரதான இலக்கியநூலாகிய சிறாப்புராணம் தமிழ் மொழிக் காவியங்களில் ஒன்றாகப் போற்றப்பட்டு வருகிறது.

அது மட்டுமின்றி மட்டக்களப்பு, மன்னார், புத்தளம் ஆகிய பகுதிகளில் சிறந்த தமிழ்ப் புலவர்களாகப் பல முஸ்லிம் பெரியார்கள் விளங்கிவந்துள்ளனர். சங்க காலத்தில் புகழ்பெற்று விளங்கிய ஈழத்துப் பூதந்தேவனார் என்ற புலவர்கூட மன்னாரைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் எனச் சில ஆதாரங்கள முன்வைக்கப்பட்டுள்ளன. இன்றும்கூட பல முஸ்லிம் கவிஞர்களும், எழுத்தாளர்களும் தமிழ் இலக்கியப் பரப்பில் பல ஒப்பற்ற சாதனைகளைச் செய்து வருகின்றனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாகச் சோலைக்கிளி என்ற முஸ்லிம் கவிஞர் பல உணர்ச்சிபூர்வமான கவிதைகளை வழங்கியுள்ளார்.

> “ தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றிணையும்போது எமது பலம் உருவாகிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களும், சிங்களப் பேரினவாத சக்திகளும் ஆண்டாண்டு காலமாக நிலைத்து வந்த ஐக்கியத்தைச் சிதைக்கப் பல்வேறு முயற்சிகளை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் செய்துவருகின்றனர். ஆளும் தரப்பினர் ஆளப்படும் மக்களைக் கூறுபோட்டுப் பலவீனப்படுத்தித் தங்கள் அடக்குமுறை நடவடிக்கைகளில் ஈடுபடுவது அப்படியொன்றும் அதிசயமல்ல. சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த சில முஸ்லிம் அரசியல்வாதிகள் இச்சதி நடவடிக்கைகளில் பங்காளிகளாக மாறுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. முஸ்லிம்களின் நலன்களுக்காக என்ற போர்வையில் தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் தொடர்ந்து அடக்குமுறையின் கீழ் வைத்திருப்பதற்குத் துணைபோவதையே சிலர் இப்போது மேற்கொண்டு வருகின்றனர்.

இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா வடக்கு- கிழக்கு இணைக்கப்படுமானால் இங்கு குருதி ஆறு ஓடுமெனத் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு இணைக்கப்படவேண்டும் என்பதும் அதில் முஸ்லிம்களுக்குத் தனியலகு வழங்கப்படவேண்டுமெனவும், முஸ்லிம் காங்கிரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கொள்கையளவில் ஏற்றுக் கொண்ட கோட்பாடாகும். முஸ்லிம் தங்கள் தனித்துவமான உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டு தமிழ் பேசும் மக்களாக தமிழர்களுடன் ஒன்றுபட்டு நாம் ஒன்றுபட்ட சக்தியாகப் பலம் பெற்று நிற்பதற்கான பாதையை இந்த வடக்கு- கிழக்கு இணைப்பு உருவாக்குகிறது.

இதை எதிர்ப்பவர்கள் முஸ்லிம்களின் நலனில் அக்கறை கொண்டவர்கள் என்பதை ஏற்றுக்கொள்ளமுடியுமா?

கடந்த ஆட்சிக் காலத்தில் இனவாதிகளால் பள்ளிவாசல்கள் தகர்க்கப்பட்டபோதும், அளுத்கம, தர்க்கா நகர்ப்பகுதிகளில் முஸ்லிம்களின் குருதி ஆறாக ஓடிய போதும், மகிந்தவின் நிழலில் நின்று தங்கள் குரல்களை அடக்கி வாசித்தார்கள். இன்று முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் ஒன்றுபடுவதை எதிர்த்து, முஸ்லிம் மக்களுக்கு ஒரு தனி அலகு உருவாவதைத்தடுக்கக்குருதி ஆற்றைத் திறந்து விடப் போகிறாராம்! விந்தைதான்! இன்றும் சில முஸ்லிம் அரசியல்வாதிகள் 1990இல் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதை சொல்லிச் சொல்லியே தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேகசப்புணர்வை ஏற்படுத்த முயன்று வருகின்றனர். அது ஒரு விரும்பத்தகாத சம்பவம் என்பதை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கின்றோம்.

அப்படி ஒரு சம்பவம் நடக்க மூலகாரணமாக இருந்தவர்கள் புலிகள் என்பதைவிட ஆட்சியாளர்களிடம் சோரம் போன அரசியல்வாதிகள் தான் என்பதை இங்கே ஆணித்தரமாக வெளிப்படுத்தவிரும்புகின்றேன்.

1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொக்கட்டிச்சோலை, வந்தாறுமூலை, சத்துருக்கொண்டான், புதுக்குடியிருப்பு, வீரமுனை, உடும்பன்குளம் உட்படக் கிழக்கில் பல பகுதிகளிலும் பல கிராமங்கள் சிறப்பு அதிரடிப்படையினராலும், முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் சுற்றிவளைக்கப்பட்டுப் பெரும் மனித வேட்டைநடத்தப்பட்டது. ஒவ்வொரு இடங்களிலும் நூற்றுக்கணக்கான மக்கள் நிலைகுலையாகக் கொல்லப்பட்டனர். இதில் முன்னணியில் நின்று செயற்பட்டவர்கள் முஸ்லிம் ஊர்காவல்படையினரே.

இது தமிழ் மக்கள் மத்தியில் கொதி நிலையை ஏற்படுத்தியது. முஸ்லிம் மக்கள் தாக்கப்படவும், அழிக்கப்படவுமான ஒருநிலை தோன்றியது. முஸ்லிம்களின் உயிரைப்பாதுகாக்கவும், ஒரு கலவரம் தோன்றிக் குருதி ஆறு ஓடுவதையும் தவிர்க்க விடுதலைப் புலிகளுக்கு வேறு வழியிருக்கவில்லை. அன்று கிழக்கில் தமிழ் மக்களின் குருதி ஆறாக ஓடுவதைத் தடுக்க எந்தவொரு முஸ்லிம் அரசியல்வாதியும் முன்வரவில்லை. ஆனால், வடக்கில் முஸ்லிம்களின் குருதி ஓடுவதைத் தவிர்க்கப் புலிகள் முஸ்லிம்களை வடக்கைவிட்டு வெளியேற்றினர். புலிகளின் நடவடிக்கைகளை மீண்டும் மீண்டும் சொல்லிச்சொல்லி தமிழ்மக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் ஏற்படுத்தி ஐக்கியத்தைச் சீர்குலைக்காதீர்கள்.

இப்படியான சீர்குலைவுச் சக்திகளுக்கு ஒரு முக்கிய விடயத்தை நினைவூட்ட விரும்புகிறோம். கடந்த மாகாண சபை இயங்கிய காலத்தில் முஸ்லிம் மாகாண சபை உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சி அமைத்தனர். அப்போது அவர்கள் அதிகார மற்றவர்களாகவே செயற்படவேண்டி இருந்தது. கொழும்பு அரசின் ஒரு குடையாகவே கிழக்கு மாகாண சபை இயங்கியது. இப்போது முஸ்லிம் காங்கிரஸ் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சி அமைத்த நிலையில் முதலமைச்சராக ஒரு முஸ்லிம் பதவி வகித்தார். அதுமட்டுமன்றி இரு தரப்பினரும் ஒன்றிணைந்து மாகாண சபையை உயிர்ப்புடன் இயக்க முடிந்தது. தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றிணையும்போது எமது பலம் உருவாகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்படியான நிலையில் வடக்கு - கிழக்கு இணைந்தால் குருதி ஆறு ஓடும் எனக் கொக்கரிப்பவர்கள் நிச்சயமாகத்தமிழ்மக்களுக்குமட்டுமல்ல முஸ்லிம் மக்களுக்கும் விரோதிகள் தான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். (5)

# எரிவாயு மின் உற்பத்தியை அதிகரிக்க அரசு திட்டம்

*பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா*



கொழும்பு, நவ. 16

மேல் மாகாணத்தில் டீசல் மற்றும் பெற்றோலால் மின் உற்பத்தியை மேற்கொள்ளும் மின் நிலையங்களில் எதிர்காலத்தில் இயற்கை எரி வாயு மூலம் மின் உற்பத்தியை மேற்கொள்ளும் திட்டம் குறித்து சிந்தித்து வருவதாக மின் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திகள் பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசும் ஆரசிங்க, நாடு எதிர்காலத்தில் பெரிய மின் தட்டுப்பாடொன்றை எதிர்கொள்ளவுள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களைச் சுற்றாடலுக்குப் பாதிப்பற்ற விதத்தில் எதிர்கொள்வதற்கு மின் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திகள் அமைச்சால் மேற்கொள்ளப்படும் மாற்று நடவடிக்கைகள் என்ன?, என்று நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: மேல் மாகாணத்தில் டீசல் மற்றும் பெற்றோல் மூலம் மின் உற்பத்தி செய்யும் பல நிலையங்கள் உள்ளன. அவை அனைத்துமே உரிய அனுமதிப் பத்திரங்களைப் பெற்று இந்த வருடத்துக்குள் புதுப்பிக்கப்படும். மாநகர அபிவிருத்தி என்பது சுற்றாடல் பாதுகாப்புடனேயே நடைபெறவேண்டும்.

இதனால் தொடர்ந்தும் எரிபொருள் மூலம் மின் உற்பத்திகளை மேற்கொள்வது உகந்ததல்ல. இயற்கை எரிவாயுக்கு மாறுவதே பொருத்தமானது. அதுவே சுற்றாடலுக்குப் பாதுகாப்பாக அமையும். நாட்டின் மின் உற்பத்தியை அதிகரிக்கவேண்டிய தேவையும் உள்ளது. நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்துக்கு அடுத்ததாகப் பெரிய மின் உற்பத்தி நிலையம் கெரவலப்பிட்டியில் நிர்மாணிக்கப்படவுள்ளது. அது 300 மெகாவோட்ஸ் மின் உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும் - என்றார். (5)

**காணி விற்பனைக்கு**

கைதடி தெற்கு, வைரவர் கோயிலுக்கு அருகில் 15 பரப்பு மேட்டுக்காணி உடன் விற்பனைக்கு உண்டு.

021 223 0791/ 077 114 7395

# விடுதலைப் புலிகளின் காலத்தில் இல்லாத இந்திய மீனவர் அத்துமீறல் இப்போது ஏன்?

## கடற்படை என்ன செய்கின்றது கேள்வி எழுப்புகிறார் சிவமோகன் எம்.பி.



கொழும்பு, நவ. 16

வடக்குக் கடற்பரப்பில் பல நூறு இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடரும் நிலையில் கடற்படையினர் நடவடிக்கைகளை எடுக்காதிருப்பது ஏன்? என்று கேள்வி எழுப்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவமோகன் விடுதலைப் புலிகளின் காலத்தில் இத்தகைய அத்துமீறல்கள் இருக்கவில்லையென்றும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 2018ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் மீதான நான்காம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: வடக்கில் கடலை நம்பி தொழில் செய்யும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் உள்ளன. அண்மைக் காலமாக இந்திய மீனவர்களின் வருகை அதிகமாகவுள்ளது. இவ்வாறு வருகை தருபவர்கள் அள்ளுவலை மூலம் எமது கடல் வளத்தை எடுத்துச் செல்வதால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்துவதற்கான முழுமையான பொறுப்பும் கடற்படையினரிடமே உள்ளது. அவர்களிடத்தில் இந்த விடயத்தினை கேட்கும்போது ஒருவர் இருவர் வந்தால் தடுக்க முடியும். பலநூறு பேர் வருகை தருகின்றபோது என்ன செய்வது என்று தெரியாதுள்ளதாகக் கூறுகின்றனர்.

அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தக்கடற்படையினர் நடவடிக்கையெடுக்காதிருப்பதேன்? அவர்களே இலங்கைக் கடல்வளங்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பைக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அதிலிருந்து விலக முடியாது.

> போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பிரதேசத்தில் வட்டுவாகலில் மீன்பிடித் தொழிற்பயிற்சி நிலையமொன்றை அமைப்பதற்கு நாம் கோரிக்கை விடுத்து அதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளபோதும் அந்த காணியை கடற்படையினர் கையகப்படுத்தி வைத்திருக்கின்றனர்.

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் நாயாறில் காலநிலை மாற்றத்தின் பிரகாரம் தொழிலில் ஈடுபம் வகையில் 36சிங்கள மீனவக் குடும்பங்களுக்கு நாம் அனுமதியளித்திருந்தோம். அவர்களின் குடும்பங்கள் விருத்தியடைந்து 72ஆகிவிட்டன என்றார்கள். தற்போது 500இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கு குடியேறி சட்டவிரோதமான முறையில் வெடிவைத்தல், ஒளியூட்டல் முறைகளில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இது குறித்து நாம் பலதடவைகள் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களில் தீர்மானங்களை எடுத்து அறிவித்துள்ளபோதும் அது குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நாட்டில் ஏன் ஒரு குழுவினருக்கு மட்டும் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அதேநேரம் ஏனைய பெரும்பான்மை இனக்குழுவினருக்கு சட்டங்கள் வளைந்துகொடுக்கின்றன.

போரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பிரதேசத்தில் வட்டுவாகலில் மீன்பிடித் தொழிற்பயிற்சி நிலையமொன்றை அமைப்பதற்கு நாம் கோரிக்கை விடுத்து அதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளபோதும் அந்தக் காணியைக் கடற்படையினர் கையகப்படுத்தி வைத்திருக்கின்றனர். அவர்களை அந்தப் பகுதியிலிருந்து அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

தென்னை, பனை மரங்களிலிருந்து கள் இறக்குவதற்கான வரி விதிப்பு குறித்த வர்த்தமானி அறிவித்தலொன்று அண்மையில் வெளியிடப்பட்டது.

அதுகுறித்து நாம் விளக்கங்களைக் கோரினோம். அதன்போது வர்த்தமானி அறிவித்தல் தவறாகப் பிரசுரமாகிவிட்டது என்றே காரணம் கூறினார்கள். தற்போதுவரையில் அதனை திருத்தும் வகையிலான புதிய வர்த்தமானியொன்று வெளியிடப்படவில்லை. அவ்வாறான வர்த்தமானியொன்று விரைவாக வெளியிடப்பட்டு இந்த சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது. அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் - என்றார். (5.31)

එක්සත් ජාතික පක්ෂය
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY





**யாழ். மாவட்ட வாக்காளப் பெருமக்களே !**

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் (மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை) ஐ.தே.க சார்பாக போட்டியிட புதிய தேர்தல் திருத்தச் சட்டத்திற்கு அமைய ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் கட்சித்தலைவர் கௌரவ பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களின் வழிகாட்டலில், பொதுச்செயலாளர் கௌரவ அமைச்சர் கபீர் ஹசீம் மற்றும் கௌரவ அமைச்சர் D.M. சுவாமிநாதன் அவர்களின் ஆலோசனைக்கு அமைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தயவு செய்து கீழ்காணும் முகவரியில் அமைந்துள்ள கட்சி காரியாலயத்திற்கு 21.11.2017 இற்கு முன் தங்களது முழு விவரங்களுடன் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரில் சமர்ப்பிக்க விரும்பின் காலை 9.00 முதல் மாலை 5.00 மணிக்கிடையில் சமர்ப்பிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:
1. முன்பு விண்ணப்பித்திருப்பின் தயவு செய்து மீண்டும் விண்ணப்பிக்கவும்
2. மேலும் தொகுதி அமைப்பாளர்களை நியமிப்பதற்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நா.விஷ்ணுகாந்தன் (சட்டத்தரணி)
யாழ் மாவட்ட முகாமையாளர்
ஜக்கிய தேசியக் கட்சி கிளைக் காரியாலயம்.
கிராம கோட்டடி, பருத்தித்துறை வீதி,
புலோலி.
0777672188
nvishnukanthan@yahoo.com
14.11.2017

**வட மாகாணத்தில் இயங்கும் சுத்திகரிப்பு சேவை வழங்கும் நிறுவனங்களுக்கான விசேட கலந்துரையாடல்**

இடம் : யாழ் வணிகர்கழகம் ஒன்று கூடல் மாநாட்டு மண்டபம் 165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
காலம் : 20.11.2017 திங்கள் பிற்பகல் 2.00 மணி
சகல நிறுவன உரிமையாளர்கள் அல்லது நிறுவனத்தின் பிரதிநிதிகள் தவறாது சமுகம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

T.P 077 844 8081 ஒருங்கமைப்பாளர்.

செவ்வாய்க்கிழமை
NIYATHA JAYA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 617 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 14.11.2017
வெற்றி இலக்கங்கள் 15 29 31 55 O
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 13,334,704/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

கோடிபதி சனிதா
KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 215
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 14.11.2017
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 75,000,000/-
C 01 62 69 77
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 76
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2017.11.14
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 50,934,325/-
வெற்றி இலக்கங்கள் 17 45 60 69 E
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

# பெற்றோல் தட்டுப்பாட்டுக்கு அதிகாரிகளே காரணம்

## அமைச்சர்கள் குழுவின் அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 16

அண்மையில் ஏற்பட்ட பெற்றோல் தட்டுப்பாட்டுக்கு, பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளே காரணம் என்று, மூன்று அமைச்சர்களைக் கொண்ட விசாரணைக் குழு தெரிவித்துள்ளது.

பெற்றோல் தட்டுப்பாடு குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க, அமைச்சர்கள் சம்பிக்க ரணவக்க, சரத் அமுனுகம, அனுர பிரியதர்சன யாப்பா ஆகியோரைக் கொண்ட குழுவை அரச தலைவர் மைத்திரிபால நியமித்திருந்தார்.

இந்தக் குழு தமது அறிக்கையை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முன்தினம் கையளித்துள்ளது.

இந்த அறிக்கையிலேயே, பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கு, வழக்கமாகப் பேணப்படும் எரிபொருள் கையிருப்பைப் பேணவில்லை என்றும், நெருக்கடி ஏற்படப் போவதை அவர்கள் அறிந்திருந்தார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க, சராசரி நாள் ஒன்றில், இலங்கையில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிபொருளை கையிருப்பில் வைத்திருக்கும் வசதிகள் உள்ள போதிலும், நாளொன்றுக்கு சராசரியாக 2 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிபொருளே தேவைப்படுகிறது.

நெருக்கடி வரவுள்ளதை யாரும் உயர்மட்டத்துக்கு தெரியப்படுத்தவில்லை. நெருக்கடி ஏற்படப் போவது, ஒக்ரோபர் 17ஆம் திகதியே பலர் அறிந்திருந்தனர். அதனை எவரும் நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தவில்லை. இது ஒரு சதித் திட்டமாக இருக்கலாம் என்ற சந்தேகங்களை நிராகரிப்பதற்கில்லை.

இந்த நெருக்கடிக்குக் காரணமான குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டறிய பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும்.

நான் 100 நாள் திட்டத்தில், அமைச்சராக இருந்த போது, எமது எரிபொருள் கையிருப்பு அளவை 60ஆயிரம் மெட்ரிக் தொன்னில் இருந்து 90 ஆயிரம் மெட்ரிக் தொன்னாக அதிகரிக்கப்பட்டது.

லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம், 15 ஆயிரம் தொன் எரிபொருளைச் சேமிக்கும் வசதி கொண்டது. மேலதிகமாக 8 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிபொருளை சேமிக்கும் வசதிகளும் உள்ளன - என்றார். (5)

# பெற்றோல் தட்டுப்பாடு குறித்து சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவு!

கொழும்பு, நவ. 16

அண்மையில் ஏற்பட்ட பெற்றோல் தட்டுப்பாடு தொடர்பில், குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் (சி.ஐ.டி) விசார்ணைக்கு, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க உத்தரவிட்டுள்ளார்.

பெற்றோல் நெருக்கடி தொடர்பில் விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட, அமைச்சரவைச் செயற்குழுவின் விசாரணை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே, இந்த விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து இந்த அறிக்கை, மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது. அறிக்கையில் பெற்றோல் தட்டுப்பாட்டுக்கு, அதிகாரிகளே காரணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விடயத்தை முழுமையாக விசாரிப்பதற்காகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் விடயம் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

எரிபொருளுக்கான கொள்முதல் கட்டளையை வழங்கிய பின்னர், நாட்டுக்கு அந்தக் கப்பல் வருவதற்கு, 21 நாள்கள் தேவைப்படும். சில நிலமைகளில், குறைந்தது 62 ஆயிரம் தொடக்கம் 65 ஆயிரம் மெட்ரிக் தொன் பெற்றோல், இந்தக் காலத்தில் கையிருப்பில் இருந்திருக்க வேண்டுமெனக் குறிப்பிடப் பட்டுள்ளது. இதனை அதிகாரிகள் அறிந்திருந்தும் உயர் மட்டத்துக்கு தெரியப்படுத்தாமை தொடர்பிலும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுப்பர் என்று தெரிவிக்கப் படுகின்றது. (5)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி இலட்சுமிப்பிள்ளை தம்பு

மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை தம்பு 14.11.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கயிலாயர் தம்புவின் (இளைப்பாறிய அதிபர்) அன்பு மனைவியும் கணேசானந்தன், முருகானந்தன், ஆனந்தேஸ்வரி, மாலினிதேவி, விஜயானந்தன், ஜெயானந்தன், உமாராணி, சிறிதேவி காலஞ்சென்றவர்களான ஆனந்தராசா, உமாதேவன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2017) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்களுக்காக மிருசுவில் வடக்கு பெரியான் ஒடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மிருசுவில் வடக்கு,**
**மிருசுவில்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0779035557**



பிறப்பு 17 . 09 . 1954

இறப்பு 13 . 11 . 2017

### கிருஸ்ணபிள்ளை சித்திரவேலாயுதம்

அராலியைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை சித்திரவேலாயுதம் 13.11.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - அம்பியபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தளையசிங்கம் மற்றும் நவமணி தம்பதியரின் மருமகனும் அசோகமலரின் அன்புக் கணவரும் நடராசா காலஞ்சென்ற துரையப்பா மற்றும் செல்வராசா காலஞ்சென்ற மாணிக்கராசா மற்றும் பாக்கியவதி காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2017) வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நவாலி வடக்கு,**
**மானிப்பாய்.**

**தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**0765316210**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கஜனி சுபேந்திரன் (சுட்டி)

(தலைவர் மற்றும் ஸ்தாபக உறுப்பினர் யா/இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - பிரித்தானியக் கிளை)



யாழ் கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் லண்டன் Clayhall ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி கஜனி சுபேந்திரன் 13.11.2017 திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் (முன்னாள் யாழ் இந்துக்கல்லூரி விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்). - தனலக்சுமி (முன்னாள் யாழ் போதனா வைத்தியசாலை தாதிமார் விரிவுரையாளர்) தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான யாழ் நீராவியடி பிறவுண் வீதியைச் சேர்ந்த செந்திவேல் - சந்திரமணி தம்பதிகளின் அன்பு மருமகளும் சுபேந்திரன் (பழைய மாணவர் - யா/இந்துக்கல்லூரி) இன் ஆசை மனைவியும் கஜன், சுஜீபா ஆகியோரின் பாசமிகு தாயாரும் கஜேந்திரன்(பழைய மாணவர் யாழ் இந்துக் கல்லூரி), கௌசலா, வத்சலா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிராளினி, டானியல் ஜெயராஜா, சிறீரவிந்திரா, சுரேந்திரன், றனேந்திரா, துஸ்யந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆரணி, அபர்னா ஆகியோரின் ஆசை மாமியும் அபிராமி, தானியா, கணிஸ்கன் ஆகியோரின் அருமைச் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.11.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் Manor Park எனும் இடத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: கணவர்(பிரித்தானியா)**

**தொடர்பு: +442085509153**



### நல்லதம்பி நல்லராசா (ஆனந்தன்)

கல்லுவம் கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி நல்லராசா (ஆனந்தன்) 14.11.2017 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - அ[illegible]கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - தங்கமுத்து தம்பதியரின் அன்புமருமகனும் பாக்கியலட்சுமி (பாக்கியம்)யின் அன்புக்கணவரும் நவநீதா (லண்டன்), நவராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ராஜ்குமார் (குமார் லண்டன்), தயாபினி (தயா - கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் றக்சிதா, ஜேருஷா ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினேஸ்வரி, நல்லலிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் இராசலிங்கம் (கனடா), கிருஷ்ணலிங்கம், குலசேகரம் (கனடா), லகுநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் அன்னலட்சுமி, சற்குணராசா சரோஜினிதேவி, செல்வலக்சுமி தர்மராசா காலஞ்சென்ற பரமநாதன், சந்தானலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (16.11.2017) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை உப்புவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கல்லுவம் கரணவாய் மேற்கு,**
**கரவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# முஸ்லிம்களை வடக்கில் குடியேற்ற நிதி ஒதுக்கியமையை வரவேற்கின்றேன்

## இராஜாங்க அமைச்சர் பௌசி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 16
"வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் களின் மீள் குடியேற்றத் துக்காக வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமையை வரவேற்கின்றேன்" இவ்வாறு தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க இராஜாங்க அமைச்சர் பௌசி தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில், வரவு -செலவுத் திட்ட நான்காம் நாள் விவாதத்தில் நேற்று முன்தினம் உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஒரு நாடு பொருளாதார ரீதியில் வெற்றியடைய வேண்டுமானால் அந்த நாட்டில் உள்ள இனங்களுக்கிடையில் ஒற்றுமையும் நல்லிணக்கமும் ஏற்படவேண்டும். அந்த நாட்டில் உள்ள அனைத்து இனங்களுக்கும் ஒரு கொடியின் கீழ் இலங்கையர்கள் என்ற மனநிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

2018ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட மானது கடந்த காலத்தைப் போன்றல்லாது முற்றிலும் மாறுபட்டதாகவுள்ளது. கடந்த காலத்தில் விடப்பட்ட பல தவறுகள் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் சீர்செய்யப்பட்டுள்ளன. இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரவு - செலவுத் திட்டத்திலும் கவனம் செலுத்தப்பட்டு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளமையானது வரவேற்கத்தக்கதாகும்.
வடக்கு-கிழக்கு மக்களுக்காக 50 ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடி யேற்றத்தை மையமாகக் கொண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவை அனைத்தும் வரவேற்கப்பட வேண்டியவை. அந்த முன்மொழிவுகள் தாமதமின்றி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.
நாட்டில் இருந்த எந்தவொரு நிதியமைச்சரும் சகல தரப்பினரையும் திருப்திப்படுத்தும் வகையிலான வரவு - செலவுத் திட்டத்தை முன்மொழிந்திருக்கவில்லை. முதல் தடவையாக அனைத்து தரப்பினரையும் சமத்துவமாகக் கருதி முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன. இதுவொரு சமத்துவமான வரவு - செலவுத் திட்டமாகும்- என்றார்.
(5.31)

# தனியார்துறை பலமடைந்தாலேயே பொருளாதார வளர்ச்சி சாத்தியம்

## நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 16
பொருளாதார அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்க வேண்டுமானால் அரசதுறையைப் போன்று தனியார் துறையையும் பலப் படுத்த வேண்டும்.
இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில், வரவு- செலவுத் திட்டம் மீதான நான்காம் நாள் விவாதம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மலைநாட்டிலும், கிராமப் புறங்களிலும் வாழும் 20 வீதமான மக்கள் இன்னமும் வறுமைக் கோட்டுக்குக் கீழேயே வாழ்கின்றனர். 17 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமே தமது பொருளாதார நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்கின்றனர். நாட்டின் வட்டிவீதம் 20 வீதம் வரை அதிகரித்துள்ளமையால் பின்தங்கிய பொருளாதார நிலையிலேயே நாம் உள்ளோம். ஆண்டொன்றுக்கு 20 வீதமான அரச வருமானத்தை ஈட்ட முடியா விடின் அரசதுறையை முகாமைத்துவம் செய்வது கடினமானதாகும். 1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரச வருமானம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டே வந்துள்ளது. கடந்த ஆட்சியில் (மகிந்த ஆட்சியில்) பெரிய அளவில் அரச வருமானம் வீழ்ச்சி கண்டிருந்தது. 2015ஆம் ஆண்டுமுதல் ஓரளவு வளர்ச்சியைக் காட்டியுள்ளது. உலகிலும், ஆசியப் பிராந்தியத்திலும் பொருளாதார ரீதியில் சக்திமயமடைந்த நாடுகள் அனைத்தும் விவசாயத்துறைக்கு முன்னுரிமை கொடுத்த நாடுகளாகும். கடந்த காலத்தில் நாம் விவசாய நடவடிக்கைகளுக்கு அதிகளவான முக்கியத்துவம் கொடுத்திருக்கவில்லை. மூன்று தசாப்த காலப் போரும் எமது பொருளாதாரத்தைப் பாதித்திருந்தது. நாட்டில் ஏற்பட்ட மூன்று களேபரங்களால் இரண்டரை லட்சம் மக்கள் இறந்தனர். 3 மில்லியனுக்கு அதிகமான மக்கள் நாட்டை விட்டு வெளியேறியிருந்தனர். மனித வள வீழ்ச்சியும், இடம்பெயர்வும் விவசாயத் துறையைப் பெரிதும் பாதித்திருந்தன. அரசதுறையை மாத்திரம் பலப்படுத்திப் பொருளாதார அபிவிருத்தியை அடைந்துவிட முடியாது. தனி யார் துறைக்குச் சம அளவிலான முக்கியத்துவத்தைக் கொடுத்தால் மாத்திரமே அபிவிருத்தியை நோக்கி நகர முடியும். சிங்கப்பூரில் மேற்கொண்ட பொருளாதார மறுசீரமைப்புகளை நாம் படிப்பினையாக எடுத்துக்கொள்ள வேண்டும். இலங்கையில் முதலீடுகளுக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் தடையாகவுள்ள சட்டதிட்டங்களை மாற்றியமைக்க வேண்டும். முப்பது வருட காலப் போரால் பின்னடைவைச் சந்தித்திருந்த நாம் முன்னோக் கிப் பயணிப்பதற்கு அரச துறை போன்று தனியார் துறையையும் பலப்படுத்த வேண்டும் - என்றார். (5)


## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி யசியானா மரியசந்திரகுமார்
அவர்களின் அன்புக் கணவர்
**ஞா. மரியசந்திரகுமாரின்**
45 ஆம் நாள் நினைவையொட்டி
அன்னாரின் ஆன்ம
இளைப்பாற்றிற்காக இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரிக்கழகம்.
யா/ கொழும்புத்துறை சென்.ஜோசப்ஸ் வித்தியாலயம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 03 . 1931
மறைவு 16 . 11 . 2016

**அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம்**
திதி : அபரபக்க திருதியை
அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம் அவர்களின்
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
கனடா.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 30 . 07 . 1966
மறைவு 03 . 10 . 2017

அமரர்
**ஞானமுத்து மரியசந்திரகுமார்**
"விசுவாசிகளுக்கு வாழ்வு மாறுபடுவதேயன்றி
அழிக்கப்படுவதில்லை"
இரக்கமுள்ள இறைவா உம்பாதம் அழைத்துக்கொண்ட
உமது அடியான் மேல் கருணை கூர்ந்து
நித்தியவான் வீட்டில் சேர்த்துக் கொள்ள
உம்மை மன்றாடுகின்றோம்.
இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (16.11.2017)
வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் புனித
ஆசிர்வாதப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி
ஒப்புக்கொடுக்கப்படும்.
60, ஆசிர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



நினைவோடு மண்ணில் 17 . 05 . 1963
பிரிவோடு விண்ணில் 18 . 10 . 2017

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் உக்குளாங்குளம், வவுனியாவை
வசிப்பிடமாகவும் கொண்ட
**மனுவேல்பிள்ளை கிறிஸ்ரியோசப்**
(சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் (C.D.O) - பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம், மன்னார்)
"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னிடம் நம்பிக்கை
கொள்பவர் இறப்பினும் வாழ்வார் " (யோவான் 11: 25)



கண்ணிமைக்கும் பொழுதிலே
காலன் உம்மைக் கவர்ந்தானோ ? நீர்
கால்வைத்த இடமெல்லாம் உம் நினைவு தோன்றிடுதே !
கலங்கி நிற்கின்றோம், கதறி அழுகின்றோம்

அன்னாரின் மறைவுச் செய்தி கேள்வியுற்றதும் நேரில் வந்தும் தொலைபேசி வாயிலாகவும் தங்களுடைய துயர்களைப் பகிர்ந்து கொண்ட உள்ளூர் உறவுகள், வெளிநாட்டு உறவுகள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தங்கள் இதய அஞ்சலிகளையும் பிரசுரங்களாகவும், பதாகைகளாகவும் வெளிப்படுத்தியவர்களுக்கும் செய்தி கேட்டதிலிருந்து தங்கள் அன்பை உணவாகப் பரிமாறிய உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாக நன்றிகள்.
அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிற்காக வேண்டி நாளை (17.11.2017) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் இரங்கல் திருப்பலியில் பங்கேற்று இவருக்காக வேண்டிக் கொள்வதுடன் அன்று மதியம் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் (YMHA) நடைபெறும் மதிய போசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
இல. 137, கனறா கொன்வென்ற் லேன்,
உக்குளாங்குளம்,
வவுனியா.
குடும்பத்தினர்.
077 974 7636

# சந்தைக்குக் கட்டடம் வேண்டி கிளிநொச்சியில் ஊர்வலம்

கிளிநொச்சி, நவ.16

நிரந்தரக் கட்டடம் அமைத்துத் தர வேண்டும் என்று கோரி கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள் நேற்று ஊர்வலம் நடத்தினர்.

சந்தை வளாகத்திலிருந்து ஆரம்பமான ஊர்வலம் மாவட்டச் செயலகம் வரை சென்றது. மாவட்டச் செயலரிடம் கோரிக்கை அடங்கிய மனுக் கையளிக்கப்பட்டது.

"கிளிநொச்சி சந்தைக்கு 2011 ஆம் ஆண்டு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு 274 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. நூறு மில்லியன் ரூபாவில் மீன் மரக்கறி கடைகளுக்கு நிரந்தர கட்டடம் அமைக்கப்பட்டது.

ஏனைய வியாபாரத் துறைகளுக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதில் கரைச்சி பிரதேச சபையின் நிர்வாகத்துக்கும் அதிகாரிகளுக்கும் இடையே காணப்பட்ட அதிகார இழுபறி காரணமாக மீண்டும் திறைசேரிக்கு நிதி திருப்பி அனுப்பட்டது.

தற்காலிகமாக இயங்கிய கடைகள் கடந்த ஆண்டு ஏற்பட்ட தீயால் எரிந்து அழிந்தன. எமக்கான நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு மீள்குடியேற்ற அமைச்சால் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் முதற்கட்டமாக 80 மில்லியன் ரூபா மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்



பட்டது. மிகுதி 70 மில்லியன் 2018 இல் ஒதுக்கீடு செய்து தரப்படும் என்ற உத்திரவாதமும் அளிக்கப்பட்டிருந்தது.

எங்களால் ஏற்கனவே தங்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட வியாபார நிலையங்களுக்கான கட்டடங்களை அமைத்துத் தர வேண்டும் என்பதே எங்களின் கோரிக்கை." என்று சந்தை வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்டச் செயலர் வர்த்தகர்களின் கோரிக்கையைத் தான் அமைச்சின் செயலாளருக்கு அனுப்புகிறேன் எனத் தெரிவித்தார். (ற-ரி5)

# யானைகளின் அட்டகாசத்தால் தென்னந்தோப்புக்கள் நாசம்

வவுனியா,நவ.16

வவுனியா ஓமந்தை, புதிய வேலர் சின்னக்குளம் கிராமத்தினுள் புகுந்த யானைகள் தாக்குதலில் தற்காலிக வீடு சேதமடைந்தது. சுமார் 30 தென்னை மரங்கள் முழுமையாக அழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

பல இடங்களில் வன ஜீவராசிகள் திணைக்களத்தால் யானை வேலி அமைக்கப்பட்ட போதிலும் இன்றும் பல கிராமங்கள் யானையின் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றது. புதிய வேலர் சின்னக்குளம் கிராமத்தினுள் வந்த யானைக்கூட்டமொன்று அங்கிருந்த தென்னந்தோப்புக்குள் புகுந்து காய்க்கும் பருவத்தில் இருந்த தென்னை மரங்களை அழித்துள்ளதுன என்றும் பயன்தரு மரங்களையும் சேதப்படுத்தியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

தேங்காயின் விலையேற்றம் அதிகமாகியுள்ள நிலையில் தென்னை மரங்களையானை அழிப்பது தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டதுடன் தமது கிராமத்துக்கு வரும் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். (ற-ரி5)

# ஆலயத்தில் உண்டியல் உடைத்துக் கொள்ளை

திருகோணமலை, நவ.16

திருகோணமலை, தம்பலகாமம் துர்க்கைஅம்மன்ஆலயத்தில் உண்டியல் உடைக்கப்பட்டு கணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரால் தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

ஆலயத்தில் ஆறு மாதங்களுக்கு மேலாக உண்டியலிலுள்ள பணம் எடுக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டு வந்தது எனவும் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளைத் தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)



# நீரிழிவு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம்

மட்டக்களப்பு,நவ.16

நீரிழிவு தினத்தை முன்னிட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று வாழைச்சேனையில் இடம்பெற்றது.

இந்த ஊர்வலத்தில் வாழைச்சேனை ஆதார மருத்துவமனை மருத்துவர் எப்.பி.[illegible]தன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு ஊர்வலம் மருத்துவமனையில் இருந்து ஆரம்பமாகி வாழைச்சேனை மட்டக்களப்பு பிரதான வீதி வழியாக சென்று மீண்டும் மருத்துவமனையை சென்றடைந்தது.

பொதுமக்களுக்கு நீரிழிவு நோய் தாக்கம் மற்றும் நோயை குணப்படுத்தும் வழிமுறைகள் தொடர்பான வீதி நாடகம் மருத்துவர்களால் உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்டதுடன், நோய் தொடர்பாக விழிப்புணர்வு பதாதைகளும் காட்சிப்படுத்தப்பட்டது.

மருத்துவர்கள், மருத்துவமனை உத்தியோகத்தர்கள், வாழைச்சேனை இந்துக்கல்லூரி மற்றும் ஓட்டமாவடி மத்திய கல்லூரி மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ரி5)

# குளவிகள் கொட்டியதில் 11 பேர் காயம்

நுவரெலியா,நவ.16

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரிட்வில் தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகிய 11 பேர் லிந்துலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

தேயிலை மலையில் கொழுந்து பறித்துகொண்டிருந்தவர்களே நேற்றுக் ளவி கொட்டுக்கு இலக்காகினர்.

பாதிக்கப்பட்டவர்களில் 10 பெண்களும் ஒரு ஆணும் சிகிச்சை பெற்றுவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

# அபிவிருத்திச் சங்கத்தின் கட்டடத்துக்கு அடிக்கல்

மட்டக்களப்பு, நவ.16

வாழைச்சேனை தமிழ் கிராம அபிவிருத்திச் சங்க பொதுக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

சங்க செயலாளர் எஸ்.சதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வாழைச்சேனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சிவநேசராஜா முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.



வாழைச்சேனை பிரதேச செயலகத்தால் சேவாபியச திட்டத்தின் கீழ் 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் மூலம் பொதுக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)



# தகவல் அறியும் உரிமை தெளிவூட்டும் மாநாடு

மட்டக்களப்பு,நவ.16

தகவல் அறியும் உரிமை, மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் பொதுமக்களுக்குத் தெளிவூட்டும் மாநாடு நேற்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இந்த மாநாடு மட்டக்களப்பு கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் மாநாட்டு மண்டபத்தில் மாற்றுக் கொள்கைக்கான அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

மாற்றுக் கொள்கை நிலையத்தின் மூத்த ஆய்வாளர் லயனல் குருகேயின் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் மூத்த சட்டத்தரணி எஸ். ஜீ.புஞ்சிஹேவா கலந்து கொண்டு கருத்துக்களையும், விளக்கங்களையும் வழங்கினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் அங்கத்தவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ரி5)

# விபத்தில் மாணவன் காயம்

வவுனியா, நவ.16

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனைக்கு முன்பாக நேற்று மதியம் நடந்த விபத்தில் மாணவன் ஒருவர் காயமடைந்தார்.

வவுனியா மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து பாடசாலை மாணவனை ஏற்றிக்கொண்டு வவுனியா நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மீது வவுனியாவிலிருந்து கண்டி வீதி நோக்கி பயணித்த கார் மோதியது என்று கூறப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மாணவனே காயமடைந்து வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற)



# திருகோணமலையில் கண்டன ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, நவ.16

திருகோணமலை தமிழ் இளைஞர்கள் மற்றும் இராவண சேனை அமைப்புகள் இணைந்து, மெய்கெய்சர் விளையாட்டரங்கத்துக்கு முன்பாகவுள்ள டொக்கியாட் வீதியில் நேற்றுக் கண்டன ஆர்ப்பம் நடத்தினர்.

திருகோணமலை இந்துக் கல்லூரியில் அண்மையில் நடந்ததாகக் கருதப்படும் சம்பவமொன்றை திரிபுபடுத்தி, பாடசாலையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் இனவாத ரீதியாக நடந்துகொண்ட அரசியல்வாதிகளைக் கண்டித்தும், அங்காங்கே முன்னெடுக்கப்படும் இனவாதம், மதவாதம் என்பவற்றைக் கண்டிக்கும் வகையிலும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)





## கரும்புகை காரணமாக பூமிக்குப் பெரும் ஆபத்து

வொஷிங்டன், நவ. 16
அதிகரித்துவரும் பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்களால் ஏற்படும் கரும் புகை காரணமாக பூமிக்கு பெரும் ஆபத்து ஏற்படும் என விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.
காற்று மண்டலத்தில் ஏற்கனவே அதிகளவில் இருந்த மாசு அளவு தற்போது எப்போதும் இல்லாத அளவு அதிகரித்துள்ளது. இதற்கு பூமியில் அதிகரித்து வரும் மக்கள் தொகை பெருக்கமும், அவர்களால் பயன்படுத்தப்படும் பெற்றோல், டீசல் போன்ற எரி பொருள்களால் ஏற்படும் கரும் புகையும் காரணமாகச் சொல்லப்படுகிறது. இந்த நிலை நீடித்தால் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு பெரும் ஆபத்து ஏற்படும் என்று 184 நாடுகளைச் சேர்ந்த 15ஆயிரம் விஞ்ஞானிகள் கடிதம் மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.
'மனித குலத்துக்கான எச்சரிக்கை' என்ற தலைப்பில் 'பயோ சயின்ஸ்' அறிவியல் நாளிதழில், விஞ்ஞானிகளின் கூட்டறிக்கை பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்த எச்சரிக்கை மனித குலத்துக்கு விடுக்கப்பட்ட இரண்டாவது எச்சரிக்கை என வர்ணிக்கப்பட்டுள்ளது. கடந்த 1992ஆம் ஆண்டு அதாவது 25 ஆண்டுகளுக்கு முன்பு முதன் முறையாக இது போன்ற எச்சரிக்கை விடப்பட்டது. அப்போது ஆயிரத்து 700 விஞ்ஞானிகள் கையெழுத்திட்ட கடிதம் வெளியிடப்பட்டது. (ம)



அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஆசியாவுக்கு நீண்ட சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த நிலையில், தனது பயணத்தை முடித்துக்கொண்டு அவர் நேற்றுமுன்தினம் அமெரிக்கா திரும்பினார். இந்தச் சுற்றுப் பயணத்தில் ட்ரம்ப், தென்கொரியா, ஜப்பான், சீனா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தென்கொரியாவில் நிலநடுக்கம்

தென்கொரியாவின் தென்கிழக்கு பகுதியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது.
ரிச்டர் அளவுகோலில் இந்த நிலநடுக்கம் 5.5 அலகுகளாகப் பதிவானது என்று தென்கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்த நிலநடுக்கம் தென்கிழக்குக் கரையோரமாக இருக்கும் போஹாங் நகரிலிருந்து சுமார் ஆறு கிலோமீற்றர் தூரத்தில் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. நிலநடுக்கம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்ற இடத்திலிருந்து 300 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் தென்கொரியாவின் தலைநகர் சியோலிலும் நில அதிர்வு உணரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)




## சிம்பாப்வேயில் ஆட்சியைக் கை

### அதிபர் முகாபே சிறைப்பிடிப்பு

ஹராரே, நவ. 16
சிம்பாப்வேயின் தலைநகர் ஹராரே, இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் நேற்றுக் கொண்டுவரப்பட்டது. இதையடுத்து இந்த நாட்டில் இராணுவப் புரட்சி ஏற்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஆபிரிக்க நாடான சிம்பாப்வேயில் ரொபேர்ட் முகாபே 1980ஆம் ஆண்டிலிருந்து அதிபராக உள்ளார். உப அதிபரான எமர்சன் ஆட்சியைக் கைப்பற்ற முயல்கிறார் என்று குற்றஞ்சாட்டி அண்மையில் அவரைப் பதவி நீக்கம் செய்தார் முகாபே. சிம்பாப்வேயின் தலைநகர் ஹராரேயில் நேற்று அதிகாலை முதல் (அந்தநாட்டு நேரத்தின்படி) இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.
ஊடகங்கள், நீதிமன்றங்கள், நாடாளுமன்றம், முக்கிய அரச அலுவலகங்கள் என்பவற்றை படிப்படியாக தனது கட்டுப்பாட்டுக்குள் இராணுவம் கொண்டு வந்ததையடுத்து அங்கு இராணுவ ஆட்சி ஏற்பட்டுள்ளது. இதை 'குருதி சிந்தாப் புரட்சி' என்று இராணுவத் தரப்பு குறிப்பிட்டுள்ளது. (ம)

### ரொஹிங்யர்கள் விவகாரம் தொடர்பில்

## சூகி - குத்தேரஸ் முக்கிய சந்திப்பு




வொஷிங்டன், நவ. 16
ரொஹிங்ய அகதிகளின் விவகாரம் தொடர்பில் மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சாங் சூகிக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குத்தேரஸுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.
பௌத்த நாடான மியன்மாரில் ரொஹிங்ய இஸ்லாமியர்கள் சிறுபான்மையினராக உள்ளனர். இவர்கள் ரக்கினே மாகாணத்தில் வாழ்கின்றனர். அவர்களை மியன்மார் அரசு இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்று குற்றம் சுமத்தப்படுகிறது.
கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ரொஹிங்ய ஆயுதக் குழுவுக்கும், மியன்மார் அரச படைக்கும் இடையே கடும் மோதல் வெடித்தது. இதையடுத்து மியன்மாரில் அப்பாவி ரொஹிங்ய இஸ்லாமியர்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர். சுமார் 6 லட்சம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷுக்குச் சென்று தஞ்சமடைந்துள்ளனர். தற்போதும் நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான ரொஹிங்யர்கள் மியன்மார் நோக்கிச் சென்றவண்ணம் உள்ளனர். இந்த விவகாரத்தில் மியன்மார் அரசுக்கு எதிரான நகர்வுகளை உலக தொண்டு நிறுவனங்கள் கடைப்பிடித்து வருகின்றன. அளவுக்கு அதிகமான அகதிகளின் வருகையால் அவர்களுக்கு உணவளிக்க முடியாமல் பங்களாதேஷ் திண்டாடுகிறது.
பங்களாதேஷ் அரசின் பிரதிநிதிகளுக்கும் மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சாங் சூகிக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் "ரொஹிங்ய மக்களை மியன்மாருக்குத் திரும்ப அழைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது" என்று ஆங் சாங் சூகி தெரிவித்தார். எனினும் பங்களாதேஷுக்குச் செல்லும் ரொஹிங்யர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்தே உள்ளது. இந்தப் பின்னணியில் சூகி - குத்தேரஸ் இடையிலான சந்திப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதப்படுகிறது.
'ரக்கினே மாநிலத்தில் உள்ள மக்களுக்கு மனிதநேய அடிப்படையிலான உதவிகள் சென்று சேருவதை உறுதிப்படுத்த வேண்டும். ரொஹிங்ய மக்கள் பாதுகாப்பாகவும், கண்ணியத்துடனும் வாழ்வதற்கான வழிவகைகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டும் என ஆங் சாங் சூகியிடம் அந்தோனியோ குத்தேரஸ் வலியுறுத்தினார்' என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## சிரியாவில் 61 பொதுமக்கள் துயரச்சா

டமஸ்கஸ், நவ. 16
சிரியாவின் அட்டாரெப் நகரில் சிரிய இராணுவத்தால் நடத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் வான் வழித்தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 61ஆக அதிகரித்தது.
துருக்கி எல்லையையொட்டி சிரியாவின் அட்டாரெப் நகரம் உள்ளது. இந்த மாகாணத்தின் சில பகுதிகள் சிரிய அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவின் பிடியில் உள்ளன. அவ்வாறு கிளர்ச்சிக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள இடத்தில் கடந்த திங்கட்கிழமை வா
நடத்தப்பட்டது.
29 பேர் உயிரிழந்தனர் என்று முதல்கட்டமா
நிலையில், இந்த எண்ணிக்கை 61ஆக அதிகரித்
சிரிய இராணுவத்தால் நடத்தப்பட்டதா அல்லது
பட்டதா என்று உறுதிப்படுத்தப்படவில்லை. எனி
நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்

# கைப்பற்றியது இராணுவம்





மியன்மாரில் ரொஹிங்யர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்படும் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் சூகி ரொஹிங்யர்களுக்கு எதிரான வன்முறைகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள போதிலும் அவை தொடர்ந்தும் இடம்பெறுகின்றன என்பது தொடர்பிலான ஆதாரங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)

## ஈரான் நிலநடுக்கத்தில் உயிரிழப்பு 550ஆக அதிகரிப்பு

பக்தாத், நவ. 16

ஈரானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 550ஆக அதிகரித்தது.

7.2ரிச்டர் அளவில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் ஈரான், ஈராக் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள சுலைமானியா, ஹலாப்ஜா, சர்பொல் ஏஜகாப் உள்ளிட்ட நகரங்களே மிகையாகப் பாதிக்கப்பட்டன. கட்டட இடிபாடுகள் மிகையாக ஏற்பட்டுள்ளன. சுமார் 450 பேர் உயிரிழந்தனர் என்று நேற்றுமுன்தினம் நண்பகல் வெளியான தகவல்கள் தெரிவித்தன. இந்த நிலையில் நேற்று மாலை வெளியான தகவலின் அடிப்படையில் உயிரிழப்பு எண்ணிக்கை 550ஆக அதிகரித்தது. காயமடைந்த 9 ஆயிரம் பேரில் பலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. ஹலாப்ஜா நகரில் பாதிப்பு மிகையாக உள்ளதால் அங்கு அவசர நிலமை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் அதிபர் ரவுஹானி நிலநடுக்கம் ஏற்பட்ட இடங்களை நேரில்சென்று ஆய்வு நடத்தினார். "அதிகம் சேதமடைந்த கட்டடங்களின் உறுதித்தன்மை பரிசோதிக்கப்பட்டு, தரங்குறைவான கட்டங்கள் என்று அடையாளம் காணப்பட்டால் அவற்றைக் கட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். சேதமடைந்த வீடுகளை அரசு மீண்டும் கட்டித்தரும். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்படும்" என்று அவர் தெரிவித்தார். இந்த ஆண்டில் நடைபெற்ற இயற்கை இடர் சம்பவங்களில் இதுவே மிகவும் சோகமான பதிவு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## விளையாட்டின் ஒருபகுதியாக யோகா

### சவூதி அங்கீகாரம்

ரியாத், நவ. 16

சவூதி அரேபிய அரசு யோகாவை ஏற்றுக்கொள்ளாமல் ஒதுக்கி வந்த நிலையில் விளையாட்டின் ஒரு பகுதியாக யோகா அங்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் தலைமை அமைச்சராக நரேந்திர மோடி பதவியேற்ற பின்னர் அன்று முதல் யோகாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி வருகிறார். பன்னாட்டு யோகா தினம் கொண்டாட வேண்டும் என ஐ.நா. சபைக்கு கோரிக்கை விடுத்தார். மோடியின் கோரிக்கையை ஏற்று ஜூன் 21ஆம் திகதி உலக யோகா தினமாக அறிவிக்கப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக உலக யோகா தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எனினும் சில நாடுகள் யோகாவை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தன. அவற்றில் சவூதியும் ஒன்று. இந்த நிலையில் சவூதி அரேபியா விளையாட்டின் ஒரு பகுதியாக யோகாவை அங்கீகரித்துள்ளது. (ம)



## மன்னர் சல்மான் பதவி விலகல்?

சவூதி அரேபிய மன்னர் சல்மான் விரைவில் பதவியில் இருந்து விலகுவார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

சவூதியில் மன்னர் சல்மான் (வயது81) தலைமையில் ஆட்சி நடைபெறுகிறது. அவரது மகன் முகமது (வயது32) பட்டத்து இளவரசராக உள்ளார். மன்னருக்கு எதிராகச் செயற்பட்ட அரச குடும்பத்து இளவரசர்கள் 11 பேர் அண்மையில் ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர். அரசுக்கு எதிராக கருத்துகளைக் கூறிவந்த இளவரசர் மிக்ரின் உலங்கு வானூர்தி விபத்தில் உயிரிழந்தார்.

இந்த நிலையில் வயது முதுமை காரணமாக மன்னர் சல்மான் விரைவில் பதவி விலகுவார் என்றும் பட்டத்து இளவரசர் முகமது மன்னர் பொறுப்பை ஏற்பார் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன. எனினும் இந்தத் தகவலை அரச தரப்பு மறுத்துள்ளது. (ம)



## ...சாவு

...கிழமை வான்வெளித் தாக்குதல்

...தல்கட்டமாகத் தெரிவிக்கப்பட்ட ...ஆக அதிகரித்தது. இந்தத் தாக்குதல் ...தா அல்லது ரஷ்யாவால் நடத்தப் ...லை. எனினும் சிரியாவே இதை ...தெரிவிக்கப்பட்டது. (ம)



## பலுசிஸ்தான் சுதந்திரத்தை வலியுறுத்திப் பரப்புரைகள்

இஸ்லாமபாத், நவ. 16

பாகிஸ்தானில் உள்ள பலுசிஸ்தானுக்கு சுதந்திரம் வேண்டும் என்று வலியுறுத்தி லண்டனில் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு பாகிஸ்தான் கடும் கண்டனம் தெரிவித்தது.

பாகிஸ்தானில் உள்ள மாகாணங்களில் ஒன்று பலுசிஸ்தான். நாட்டின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இந்த மாகாணத்தில் பிரிவினைவாதக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. இந்தக் குழுக்கள் அந்த நாட்டு அரசுக்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றன.

இதனால் பிரிவினைவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையை இராணுவம் மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில், பலுசிஸ்தானுக்கு ஆதரவாக பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மக்கள் ஆணை! விலகலும் எதிர்பார்ப்பும்

தமிழ்மக்கள்தேர்தலில்வழங்கிய ஆணையைத்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீறவில்லை என்று அழுத்தமாகத் தெரிவித்திருக்கிறார் அந்தக் கட்சியின் பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

“தமிழ்மக்களின்கருத்தைஅறியும்தேர்தலாகஉள்ளூராட்சித்தேர்தல் அமையலாம். பௌத்தத்திற்கு முதலிடம், கூட்டாட்சி தேவையில்லை, ஒற்றையாட்சியின்கீழ்அதிகாரப்பரவலாக்கம்என்றகொள்கையைஉடையதற்போதையதமிழ்த்தலைமைத்துவத்தின்கருத்தை தமிழ் மக்கள் வரவேற்பார்களானால், சிங்கள மக்களுக்கு அதை எடுத்துக்காட்டிப்புதிய அரசமைப்பைத்தாம்நினைக்கும்வகையில் நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளச் செய்யலாம் என்று அவர்கள் எதிர்பார்க்கக்கூடும். தற்போதைய தமிழ்த் தலைமைகளின் கருத்துக்களைத்தமிழ் மக்கள் உள்ளூராட்சித் தேர்தல்களில் ஏற்றுக் கொண்டு பெருவாரியாக அந்தக் கருத்துக்களை ஆதரிப்பார்களானால் மிகக் குறைவானதீர்வைநாம்விரைவாகப்பெறஇடமிருக்கின்றது”என்று வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும்போதே சுமந்திரன் இவ்வாறு கூறியிருந்தார்.

தனதுபதிலில்இருவிடயங்களைச்சுமந்திரன்சுட்டிக்காட்டியிருந்தார். முதலாவது, அரசமைப்பை வரைவதற்கான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கையில், ஒற்றையாட்சி இலங்கைக்குப் பொருந்தாது என்றுகூறப்பட்டிருக்கிறதுஎன்றும்கூட்டாட்சி(சமஷ்டி)பொருந்தாதுஎன்றுஎங்கும்கூறப்படவில்லைஎன்றும்சுட்டிக்காட்டியிருக்கிறார். இரண்டாவது, இடைக்கால அறிக்கையைக் குறைந்தபட்சத் தீர்வு என்று முதலமைச்சர் சொல்வது தவறு என்றும் கூறியிருக்கிறார்.

கூட்டமைப்பின்பேச்சாளர்கூறுவதைப்போன்று இடைக்கால அறிக்கையில்ஒற்றையாட்சி இலங்கைக்குப்பொருத்தமற்றதுஎன்று தெளிவாகக்கூறப்பட்டுள்ளது. ஒற்றையாட்சியின்கீழ் உள்ளபிரிட்டனில் இருந்து வடஅயர்லாந்து மற்றும்ஸ்கொட்லாந்து ஆகியவை பிரிந்து செல்லவகைஇருப்பதால்ஒருமித்தநாடு, பிரிக்கப்படமுடியாதநாடு என்று சொல்லப்படப்போகும் இலங்கைக்கு, பிரிவினைக்கு இடமளிக்கக்கூடிய ஒற்றையாட்சி பொருத்தமானது அல்ல என்ற அர்த்தப் பாங்கோடு அது சொல்லப்பட்டுள்ளது.

அதேநேரத்தில், கூட்டாட்சி பொருத்தமற்றது என்று எங்கும் சொல்லப்படவில்லைஎன்றும்சுமந்திரன்சுட்டிக்காட்டியிருக்கிறார். அதேபோன்று கூட்டாட்சி பொருத்தமானது என்றும் இடைக்கால அறிக்கையில் எங்கும் கூறப்படவில்லை.

இடைக்கால அறிக்கையில் ஒற்றையாட்சி பொருத்தமற்றது என்று சொல்லப்பட்டாலும் நாடு “ஏக்கிய ராஜ்ஜிய” என்றே சிங்களத்தில் தொடர்ந்தும்குறிப்பிடப்படுகிறது. முன்னரும்அது அப்படியேதான் குறிக்கப்பட்டது. அதன்உண்மையானதமிழ்அர்த்தம்இப்போதுதான் “ஒருமித்தநாடு”என்றுசரியாகச்சொல்லப்பட்டிருக்கிறது, இதுவரையிலும் ஒற்றையாட்சி என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டு வந்திருக்கிறது என்று சுமந்திரன் சொல்வதை சிங்கள மக்களே ஏற்றுக்கொள்ளாதபோது, தமிழர்கள்அதனைஏற்றுசமாதானமாவது கொஞ்சம் கடினமான காரியம்தான்.

ஒவ்வொருதேர்தலிலும்இவற்றுக்காகத்தான்தமிழ்மக்கள்மீண்டும் மீண்டும் சலுகைகள், அபிவிருத்திகள் எல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டுவாக்களித்துக்கொண்டிருக்கிறார்கள். கொள்கைப் பற்றை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தது, இடைக்கால அறிக்கையை குறைந்தபட்சத் தீர்வு என்று சொல்வதுபொய்என்றும்அவர்கூறியிருக்கிறார். தமிழர்களின்அடிப்படைக்கோட்பாடுகளான, திம்புப்கோட்பாடுகள்கூறும்தமிழர்களை ஒரு தேசமாக அங்கீகரிப்பது, வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதை அங்கீகரிப்பது, தமிழர்களுக்குச்சுயநிர்ணய உரிமை இருக்கின்றது என்பதை அங்கீகரிப்பது, தமிழர்களின்அடிப்படை உரிமைகளை அங்கீகரிப்பது ஆகியவற்றில் ஒன்றைக்கூட இடைக்கால அறிக்கை வெளிப்படையாக ஆதரித்து நிற்காதபோது, அது ஒரு குறைந்தபட்சத் தீர்வு என்கிற விமர்சனங்கள் வருவதைத் தவிர்க்க முடியாதுதான்.

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளாத ஒரு தீர்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்று கூட்டமைப்பின் தலைவர்கள்திரும்பத்திரும்பக்கூறிவருகின்றார்கள். ஆனால், தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளை வெளிப்படையாக அங்கீகரிக்காத, பௌத்த சிங்கள பேரினவாதச்சாயலைத் தன் மீது வெளிப்படையாகப் பூசிக்கொண்டிருக்கும் இடைக்கால அறிக்கையை தமிழர்கள்ஏற்கவேண்டும்என்றுஎதிர்பார்ப்பதுஎந்தவகையில்நியாயம்?

அத்தகைய ஒருதீர்வு தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் குறைந்தபட்சத்தீர்வாகத்தான்இருக்கமுடியும். இடைக்காலஅறிக்கை இறுதி வரைவு அல்ல, அப்படியிருக்கும்போது இந்த இடைக்கால அறிக்கையை நிராகரிப்பது வேடிக்கையானது என்று கூறுவது ஏற்புடைய விளக்கம் அல்ல.


இடைக்கால அறிக்கையே இப்படி இருக்கும்போது, புதிய அரசமைப்புஎப்படியிருக்குமோஎன்கிறஅச்சம்காரணமாகத்தான்இந்தக் கரிசனைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. அவற்றைக் கவனத்தில் கொண்டு, அரசமைப்பு வரைவில்'அத்தகைய விடயங்கள் வரவிடமாட்டோம் என்று தமிழ் மக்களுக்கு வாக்குறுதி வழங்கி அவர்களை நம்பிக்கைகொள்ளவைப்பதுதான்செய்யப்படவேண்டியதேதவிர, நடந்தவற்றுக்குப் புதிய புதிய வியாக்கியானங்களை வைப்பதல்ல விவேகமான செயல்.

மக்களின் முடிவுக்கு மாறாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறங்கிச்செல்லாதுஎன்கிறநம்பிக்கையை அவர்களிடம்ஏற்படுத்தவேண்டும்; இடைக்கால அறிக்கையைப் பற்றிய தெளிவுபடுத்தல்களை அல்ல என்பதுதான் இப்போதைக்கு முக்கியமானது.

## இன்றைய கல்வித் துறைக்குள்

# தற்காப்புக் கலை உள்ளடக்கப்படல் காலத்தின் தேவை

### துறைசார் கொள்கை வகுப்பாளர்கள் கவனத்தில் கொள்வார்களா?



செ.அன்புராசா அடிகள்

பக்கத்து இருக்கையில் அமர்ந்து பயணம் செய்துகொண்டிருந்த இளம் பெண்ணிடத்தில் ஒருவன், “நீங்கள் பூசியிருக்கும் 'சென்ட்'(வாசனைத் திரவியம்) வாசமாக இருப்பதுபோல நீங்களும் நல்ல வாசமாக இருப்பீர்கள் என நினைக்கிறேன்! இந்த 'சென்ட்'ரை எங்க வாங்கினீங்க என்று கூறினால் என் மனைவிக்கும் வாங்கிக் கொடுக்கலாம்போல இருக்கிறது” எனக் கூறுகிறான். அந்தப் பெண், 'தயவுசெய்து இந்த 'சென்'ரை உங்கள் மனைவிக்கும் மட்டும் வாங்கிக் கொடுத்து விடாதீர்கள்!' எனச் சொன்னதற்கு அவன், 'ஏன் ஏன்?' என அவசரமாகக் கேட்கிறான்.
அந்தப் பெண்ணோ, “அதை உங்கள் மனைவி பூசிக்கொண்டு வெளியே போகும்போது கண்ட கண்ட எருமைகள் வலியக் கதைக்க முயலுங்கள்! அதனால்தான் சொல்கிறேன்” என்கிறாள் நிதானமாக.
சற்று நேரத்தில் பக்கத்தில் அமர்ந்துசென்றஅந்நபர்இறங்குவதற்கான இடம் வருவதற்கு முன்னரே பேரூந்திலிருந்து மறைந்துபோகிறார்.
இது அந்தப் பெண்ணின் புத்தி சாதுரியமான வீரதீரச்செயல்!
கடந்த ஆண்டு கொழும்பு மாவத்தகமவில் நடந்த சம்பவம் ஒன்று “அத்துமீற முயற்சித்த நபரின் நாக்கைத் துண்டாடிய மாணவி” என்ற தலைப்பில் உதயன் நாளிதழில் பிரசுரமாகியிருந்தது. அச்சம்பவத்தில், பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்ட ஒருவரின் நாக்கை மாணவி ஒருவர் கடித்துத் துண்டாடி அந்த ஆபத்தில் இருந்து தன்னைத்தற்காத்துக் கொண்டுள்ளார் எனத் தெரியவருகிறது.
இந்தச் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, தனியாக வீட்டில் இருந்த குறிந்த மாணவியுடன் தவறாக நடக்க முயற்சித்துள்ளார் ஒரு நபர்.
இவ்வேளையில் குறித்த நபரின்நாக்கைமாணவிகடித்துத் துண்டாடியுள்ளார். வேதனையால் அவ்விடத்தில் இருந்து தலைதெறிக்க ஓட்டம்பிடித்துள்ளார் அந்த நபர். இத்துணிகரமான செயலால் அந்த மாணவி தன்னைத் தற்காத்துக் கொண்டாள். மேலும் பெற்றோருடன் காவல் நிலையம் சென்றுதான் கடித்துத் துண்டாடிய அந்த நபரது நாக்குத் துண்டைக் காவல்நிலையத்தில் ஒப்படைத்திருந்தார் அந்தமாணவி.

**எதற்கும் ஒரு துணிவு வேண்டும்**

எதற்கும் ஒரு வகைத் துணிவு வேண்டும். அசட்டுத் துணிவல்ல, விவேகத்துடன் கூடிய வீரத் துணிவு! உண்மையில் இந்தமாணவிஒருமிகப்பெரும் வீராங்கனைதான்! பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடைபெறுகிறபோது, பெண்கள், உடனடியாகவே சாதூரியமாகவும், விவேகமாகவும், புத்திசாலித்தனமாகவும் செயற்பட்டு எவ்வாறு அவற்றை முறியடிக்க வேண்டும் என்பதற்கு மேற்சொன்ன சம்பவம் ஒரு வகையான எடுத்துக்காட்டு மட்டுமே. இதுபோன்று விவேகமாகச் செயற்படுவது மட்டுமல்லாது, இச்சம்பவங்களை உரிய தரப்பிடம் முறையிடுவதோடு அதற்கான தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

**சமராடிய பெண்கள் இன்று மனம் தளர்ந்து போயுள்ளனர்**

ஆண்களுக்குச் சரிசமமாக நின்று சமராடிய பெண்கள் இன்று குடும்ப வன்முறையையே எதிர்கொள்ள முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்று எண்ணுகிறபோதுஅதனைஏற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது. எத்தனை மன ஓர்மமும், உள வைராக்கியமும் கொண்டு களத்தில் நின்று சாதனைகளும், சரித்திரமும் படைத்த எமது பெண்கள் இன்று வீட்டு வன்முறையைக் கூட எதிர்த்து நிற்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள் என்றால் நிலமை எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்பது ஓரளவுக்கேனும் புரிகிறது. நீதி, சட்டம் இவை பாதிக்கப்படுபவர்கள் பக்கம் இல்லாதபோது இவர்கள் மிகவும் துன்பத்திற்கு உள்ளாவது இயல்பானதே.
எனவேதான், வளரும் எமது குழந்தைகள், குறிப்பாகப் பெண்குழந்தைகள், தங்களுக்கான பாதுகாப்பைத் தாங்களே ஓரளவுக்கேனும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியிருப்பதோடு, இதற்கான மாற்று வழிகளை நாம் தேடவும், ஆராயவும் வேண்டிய கடப்பாடு இருக்கிறது. அவற்றுக்கான மாற்று வழிகளில் ஒன்றுதான் தற்காப்புக் கலைகளை எமது குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதாகும்.

**தற்காப்புக் கலை கட்டாயமானது**

இன்றைய காலத்திலும், இனிவரும் காலங்களிலும் பெண்கள் தற்காப்புக் கலைகளான கராத்தே, சிலம்படி, மல்யுத்தம் போன்ற கலைகளைக் கட்டாயமாகக் கற்றிருப்பது தம்மையும் ஏன் பிறரையும்கூட பாதுகாத்துக் கொள்ளத் துணை நிற்கும். இதனை எத்தனை பெற்றோர் உணர்ந்து கொள்கிறார்களோ தெரியவில்லை.
எனவே, பெற்றோர் பிள்ளைகளுக்கு, குறிப்பாக பெண் பிள்ளைகளுக்கு இந்தத் தற்காப்புக் கலையைக் கற்றுக் கொடுக்க தாராள மனத்துடன் முன்வர வேண்டும்.
இனிவரும்காலங்களில்பெண்களைப் பொறுத்தவரையில் இந்தத் தற்காப்புக்கலைகளில் ஒன்றைக்கற்றிருப்பதுமிகமிக இன்றியமையாதது என அடித்துக்கூறலாம்.
தற்காப்புக் கலைகளை எதிர்காலத்தில் எமது கல்விமுறைக்குள் உள்வாங்கவேண்டும்.
மேற்சொன்ன கராத்தே, சிலம்படி, மல்யுத்தம் போன்றவை கலைகளுக்குள்தான் வைத்துக் கணிக்கப்படுகின்றன. இவையும் ஏனைய கலைகளைப் போன்றவை என்பதை நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.
கல்வி முறைக்குள் உள்வாங்

குவதால் இளையவர்கள் மத்தியில் இக்கலைகளை மிக இலகுவாக முன்னெடுத்துச் செல்லக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும். நடனம், நாடகம், சங்கீதம், இசைக் கருவிகளை மீட்டல், அழகுபடுத்தல்எனஎத்தனையோ கலைகள் கல்விச் செயற்பாடுகளில் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளன. இவைபோல தற்காப்புக் கலைகள் சிலவற்றையாவது கல்விச் செயற்பாடுகளில் இணைத்துக்கொள்வது காலத்தின் கட்டாயமாக இருக்கிறது.



**ரெஹனா ஜப்பாரியின் ஓர்மம்!**

தம்மீது பாலியல் வன்கொடுமை மேற்கொள்ள முயன்ற உளவுத்துறை அதிகாரியொருவரைக் கொலை செய்தார் என்று குற்றம் சுமத்தப்பட்ட ஈரானைச் சேர்ந்த 26 வயது இளம் பெண்ணான ரெஹனாஜப்பாரி 2014ஆம் ஆண்டில் தூக்கில் இடப்பட்டார். அவள் கொல்லப்படுவதற்கு முன் தனது தாயான சோலே என்பவருக்கு தனது குரலால் பதிப்பித்து செய்தி ஒன்றை அனுப்பிவைத்தாள்.

ரெஹனா ஜப்பாரிக்கு தூக்குத் தண்டனை வழங்கக்கூடாது என்றும், அது அநீதியானது என்றும் உலகின் பல பாகங்களிலும் இருந்து பல்வேறுபட்ட அமைப்புக்களாலும் நபர்களாலும் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் ஈரானிய அரசு அத்தண்டனையை நிறைவேற்றியது. ரெஹனா ஜப்பாரி தன் தாய்க்கு அனுப்பிய செய்தியின் முக்கியமான வரிகள் இங்கு தரப்படுகின்றன.

"குற்றம் இழைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட நான் சட்டப்படி அதற்குப் பதிலடியாகத் தண்டனையை அனுபவிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறேன். இந்த உலகம் என்னை எந்தக் கவலையுமின்றி 19 ஆண்டுகள் வாழ அனுமதித்தது.

...கொடூரம் நிறைந்த அந்த இரவில் நான் கொல்லப்பட்டிருப்பேன். என்னுடைய உயிரற்ற உடல் நகரின் ஒரு மூலையில் தூக்கி வீசப்பட்டிருக்கும். என்னை பாலியல் பலாத்காரம் செய்து சீரழித்துக் கொன்றார்கள் என்பதும் உனக்கு அப்போது தெரிந்திருக்கும். கொலைகாரன் யாரென்று எவருக்குமே தெரியாமல் போயிருக்கும்...'

'ஆனால், சபிக்கப்பட்ட அந்த அடி கதையையே மாற்றிவிட்டது. என்னுடைய உடல் வீதியில் தூக்கி வீசப்படவில்லை. எவின் சிறைச்சாலையின் தனிமைக் கொட்டியில் அடைக்கப்பட்டது. இதுதான் தலைவிதி என்பதால், நான் அதை ஆட்சேபிக்கவில்லை. சாவு ஒன்றே வாழ்க்கையின் கடைசி அல்லஎன்பதைநீயும்அறிவாய்...

...சில வேளைகளில் தீமைகளை எதிர்த்துப் போராடியே தீர வேண்டும் என்று நான் கற்றிருக்கிறேன். நல்லதொரு நெறிக்காக ஒருவர் தன்னுடைய உயிரைக் கொடுத்தாவது பாடுபட வேண்டும் என்று நீ சொல்லித் தந்திருக்கிறாய். அதைத்தானே நான் செய்தேன். ஒரு காமுகன் என்னை வல்லுறவுக்கு உட்படுத்த முற்பட்டபோது, உன்னுடைய அறிவுரைகளெல்லாம்பயன்படவேயில்லைஅம்மா. கொலைகாரி என்று என் மீது குற்றம்சுமத்தினார்கள். சட்டம்பாரபட்சமில்லாமல் செயல்படும் என்ற நம்பிக்கையில் நான் அழவேயில்லை அம்மா!'

...உனக்குத் தெரியாமலோ, நீ இல்லாமலோ என்னைத் தூக்கில் போட்டுவிடுவார்கள். அதனால் நான்சொல்ல விரும்புவதையெல்லாம் ஒலிவடிவில் பதிவுசெய்திருக்கிறேன். இது இன்னொருவர் மூலம் உன் கைக்குக்கிடைக்கும்.

...இறப்பதற்கு முன்னால் உன்னிடம் ஒன்றை யாசிக்கிறேன்! உன்னுடைய சக்தியையெல்லாம் திரட்டி இதை நீ செய்தே தீர வேண்டும். நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நீதிமன்றத்துக்குச் சென்று என்னுடைய இறுதி விருப்பது இது என்று அவர்களிடம் தெரிவி. நீஎனக்காகநீதிபதிகளிடம் பிச்சை கேட்காதே என்று கூறிய நானே சொல்கிறேன், நீ எனக்காக நீதிபதிகளிடம் பிச்சை கேட்டாலும் தவறில்லை.'

'அம்மா! நான் வெறும் கழிவாக இந்தப் பூமியில் விழ விரும்பவில்லை. என்னுடைய அழகிய கண்களும், தூய இதயமும் இந்த மண்ணோடு மண்ணாக வீணாகிப் போய்விடக் கூடாது. என்னைத்தூக்கில்போட்டதும்என்னுடைய கண்கள், இதயம், சிறு நீரகம், எலும்புகள் இன்னும் என்னவெல்லாம் என் உடலிலிருந்து எடுத்து மற்றவர்களுக்குப் பயன்படுத்த முடியுமோ அதையெல்லாம் தேவைப்படுபவர்களுக்குக் கிட்டச் செய்யுமாறு இரந்துகேள். நான் தான்எனது உடல் உறுப்புக்களையெல்லாம் தானம் செய்தேன் என்று எவருக்கும் தெரியவேண்டாம்.

...அம்மா, எனக்காக ஒரு பூச்செண்டை வாங்கு, எனக்காக இறைவனிம் வேண்டு. என் இதயத்தின் ஆழத்திலிருந்து சொல்கிறேன், என்னை அடக்கம் செய்து எனக்காக ஒரு சமாதியை ஏற்படுத்தாதே அம்மா. வாழும்போதுதான் நான் உனக்குத் துயரங்களையே கொடுத்தேன். நான் இறந்த பிறகும் என்னுடைய சமாதிக்கு வந்து நீ அழ வேண்டாம் அம்மா. என்னையும் துயரகரமான என்னுடைய நாள்களையும் மறக்க முயற்சி செய். என்னுடைய எந்த எச்சமும் உன் எதிரிலோ நினைவிலோ இருக்கக்கூடாது...'

'இந்த உலகம் நான் வாழ்வதை விரும்பவில்லை. நான் இறப்பைத் தழுவுகிறேன். கடவுளின் அரசில் நான் அந்த இன்ஸ்பெக்டர் சாம்லு, அந்த நீதிபதி, ஆகியோர் மீது வழக்குத் தொடுப்பேன். இன்ஸ்பெக்ரர் சாம்லு, அந்த நீதிபதி, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எல்லாம் பதில் சொல்லியாக வேண்டும். டாக்டர் ஃபர்வான்டி, காசிம் சாபானி எல்லோர் மீதும் கடவுளின் நியாய ஸ்தலத்தில் வழக்குத் தொடுப்பேன்.

...என்னுடைய உடலிலிருந்த உயிர் பிரியும்வரை உன்னைத் தழுவிக்கொண்டிருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். எனக்கு உலகமே நீதான் அம்மா! உன் பிரிய ரெஹனா."

> சில வேளைகளில் தீமைகளை எதிர்த்துப் போராடியே தீர வேண்டும் என்று நான் கற்றிருக்கிறேன். நல்லதொரு நெறிக்காக ஒருவர் தன்னுடைய உயிரைக் கொடுத்தாவது பாடுபட வேண்டும் என்று நீ சொல்லித் தந்திருக்கிறாய். அதைத்தானே நான் செய்தேன்.

**மனதில் பற்றுறுதி வேண்டும்**

இதனை வாசிப்பவர்கள் சிலரின் கண்களில் கண்ணீர் துளிகள் தோன்றின் அதனைத் துடைத்தெறிந்துவிட்டு உடல், உள, ஆன்ம பலம்கொண்ட ரெஹனாக்களை உருவாக்க பற்றுறுதி கொள்ள முன்வருவோம். ஏனெனில், இன்றைய இளம் பெண்களுக்கெல்லாம், ரெஹனாவின் வாழ்க்கை எல்லா விதத்திலும் மிக உயர்வான-உன்னதமானபாடத்தைத் போதித்த வண்ணமாக இருக்கிறது.

தாய்க்கு அவள் அனுப்பிய அந்த ஒலிச் செய்தியின் மூலம் நடந்த அத்தனைவிடயங்களையும்புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது! தன்னைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த வந்தவனுக்குக் கொடுத்த அடியும், அதன் விளைவும், அதன் பின் ரெஹனா நடந்துகொண்ட விதமும் அவளின் மனப் பலத்தால், உடல் பலத்தால், ஆன்ம பலத்தால் விளைந்த ஒன்று! இத்தகைய பலங்களைப் பெற எமது இளம்பெண்பிள்ளைகளைத் தயார்ப்படுத்த வேண்டும் இன்றைய பெற்றோரும் கல்விச் சமூகமும்.

**ரெஹனா வாழ்கிறாள் வாழ்வாள்!**

அடுத்தவர்களால் பழி சுமத்தப்பட்டு, நீதிமன்றத்தால் அநியாயமாக தீர்ப்பிடப்பட்ட நிலையில் தூக்குக் கயிற்றில் தொங்குவதற்கான நாள் குறிக்கப்பட்ட வேளையில் கூட, தன் உடல் உறுப்புக்களை எல்லாம் தேவையானவர்களுக்குக் கொடுத்துவிடுங்கள் என்று சொல்ல இவளால் எப்படி முடிந்தது? இந்த நிகழ்வில் இருந்து ஒன்று மட்டும் உறுதியாகிறது. ரெஹனாவின் நீதிக்கான வேண்டுதலுக்குப் பதில் இவ்வுலகில் கிடைக்காது போயினும் மறுவுலகில் உறுதி என்பது. என்னைப் பொறுத்தவரையில், ரெஹனா உண்மையில் வாழ்கிறாள், வாழ்வாள், ரெஹனா போன்றவர்கள் வாழ்வார்கள்.



# ஆசிரியருக்கான கடிதம்

## எல்லைகள் தாண்டப்படுமானால் பின்னடைவைத்தவிர்க்க இயலாது

கல்வித்துறையில் தனியார் வகுப்புக்களைத் தடை செய்தால் மட்டுமே கல்விக்கான உரிய திட்டங்களின் பயனைப் பெற்றுக் கொள்ள முடியுமென விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது வலியுறுத்தியிருந்தார்.

அமைச்சரது அந்தக் கருத்தையொட்டி அமைந்த உதயன் ஆசிரியர் தலையங்கம், தனியார் வகுப்புகளது ஆதிக்கம் காரணமாக மாணவர்கள் மத்தியில் ஏற்படும் கல்விப் பின்னடைவு, மாணவர்கள் மட்டுமன்றி அவர் தம் பெற்றோரும் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து விவரித்திருந்தது.

தனியார் வகுப்புக் கலாசாரத்தால் ஏற்படும் சமூக, பொருளாதாரத் தாக்கம் குறித்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள இரு மாணவர்களது தந்தை என்ற வகையில் எனக்கு அனுபவங்கள் நிறையவே உள்ளன. எனது மகன்மாரை ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் முயற்சியில் இருந்து உயர்தரப் பரீட்சைக்கான தனியார் வகுப்புகளில் மேலதிகக் கல்விக்கு அனுப்பி வைக்கும் நிலைவரை நான் பல்வேறு அனுபவங்கள் பெற்றுக் கொண்டுள்ளதுடன்,-உளரீதியிலும் பொருளாதார ரீதியிலும் சிரமங்களுக்கும் உள்ளாக நேர்ந்ததுண்டு. அதேவேளை எனது பிள்ளைகளும் ஒரு இயந்திரமயச் சூழலில் ஓய்வு ஒழிச்சலின்றி இயங்கியதால் உளச் சோர்வுக்கும் ஆட்பட்டனர் என்பதை உணர்கிறேன்.

இருப்பினும் தனியார் வகுப்புக் கலாசாரம் இன்றைய எமது வாழ்வியலில் இரண்டறக் கலந்துவிட்டதொன்றாக ஆகிவிட்ட சூழ்நிலையில், மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளிக்கும் எம் போன்ற பெற்றோர், தலைகீழாய் நின்று குழி தோண்டியாவது எமது பிள்ளைகளுக்கு ஏனைய மற்றப் பிள்ளைகளைப் போன்று கல்வி கற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியவர்களாக உள்ள நிலையில், குறித்த அமைச்சரது கருத்துக்கு இயைவான ஆசிரிய தலையங்கத்தின் மூலம் தாங்கள் யதார்த்த நிலையைத் தெளிவுபடுத்தியுள்ளீர்கள்.

இருப்பினும் அரச உத்தியோகத்தர்களான ஆசிரியர்களுக்கு அரசு வழங்கும் ஊதியம் போதாதிருப்பதாலேயே அவர்களில் பலர் இத்தகைய தனியார் கல்வி நிறுவனங்களில் மேலதிக வருமானத்துக்காகக் கற்பிக்கின்றனர் என்ற கருத்தை ஏற்க எனது மனது மறுக்கிறது. அப்படிப் பார்த்தால், இன்று எந்தவொரு அரச உத்தியோகத்தராலும் தமது அரச வேதனத்துக்குள் தமது குடும்பத் தேவைகளை நிறைவேற்ற முடிவதில்லையே? எல்லோருக்கும் பற்றாக்குறை வாழ்க்கைதான். ஆனால் கல்விப் புலத்தில் அரச பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களது கற்பித்தல் புலமையும் திறமையும் இத்தகையமேலதிக வருமானம் தேடும் முயற்சியால் மழுங்குகிறது;தரம்குன்றுகிறதுஎன்றஉண்மையை ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

எனவே குறிப்பாக அரச பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவனங்களில் மேலதிக கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவது தடைசெய்யப்படுமானால், பாடசாலைகளில் குறித்த அத்தகைய ஆசிரியர்களது கற்பித்தல் திறனும், புலமையும் மாணவர்களுக்கு முற்று முழுதாகக் கிட்ட வாய்ப்பமையும் என்பது எனது தாழ்மையான கருத்து.

ம.உலகசேகரம், தெல்லிப்பழை.

# பொருளாதார அபிவிருத்தியின் முதன்மைப் பங்காளராக மத்திய வங்கி செயலாற்றுகிறது

*அறிக்கை மூலம் சுட்டிக்காட்டல்*

பொருளாதார அபிவிருத்தியில் முதன்மைப் பங்குதாரராக மத்திய வங்கி செயலாற்றி வருகிறது என்ற தகவலை அறிக்கை மூலம் வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய கொடுப்பனவுத் தளத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல் தொடர்பில் விளக்கமளிக்கும் வகையிலேயே இந்த விடயத்தை வங்கி தெரியப்படுத்தியுள்ளது.

இது குறித்து இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் பணிப்பாளர் கருத்துரைக்கையில்,

'ஜ.சி.ரி.ஏ' நிறுவனம் 2016 ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி தேசிய கொடுப்பனவுத் தளம் தொடர்பில் பிரேரணையை முன்வைத்தது. எனினும் அதனை நடைமுறைப்படுத்தல், கட்டமைப்பைப் பாதுகாத்தல், தரம் மற்றும் கணக்காய்வு விடயங்கள் தொடர்பில் மத்திய வங்கி 'ஜ.சி.ரி.எ' நிறுவனத்திடம் வினவியது. அதற்கான பதில் கிடைக்கவில்லை.

கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் விடயங்கள் மத்திய வங்கியின் விதிமுறைகளுக்கு அமைய இடம்பெற வேண்டும். இலங்கையின் கொடுப்பனவுக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம். இணைய வழி வணிகத்துக்காக முன்னெடுக்கப்படும் பயணத்தைத் தடுக்கும் நோக்கம் எம்மிடம் இல்லை. அதேவேளை 2003 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழ் உயர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் தொடர்பான 15 கட்டமைப்புகளை தயாரித்துள்ளோம். அதிகள விலான கட்டமைப்புகள் தெற்காசியாவில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டவையாக காணப்படுகிறது.

அத்துடன், தெற்காசியாவில் முதற்தடவையாகவும், உலகளாவிய ரீதியில் இரண்டாவது தடவையாகவும் வேலை நாளொன்றில் எந்தவொரு வங்கியினதும் காசோலையை பிறிதொரு வங்கியின் கணக்குக்கு அனுப்பக்கூடிய கட்டமைப்பொன்றைத் தயாரிப்பதில் மத்திய வங்கி வெற்றிகண்டது.

இவ்வாறு புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழ் பாதுகாப்பாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியுமான கட்டமைப்பை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். இதற்கான தளத்தை உருவாக்கும் போது மத்திய வங்கியின் 1949 ஆண்டின் 58 ஆம் இலக்க நிதிச்சட்டம் மற்றும் 2015 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் கட்டமைப்பின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பம் மாற்றம் கண்டாலும் அதற்கான சட்டங்கள் மாற்றங் காணாது." - என்றார். (ஓ)

# டி.எவ்.சி.சி வங்கியின் தலைமை நிறைவேற்று அதிகாரியாக லக்ஷ்மன் சில்வா நியமனம்



டி.எவ்.சி.சி வங்கியின் தலைமை நிறைவேற்று அதிகாரியாக லக்ஷ்மன் சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் குறித்துக் கருத்துரைத்துள்ள லக்ஷ்மன் சில்வா,

"டி.எவ்.சி.சி வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரியாக எனது பயணத்தை தொடர்வதில் நான் பெருமைப்படுகிறேன். வங்கியானது நுகர்வோர் மற்றும் வணிகங்களின் மாறிவரும் தேவைகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ய தற்போது முழுமையாக வணிக ரீதியாக, வர்த்தக வங்கியாக மாறியுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதில் கவனம் செலுத்துவதோடு இலங்கை மக்களுக்கு வாழ் நாள் முழுமையுமாக தீர்வுகளை வழங்க முனைகிறது.

அண்மைய ஆண்டுகளில் வங்கி காட்டியுள்ள தற்போதைய நிதி வளர்ச்சியைக் கொண்டு எங்கள் வாடிக்கையாளர்களுக்கும், பங்குதாரர்களுக்கும் மதிப்பளிக்கும் விதத்தில் வங்கியின் நீண்டகால தந்திரோபாயங்களைக் கட்டியெழுப்ப வாய்ப்பை எதிர்நோக்கிச் செயற்படுகிறேன். டி.எவ்.சி.சி வங்கி உள்ளூர் மற்றும் பன்னாட்டுச் சந்தையில் உற்சாகமான வரவேற்பைப் பெற்று வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே வங்கியின் தலைமைப்பணிகளில் இணைந்து கொண்டு சேவையாற்ற ஆர்வமாக உள்ளேன்." - என்றார்.

அந்தவகையிலே டி.எவ்.சி.சி வங்கியின் புதிய தலைமை நிறைவேற்று அதிகாரியாக நியமனத்தைப் பெற்றுக்கொண்டுள்ள இவர் நிதியியல் சேவைகள் மற்றும் வங்கிக் கைத்தொழில் துறையில் தனது விரிவான பின்னணி மற்றும் நிபுணத்துவ அனுபவங்களைக் கொண்டு வங்கியை நாட்டிலுள்ள முன்னணி மற்றும் மதிக்கத்தக்க வணிக வங்கிகளில் ஒன்றாக மாற்றுவதற்கும் புதுமை மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை மையப்படுத்தி வங்கியின் வளர்ச்சியில் அதிக பங்காற்றலை வழங்குவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும் நிதியியல் துறையில் 30 வருடகால அனுபவத்தைப் பெற்றுக் கொண்டுள்ள இவர் களனிப் பல்கலைக்கழகத்தில் வர்த்தக மாணிப்பட்டத்தையும், அதேபோன்று சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத் துறையில் முதுகலைபட்டத்தையும் பெற்றுக்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்தில் தனது ஆரம்பகால அரச பணியை ஆரம்பித்த இவர், 1987 ஆம் ஆண்டு டி.எவ்.சி.சி வங்கியில் இணைந்து பணியாற்றத் தொடங்கினார். வாடிக்கையாளர்களுக்கு பயனளிக்கும் வகையில் வங்கியோடு இணைந்து பலவிதமான உற்பத்தி மற்றும் சேவைகளை மேம்படுத்தும் திட்டங்களில் முக்கிய பங்காளியாகச் செயற்பட்டார். ஆரம்ப காலத்தில் டி.எவ்.சி.சி வர்தன வங்கியின் முதன்மைச் செயற்பாட்டு அதிகாரியாக பணியாற்றினார். 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதன்மை நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அதன் பின்பான காலப்பகுதியில் குறிப்பாக 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாத காலப்பகுதிவரை நிர்வாக இயக்குனராக கடமையாற்றினார்.

டி.எவ்.சி.சி வங்கி மற்றும் டி.எவ்.சி.சி வர்தன வங்கியின் ஒன்றிணைவை தொடர்ந்து ஒருங்கிணைந்த டி.எவ்.சி.சி வங்கியின் துணைத் தலைமை நிர்வாகியாக நியமிக்கப்பட்டார். டி.எவ்.சி.சி. வங்கியின் முதன்மை நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்ட பின்பு வங்கிக்கழகத்தின் வர்த்தக மூலோபாய முகா மைத்துவத்தையும், தலைமையையும் கருத்திற்கொண்டு நிபுணத்துவம் கொண்ட திட்ட நிதியுதவி சேவைகளை மேம்படுத்தினார். அதன் மூலம் ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக ஆசியாவில் முதன்மை அபிவிருத்தி வங்கிகளில் ஒன்றாக திகழும் பெருமையை நிலை பெறச் செய்தார் என்பதும் நோக்கத்தக்கது. (ஓ)

தெற்காசியாவின் சிறந்த வானூர்தி சேவை விருதை, சிறிலங்கன் எயார்லைன்ஸ் வானூர்தி சேவை பெற்றுக்கொண்டுள்ளது.


மாலைத்தீவு அன்து நகரத்தில் இடம் பெற்ற 'தெற்காசியா சுற்றுலா விருது' வழங்கும் விழாவின் போதே இந்த விருது சிறிலங்கன் எயார்லைன்ஸ் வானூர்தி சேவைக்கு வழங்கப் பட்டுள்ளது. (ஓ)



# வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள் 2018 குறித்த பார்வை

## அரசிறையின் மீதிகள்

2018 இலும் அதற்கப்பாலும் அரசிறை மீதிகள் குறிப்பிடத்தக்க மாற்றமொன்றைப் பதிவுசெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையானது ஒட்டு மொத்தத்தில் குறைவடைந்து செல்லும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடைமுறைக் கணக்கு மீதி மிகையொன்றைப் பதிவு செய்யுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. மற்றும் ஆரம்ப மீதி ஒரு தசாப்தத்தின் பின்னர் நேர்க்கணிய நிலையாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தகவல் மூலம் -அரசிறைக் கொள்கைத் திணைக்களம்.

# வேம்பெனும் கற்பக விருட்சம்

## இயற்கையின் பயன்தரு மோட்சம்

 க.கதீசன்



'நீம்' (Neem) என ஆங்கிலப் பெயர் கொண்டு அழைக்கப்படும் கற்பக விருட்சம், தமிழ்மொழியில் வேம்பு அல்லது வேப்பை என்று பெயர் குறிப்பிடப்படுகின்றது. இது 'அசாடிறக்ரா இண்டிக்கா' (Azadirachta indica) என்ற தாவரவியற் பெயரை உடையது.

**இயற்கையை பேணும் தாவர உயிரி**

இத் தாவரம் முதன் முதலில் இந்தியாவில் தோன்றியதாக நம்பப்படுவதோடு, இதற்குரிய காப்புரிமை கடந்த 2000ஆம் ஆண்டு ஐரோப்பிய காப்புரிமைக்கழகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இந்தியா, இலங்கை உட்பட தெற்காசிய நாடுகளின் எல்லாக் காலநிலை வலயங்களிலும் வளர்வதோடு, அதிகளவில் பரவிக்காணப்படுகின்றன. கண்ணெதிரே விருட்சமாகத் தோற்றம் தந்து, கைக்கு எட்டிய தொலைவில் அதிக பயன்களை உடைய மூலிகைத் தாவரமாக வேம்பு விளங்குகிறது. காற்று மண்டலத்தை சுத்தம் செய்து நோய்களைக் குணப்படுத்தும் கற்பக மரமாக திகழ்கின்றது.

**வேம்பின் தனித்துவ அவயவங்கள்**

சராசரியாக 15 மீற்றர் உயரம் வரை வளரக் கூடிய மரம். இதன் இலைகள் இறகு வடிவமானதாக இருப்பதுடன் பல சிற்றிலைகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு சிற்றிலையும் சாதாரண இலையைப் போன்றே அமைந்திருக்கும். பூக்கள் சிறியதாக, வெண்மை நிறம் கொண்டு சிறு கொத்துக்களின் தொகுப்பாக காணப்படும். காய்கள் பச்சை நிறமானவையாகவும், பழங்கள் 1.5 தொடக்கம் 2 சென்ரிமீற்றர் நீளமுடையதாகவும், மஞ்சள் நிறத்திலும் காணப்படும். ஒவ்வொரு பழமும் தன்னுள்ளாய் ஒவ்வோர் விதையை உட்பொதிவாக கொண்டிருக்கும்.

> **"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளுள், மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளை விடச் சிறந்தது எதுவும் இல்லை."**

**இனப்பெருக்கம்**

வேப்பம் வித்தின் மூலம் இனப்பெருக்கத்தை மேற்கொள்ளும் தாவரமாக விளங்குகிறது. இயற்கை விரும்பிகளான பறவைகளும் விலங்குகளும் வேப்பம் பழங்களை உண்டு விதைகளை தங்கள் மலக் கழிவு மூலம் பரம்பலடையச் செய்கின்றன. செயற்கையான முறையில் விதைகளை சேகரித்து பொதிப்பைகளில் வேப்பம் விதைகளை பதியிடல் செய்து, புதிய தாவ ரத்தை பெற்றுக்கொள்ளலாம்.

வேப்ப மரங்கள் பூக்கும் காலம் குறிப்பிட்ட ஒரு போகத்துக்குரியது. ஆக, பழங்கள் கிடைக்கும் காலத்திலேயே புதிய கன்றுகளை உருவாக்கிக் கொள்ள முடியும். இவை பயன்தரக்கூடிய கால எல்லை 150 வருடங்களுக்கு மேற்பட்டதாக காணப்படுகிறது.

**பயன்**

•வேம்பில் உள்ள 'அசாடிறக்ரின்' எனும் இரசாயனப்பொருள், பூச்சி விரட்டி 'களிம்பு' (Cream) தயாரிப்பில் பயன்படுகிறது.

•இலைகள் கோயில்களில் பூமாலையாகவும், வீடுகளில் குற்றம் தாங்கும் பொருளாகவும், மாசு நீக்கியாகவும் பயன் கொள்ளப்படுகிறது.

•பச்சை இலைகள் பசுந்தாட் பசளையாகவும், உலர் இலைகள் சேதன எருவாகவும் பயன்படுகிறது.

•சாலையோரங்களில் நிழல் தரும் மரமாக சமூக அந்தஸ்தினைப் பெறுகிறது.

•முதிர்ந்த மரம் அரிமரமாகவும், கைப்பணிப் பொருள்கள் செய்யவும் பயன்படுகிறது.

•காற்றுத்தடையாக காவல் புரிகிறது.

•இவற்றின் இலை, விதை என்பன சேதன விவசாயத்தில் 'சேதன பீடைநாசினி' தயாரிப்பில் பயனுறுதியாக்கப்படுகிறது.

•அம்மை, பொக்குளிப்பான் போன்ற நோய்களுக்கு உடல் வெப்பத்தை தணித்து குளிர்ச்சி தரும் படுக்கைப் பொருளாக பயன்படுகிறது.

**மருத்துவக் குணங்கள்**

**வேப்பம் இலை**

வேப்பம் இலைகள் குடற் புழுக்களைக் கட்டுப்படுத்துகிறது. குடல் வாயுவை அகற்றுகிறது. வீக்கம் மற்றும் உடலில் ஏற்படும் கட்டிகளை கரைக்கிறது. தோல் நோய்களான படை, சிரங்கினை கட்டுப்படுத்துகிறது. இவற்றின் பயன் கொண்டு தோல் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கலாம்.

**வேப்பம் விதை எண்ணெய்**



வேப்பம் விதையில் இருந்து பெறப்படும் 'விதை எண்ணெய்' விச முறிவை ஏற்படுத்தும் தன்மை கொண்டது. தோல் நோய்களை கட்டுப்படுத்தும். தலைமுடி உதிர்வையும், தலைப்பேன், பொடுகுத் தொல்லை மற்றும் இளநரையைக் கட்டுப்படுத்துகிறது.

**வேப்பம் பூ**

வேப்பம் பூக்கள் குடற் புழுக்களின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துகிறது. செவி தொடர்பான நோய்களை குணப்படுத்துகிறது.

**வேப்பம் பட்டை**

வேப்பம் பட்டை நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துகிறது. முறைக் காய்ச்சலை கட்டுப்படுத்துகிறது. உடலுக்கு பலத்தைத் தருகிறது. பல் வலியை குணப்படுத்துகிறது. பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் பிரச்சினையை தீர்க்கும் தன்மையை கொண்டுள்ளது.

# தொண்டர் நிலையான ஆசிரியப் பணி

## கல்விப் புலத்தில் அதிக கவனத்துக்குரிய செயல்நிலை

வித்தகன்



தொண்டர் என்ற சொற்பதம் பலனை எதிர்பாராது செய்யப்படும் செயற்பாடுகளுக்கு உரியவரை குறிப்பிடுவதாகும். இது காலகதியில் பலனை எதிர்பார்ப்பவர்களுடைய தொழில்களுடன் இணைக்கப்பட்டிருப்பது எந்த வகையில் பொருந்தும் எனக் குறிப்பிட இயலாது. தொண்டர் ஆசிரியர்கள், சுகாதாரத் தொண்டர்கள், தொடருந்து தற்காலிக பணியாளர்கள் மற்றும் இது போன்ற ஏனைய சில பகுதியினர் நிரந்தர தொழில் நியமனமின்றி தற்காலிக அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்டு கடமை செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களும் தங்கள் கடமைகளை மேற்கொள்கின்றனர். பின்பு தாங்கள் மேற்கொண்ட குறித்த ஒரு சேவைக் கால நீடிப்பினுள், அத் தொழில் நிலையில் நிரந்தர பதவி நிலையை அடைவதற்குரிய முயற்சிகளையும் மேற்கொள்வர். அரச துறையில் பணிபுரியும் பணியாளர்களின் இத்தகு செயல்நிலை குறித்து நாம் எல்லோரும் அறிந்து கொண்டுள்ளோம்.

**தொண்டர் ஆசிரியர்கள்**

இவர்களுள் தொண்டர் ஆசிரியர்களுடைய நிலமை தொடர்பாக அவதானிப்போமாயின், கல்விச் சேவை சார்ந்த நிர்வாகம் காலத்துக்குக் காலம் பாடசாலைகளில் நிலவ வேண்டிய கற்பித்தலுக்குரிய பூரணமான மற்றும் நிறைவான ஏற்பாடுகளைச் செய்யத்தவறுகின்றன. இந்த சந்தர்ப்பத்திலே ஆசிரிய வளப் பற்றாக்குறை நிலவும் பாடசலைகளில் அதிபரின் அனுமதியோடு தற்காலிக இணைப்புப் பெற்று ஆசிரிய உதவியாளராக கடமையாற்றும் பணியாளர்களாக தொண்டர் ஆசிரியர்கள் விளங்குகின்றனர்.

இவர்கள் தற்காலிகமாக பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளோடு இணைவு பெறும்போது, அவர்கள் மனதில் தாம் ஒரு ஆசிரியராகிவிட்டோம் அல்லது ஆசிரியராகப் போகிறோம் என்ற மனநிலை உருவாகிறது. இது தொடர்பான உரிய சந்தர்ப்பங்களும் காலமும் வரும்போது நிரந்தரமாக இந்தப் பதவியை தாம் தக்க வைத்துக் கொள்ளவும், அதற்கு உரித்துடையவராக இருக்கிறேன் என்றும் சிந்திக்கின்றனர். இந்தப் பதவிக்குத் தான் தகுதியானவரா எனச் சிந்திப்பதில்லை. அவர்களை இந்தப் பதவியில் இணைப்பவர்களும் அது பற்றிச் சிந்திப்பதில்லை. இவர்களுள் தகைமை இல்லாதவர்கள் சிலர் ஆசிரியப் பணியில் நீடிக்திருக்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகின்றனர்.

**நியமன ஒழுங்கு**

இந்த நிலையிலே இவ்வாறு தொண்டர் அடிப்படையான ஆசிரிய நியமனங்களைச் செய்ய சட்ட ஒழுங்கு இருக்க வேண்டும். அவர்களுடைய வரவுப் பதிவு சீரான முறையில் பேணப்பட வேண்டும். இந்த விவரங்கள் அனைத்தும் கல்வித் திணைக்களங்களின் உரிய அனுமதியையும், அவர்களது மேற்பார்வையும் பெற்றிருக்க வேண்டும். அதனடிப்படையிலே தகைமை உள்ளவர்கள் மட்டும் நிரந்தர நியமன உள்ளீர்ப்பின் போது பொருத்தமானவர்களாக கருதப்படலாம். அதனைப் பிழையெனக் கூறிவிட முடியாது. ஆனால் தகைமையற்றவர்களை ஒழுங்கு நடைமுறையின்றி நியமித்து, அவர்களின் காலத்தை வீணடித்துவிடக்கூடாது. தவிர, கல்விச் சேவையில் தகைமையற்றவர்களின் நியமனம் என்பது மாணவ சமுதாயத்தின் கல்வித் தாரத்தைப் பாதிக்கும். சமுதாய அக்கறையுள்ளவர்கள் இதுபற்றி ஆழமாகச் சிந்திக்கத் தலைப்பட வேண்டும்.

**ஆவணங்களை ஒழுங்காகப் பேணுதல்**

பதிவேடுகள் இல்லாது, கல்வித் திணைக்களத்தின் அனுமதி மற்றும் மேற்பார்வை இல்லாது, உரிய ஆவணங்கள் பேணப்படாமல் எழுந்தமானமாக நியமனங்கள் வழங்கப்படுதல் பொருத்தமற்றது. நீண்ட காலம் தொண்டர் ஆசிரியராகச் சேவை புரிந்தும் நியமனமின்றி தவிக்கும் போது, அண்மையில் தொண்டர் அடிப்படையில் சேவைக்குள் இணைந்து பணியாற்றியவர்கள் நியமனத்தை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறான ஊழல்கள் இடம்பெறாதிருக்க, கல்வி நிர்வாக சேவையில் உள்ளோரின் ஒழுங்கான திட்டமிடல் செயற்பாடுகள் பெரிதும் வேண்டப்படுகின்றன. கல்வி அமைச்சு இதனை சரியான படிமுறைகளின் வழி கைக்கொள்ள வேண்டும்.

**பட்டதாரிகள் மீதான கரிசனை**

இதே போன்று பட்டதாரிகளை நோக்கின், பட்டம் பெற்று பல ஆண்டுகள் வேலை வாய்ப்பின்றி இருக்கின்றனர். இங்கு ஆசிரியர் பதவி வெற்றிடங்கள் ஏற்படும் போது தொண்டர் ஆசிரிய நியமனங்களைத் தவிர்த்து அவர்களுக்கு பதிலாக பட்டதாரிகளை தொண்டு அடிப்படையில் இணைத்துக் கொள்ள முடியும். அவர்களுக்கு நியாயமான ஒரு உதவு தொகையை வழங்க முடியும். பட்டதாரிகள் வேலையற்று இருக்கிறோம் என்ற மன உளைச்சலுக்கு ஆளாக மாட்டார்கள். தொண்டர் ஆசிரியர் என்ற தற்காலிக நியமனங்களையும் தவிர்த்துக்கொள்ளலாம்.

நிரந்தர நியமனம் கிடைக்கும்போது பட்டதாரிகள் வேறு தொழிலுக்கு செல்வதை அல்லது இதே தொழிலில் நிரந்தர நியமனம் பெறுவது குறித்த தீர்மானங்களை அவர்கள் மேற்கொள்ளலாம். எந்த விடயங்களையும் நல்ல மனதோடு சிந்தித்து மேற்கொண்டால் அதிருப்தியாளர்கள் உருவாவதை தடுக்கலாம். கல்விச் சமூகமும் நன்மையடைவதை பேறாக்கிக் கொள்ளலாம்.

**கல்விப் புலனாளுமைகள் செய்ய வேண்டிய பணி**

இது குறித்து நிர்வாகிகள், கல்விமான்கள், அரசியல்வாதிகள் அக்கறை கொள்ள வேண்டும். அரச கவனத்தை இதன்பால் ஈர்த்து நற் செயலாற்றப் பணி செய்ய வேண்டும். இதனால் சமூகத்தில் நல்ல சூழல் உருவாவதோடு பிணக்கு நிலமை குறைவடையும்.

# கடுகு சிறிது; காரம் பெரிது



அது மிகவும் சின்னஞ்சிறிய குளவி. ஆனால் எப்போதும் துரு துரு என்று பறந்து கொண்டே இருப்பதுதான் அதன் தொழில். காட்டில் ஒரு பெரிய மரத்தில் கூட்டினை அமைத்து அதுதன் குடும்பத்தோடு வாழ்ந்து வந்தது. அந்தக் குளவியை ஒருநாள் யானை ஒன்று கண்டது. குளவியின் சிறிய உருவமும், சுறுசுறுப்பும் யானைக்கு வியப்பை அளித்தன. அதன் வியப்பு சிரிப்பாக வெளிப்பட்டதைக்கண்ட குளவிக்குப் பொறுக்கவில்லை. அது கோபத்துடன் "ஏன் என்னைப் பார்த்துச் சிரிக்கிறாய்" என்று கேட்டது. யானையோ "நீ இவ்வளவு சிறிய பிராணியாய் இருக்கிறாயே. ஆனால் உன் பிறப்பும் சுறுசுறுப்பும் எனக்கு ஆச்சரியமாய் இருந்ததாலேயே சிரித்தேன்" என்றது யானை.

குளவி ஏளனமாக யானையைப் பார்த்து "நீ மலை போல் பருத்ததால் என்ன பயன்? உன்னை உன்னிலும் சிறிய மனிதன் கண்டானானால் அவன் தனக்கு உன்னை அடிமையாக்கி நினைத்தபடி எல்லாம் ஆட்டி வைப்பானே! நான் சிறியவனானாலும் அவனால் என்னையோ என் இனத்தவரையோ தனக்கு அடிமைப் படுத்த முடியாதே" என்றது. குளவி யின் பேச்சால் யானைக்கு கொஞ்சம் கோபம் வந்தாலும் அதைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு "என்னுடன் பந்தயத்துக்கு வா பார்க்கலாம். என் உடம்பு பெரிதானாலும் ஓட்டத்தில் யார் வல்லவர் என்பதைப் பார்த்து விடலாம்" என்றது யானை. இரண்டும் செயலில் இறங்கின. ஆனால் குளவியின் விரைந்த பறப்புக்கு யானையால் ஈடு கொடுக்க முடியாமல் யானை தோற்றது. என்றாலும் யானை சமாளித்துக் கொண்டு "என்றாவது ஒருநாள் என் பெரிய உருவத்தின் மகிமையை உனக்குக் காட்டுவேன்" எனக் கூறி அப்பால் நடந்தது.

சில நாள்களின் பின் வேட்டைக்காரர் வெட்டி வைத்த குழியில் அந்த யானை விழநேரிட்டது. "குழவி கூறியது உண்மையாகிவிட்டதே" என்று மனதுக்குள் கவலைப்பட்ட படி குழியுள் விழுந்து கிடந்தது யானை. அவ்வேளை அவ்வழியால் பறந்து சென்ற குளவி யானையின் நிலையைக் கண்டு அனுதாபம் கொண்டது. அது யானையிடம் "ஒன்றும் யோசிக்காதே! மனிதர் உன்னைச் சங்கிலியால் பிணைத்துக் கொண்டு செல்கையில் நான் உன்னை நிச்சயம் காப்பாற்றுவேன்" என்றது.


இதனைக் கேட்ட யானைக்கு அந்த கவலையிலும் சிரிப்பு வந்தது. "நீயோ அற்ப பிராணி. நீ எப்படி என்னைக் காப்பாற்றப் போகிறாய்" என்று குளவியை நோக்கிப் பரிகாசமாகக் கேட்டது. "அதை நான் இப்பொழுது உனக்குச் சொல்ல மாட்டேன். இருந்து பார் என்ன நடக்கிறது என்று" கூறி விட்டு குளவி பறந்து போனது.

சிறிது நேரம் கழித்து வேட்டைக்காரர்கள் அவ்விடம் வந்தனர். யானையைக் குழியிலிருந்து வெளியேற்றி அதன் முன்னங்காலிலே பெரிய இரும்புச் சங்கிலியை மாட்டி, யானையை இழுத்துச் சென்றனர். யானையும் அந்தப் பெரிய உடம்பை வைத்திருந்தும் ஒன்றும் செய்ய முடியாது தன் விதியை நொந்தபடி அவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் செல்லலாயிற்று.

சில நிமிடங்கள் சென்றிருக்கும் அவ்விடத்துக்கு பல்லாயிரக் கணக்கில் வந்த குளவிக்கூட்டம் வேட்டைக்காரர்களைச் சுற்றிச் சூழ்ந்து கொடுக்குகளால் கொட்டி துன்புறுத்தத் தொடங்கின. இப்போது குளவிகளின் தொல்லை தாங்க முடியாது அவர்கள் சங்கிலிகளை அப்படியே கீழே போட்டு விட்டு கால்போன போக்கில் ஓடத் தொடங்கினர். யானை விடுதலை அடைந்தது. "குளவியே நீ உருவத்தால் சிறியவன் தான் ஆனால் உனது. வல்லமை பெரிது என்பதை நான் இப்போது ஒப்புக் கொள்கிறேன். நான் இவ்வளவு பருமனாக இருந்தும் என்னால் எதுவும் செய்ய முடியாது போயிற்று. நீ செய்த இந்த நன்றியை என்றும் மறவேன்" என்றது யானை.

"சரி சரி வேட்டைக்காரர் திரும்பி வருவதற்குள் நீ விரைவாக ஓடிப் போய் விடு" என்று கூறிய படி தன் கூட்டத்தவருடன் விரைந்து மறைந்தது குளவி.

# நான் ஈ



ஜூன், ஓகஸ்ட் மாதங்களில் அதிகளவு இனவிருத்தியைச் செய்யும் ஈக்கள் குறித்து நுண்ணுயிர் ஆய்வாளர்கள் பல தகவல்களைத் தெரிவித்துள்ளனர். ஈக்களினால் பரவும் நோய்களில் வாந்தி பேதி முக்கியமானது. அசுத்தமான நீரினால் பரவும் வாந்தி பேதி கழிவுகளின் மேல் அமர்ந்து விட்டு பின்னர் உணவு வகைகளில் வந்து அமரும் ஈக்களினாலேயே பெரும்பாலும் நோய்கள் ஏற்படுகின்றன. கிருமிகளையும் பக்ரீறியாக்களையும் இடத்துக்கிடம் காவும் முக்கிய செயற்பாட்டை ஈக்கள் செய்கின்றன. இந்த ஈக்கள் ஈரலிப்பாக உள்ள கழிவுப் பொருள்களில் அமர்ந்துவிட்டு பின்னர் உணவுப் பண்டங்கள், நாம் உபயோகிக்கும் பாத்திரங்கள் என்பவற்றில் அமர்ந்து தமது கால்களைத் தேய்த்துக் கொள்வதால் அவற்றின் உடம்பில் ஒட்டியிருக்கும் கிருமிகள் உணவுப் பண்டங்களிலும், பிற இடங்களிலும் தொற்றுகின்றன. இவ்வாறு இடம் மாறும் தொற்றுக் கிருமிகள் எமது உடலினுள் சென்று பல நோய்களை ஏற்படுத்துகின்றன. இத்தகைய தொற்றுக்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எம்முடைய சுற்றுப் புறச் சூழலைச் சுத்தமாகப் பேணுவது அவசியம். மேலும் உணவுப் பண்டங்களை நீண்ட நேரம் திறந்து வைக்காமலும் பழுதடைந்த உணவுப் பொருள்கள் அல்லது கழிவுகளைக் குப்பைத் தொட்டியில் இட்டு மூடி வைப்பதாலும் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.


ஈக்கள் ஒருபோதும் நீர்ச் சூழலில் இனவிருத்தி அடைவதில்லை. ஈரலிப்பான திண்மக் கழிவுப் பரப்புகளிலேயே தமது விருத்தியை மேற்கொள்கின்றன. இந்த ஈக்களினால் இலங்கை உட்பட பல நாடுகளில் வாந்திபேதி வைரஸ் காய்ச்சல் மற்றும் பல தொற்றுநோய்களுக்குள்ளாகி பலர் உயிரிழப்பதோடு இன்னும் பலர் பல உபாதைகளுக்கும் உள்ளாகின்றனர்.

**ஈயின் வாழ்க்கை வட்டம்**

வரண்ட அல்லது ஈரலிப்பான இடங்களில் பெண் ஈக்கள் முட்டையிடுகின்றன. இவை5 அல்லது 6 தடவைகளில் 75தொடக்கம்100 முட்டைகள் வரை இடும்.



வெப்பமான காலநிலையில் 12தொடக்கம் 24மணித்தியாலங்களில் இந்த முட்டைகள் பொரிக்கின்றன. முட்டைகளில் இருந்து வெளிவரும் நுண்புழுக்கள் வெள்ளை நிறமாகவும், கால்கள் அற்றவையாகவும் காணப்படுவதோடு 5 நாள்களுக்குள் உணவை உட்கொள்ள ஆரம்பித்து விடுகின்றன.



ஆறுநாள்களில் இந்த நுண் புழுக்கள் கடினமான மற்றும் பிறவுண் நிறம் கொண்டே மேற் புறங்களாக விருத்தியடைவதோடு கால்கள், இறக்கைகள் போன்ற உறுப்புகள் உருவாக ஆரம்பிக்கும்.




**வாழும் காலம்**

வெப்பநிலை மற்றும் வாழ்க்கை முறை என்பவற்றைப் பொறுத்து 15 தொடக்கம் 30 நாள்கள் உயிர் வாழக் கூடியவை. வறண்ட பகுதிகளில் வேகமாக விருத்தி யாவதுடன் நீண்ட நாள்கள் வாழக்கூடியவை.



# முன்னால் வரும் இலக்கத்தை எழுதுவோம்




# தாவரங்களும் இலை வகைகளும்

**1.அகன்ற இலையுடையவை**
தாமரை
தேக்கு
பூசணி

**2. ஒடுங்கிய இலையுடையவை**
நெல்
புல்
லீக்ஸ்
றம்பை

**3. சிறிய இலையுடையவை**
புளி
அகத்தி
விளாத்தி


**4. சமச்சீரான இலைகள்**
வெற்றிலை
கொய்யா
பூவரசு

**5. கூட்டிலைகள்**
புளியமிலை
அத்தியிலை
வேப்பமிலை
நெல்லியிலை
முருங்கையிலை
கறிவேப்பிலை


**6. வாசமுள்ள இலைகள்**
கறிவேப்பிலை
றம்பை
துளசி
கற்பூரவள்ளி
தூதுவளை
சஞ்சீவி

**7. உணவுக்குப் பயன்படும் இலைகள்**
லீக்ஸ்
வல்லாரை
அகத்தி
கீரை
தூதுவளை
கோவா
பொன்னங்காணி
முருங்கையிலை
சண்டியிலை

**8. கறிக்கு சுவையூட்டும் இலைகள்**
கறிவேப்பிலை
றம்பை
கொத்தமல்லி இலை
புதினா





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். வருமானம் உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தினரிடம் பாராட்டு, வெகுமதி பெறுவர்.

**இடபம்:** பிறர் கூறும் குறைகளை கண்டு கொள்ள வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். இலாபம் மிதமாக இருக்கும்.

**மிதுனம்:** குடும்பத்தில் குழப்பம் உண்டாகி மறையும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி சுமாராக இருக்கும். பெண்கள் நகை, பணத்தை கவனமாகக் கையாளவும்.

**கடகம்:** உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இலக்கு எளிதில் பூத்தியாகும். பணப்பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.

**சிங்கம்:** குடும்பத்தில் வீண் விவாதத்தைத் தவிர்க்கவும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதலாக உழைப்பீர்கள். செலவில் சிக்கனம் தேவை.

**கன்னி:** எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் இலாபம் சிறப்பாக இருக்கும். பணவரவு படிப்படியாக அதிகரிக்கும். குடும்பத் தேவை பூர்த்தியாகும்.

**துலாம்:** பிறரிடம் குடும்ப விஷயத்தைப் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் விழிப்புடன் செயல்படவும். மிதமான இலாபம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** எதிரியால் இருந்த தொல்லை விலகும். சமயோசித செயலால் தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி காண்பீர்கள். தாராள பணவரவு இருக்கும்.

**தனுசு:** உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**மகரம்:** தகுதிக்கு மீறிய செயலில் ஈடுபட வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இலக்கு நிறைவேறும். வருமானம் திருப்தி தரும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவீர்கள்.

**கும்பம்:** புதியவர்களிடம் அதிக நெருக்கம் வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மீனம்:** அறிவுத்திறனை வளர்த்துக் கொள்வீர்கள். தொழில் வியாபாரம் செழிக்க தேவையான மாற்றம் செய்வீர். தாராள பணவரவு இருக்கும்.



# சார்லி சாப்ளின் - 2 தயாராகிறது

பிரபுதேவாவின் நடப்பில் சார்லி சாப்ளின் படத்தின் இரண்டாம் பாகம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபு, பிரபுதேவா, அபிராமி, காயத்ரி ரகுராம், லிவிங்ஸ்டன் உள்பட பலர் நடித்த படம் 'சார்லி சாப்ளின்'. 2002 ஆம் ஆண்டில் வெளியான இந்தப்படம் ரசிகர்களின் வரவேற்பைப் பெற்றது. இதை சக்தி சிதம்பரம் இயக்கினார். தற்போது 'சார்லி சாப்ளின்2' தயாராகி வருகிறது. இந்தப் படத்திலும் பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கிறார். இந்த படத்தின் முதல் கட்ட பணிகள் தொங்கியுள்ளன என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர்** : உன் பெயர் என்னப்பா?
**மாணவன்** : பசுவுக்கு உடம்பு சரியில்லை.
**ஆசிரியர்** : என்னப்பா சொல்றே? புரியலயே?
**மாணவன்**: என் பெயர் 'கௌ' 'சிக்' சார்!
**ஆசிரியர்** : நீங்க ஒண்ணும் தூய தமிழ்ல பேசி என்னைக் கொல்ல வேண்டாம். ஆங்கிலத்திலேயே சொல்லுங்க.
**மாணவன்** : சரி சேர்..
**ஆசிரியர்** : உங்க அப்பா பேரு என்ன?
**மாணவன்**: எங்க அப்பா பேரு KING COW MILK சார்!
**ஆசிரியர்** : ஏண்டா மறுபடியும் படுத்துறாய்? தமிழிலயே சொல்லித் தொலடா!
**மாணவன்** : எங்க அப்பா பேரு 'ராஜ' 'கோ' 'பால்' சார்.
**ஆசிரியர்** : ஆள விடுடா சாமி! இனிமே சத்தியமா உங்கிட்ட எதுவுமே கேட்க மாட்டேன்.





ஏதோ சுனாமியாம்ல...
அதான் பாதுகாப்பா
ஏறிக் குந்திட்டன்....

# பேஸ்புக் கவிதைகள்


வராந்தாவிலேயே
இருந்த
வயதான தந்தை....
இறந்த பின்
ஹோலுக்குள் வந்தார்
ஒளிப்படமாய்...!"

புறாக்கள் வளர்க்கும்
எதிர் வீட்டுக்காரர்
என்னிடமிருந்து
பறிக்கிறார்
பூனை வளர்க்கும்
சுதந்திரத்தை...."

பறித்த மலரை
ஆண்டவனுக்குச்
சூட்டினாலென்ன?
கல்லறையில்
வைத்தாலென்ன?
மலருக்கென்னவோ
பறித்ததுமே வந்துவிட்டது
சாவு!

வேலிக்கு வெளியே
தலையை நீட்டிய என்
கிளைகளை வெட்டிய
தோட்டக்காரனே...!
வேலிக்கு அடியில்
ஊடுருவும் என் வேர்களை
என்ன செய்வாய்...?"

சர்க்கரை இல்லை...
கொழுப்பு இல்லை...
எஜமானரோடு
வோக்கிங் போகுது
ஜிம்மி...!"





வீடு கட்ட லோன் வாங்கின
பணத்தில இரண்டாம் கல்யாணம்
பண்ணிக்கிட்டியாமே நிஜமா?
ஆமாங்க, இப்போதைக்கு சின்ன வீடு
போதும்னு ஜோசியர்
சொன்னார்..!!??

தோல்வி என்பது வெற்றிக்கு
முதல் படி....



எனக்கு மட்டும் ஏன் நிறைய
படி இருக்கு....

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | 6 | | 7 | | 8 | |
| 3 | | | | | | | | 2 |
| | | 4 | | | | 7 | | |
| 9 | | | 7 | | 2 | | | 5 |
| | 4 | | | 1 | | | 3 | |
| 1 | | | 3 | | 6 | | | 8 |
| | | 9 | | | | 4 | | |
| 8 | | | | | | | | 9 |
| | 3 | | 9 | | 1 | | 5 | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 4 | 6 | 9 | 8 | 2 | 1 | 5 |
| 9 | 6 | 1 | 3 | 2 | 5 | 8 | 7 | 4 |
| 2 | 8 | 5 | 7 | 1 | 4 | 9 | 6 | 3 |
| 6 | 5 | 3 | 9 | 4 | 1 | 7 | 8 | 2 |
| 8 | 4 | 9 | 2 | 3 | 7 | 6 | 5 | 1 |
| 7 | 1 | 2 | 8 | 5 | 6 | 3 | 4 | 9 |
| 5 | 3 | 6 | 4 | 8 | 9 | 1 | 2 | 7 |
| 1 | 2 | 7 | 5 | 6 | 3 | 4 | 9 | 8 |
| 4 | 9 | 8 | 1 | 7 | 2 | 5 | 3 | 6 |





# வெள்ளிக்கிழமை விரதத்தின் மகிமைகள்

கன்னிப் பெண்கள் அம்பிகைக்கும், முருகனுக்கும் உகந்த நாளான வெள்ளியில் விரதம் இருந்தால் நல்ல கணவர் வாய்க்கப் பெறுவர்.

விரதங்களில் சிறந்தது வெள்ளிக்கிழமை விரதம். இதனை சுக்கிரவார விரதம் என்று குறிப்பிடுவர்.

சுமங்கலி பாக்கியம், குழந்தைப்பேறு, செல்வவளம் உண்டாகும். தை, ஆடி வெள்ளிக்கிழமைகள் மேலும் சிறப்பானவை.

வெள்ளிக்கிழமை அதிகாலையில் எழுந்து குளித்து உங்கள் வீட்டில் பூஜையறையில் விளக்கேற்றி விரதத்தை ஆரம்பிக்க வேண்டும்.

அன்றைய தினம் முழுவதும் உபவாசம் இருந்து மாலையில் கோவிலுக்கு சென்று நெய் தீபம் ஏற்றி விரதத்தை நிறைவு செய்ய வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு வாரமும் தொடர்ந்து விரதத்தை கடைபிடித்து வந்தால் மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும்.

## நாளை

**17.11.2017**
வெள்ளிக்கிழமை

**கார்த்திகை 01**

திதி: சதுர்த்தி பி.ப. 03.58 வரை
நட்சத்திரம்: சுவாதி மா 06.13 வரை
சுபநேரம்: 06.08–07.38 வரை
ராகுகாலம்: 10.38–12.08 வரை

## வரலாற்றில் இன்றைய தினம் 16.11.2017

1920 - ஆஸ்திரேலியாவின் தேசிய வானூர்தி சேவை ஆரம்பிக்கப்பட்டது.

1944 - இரண்டாம் உலகப்போரில் ஜேர்மனியில் டுறென் பகுதி கூட்டு நாடுகளின் வானூர்திக் குண்டு வீச்சினால் அழிக்கப்பட்டது.

1973 - அலெஸ்கா குழாய் அமைப்புக்கு அதிகாரமளிக்கும் சட்டத்தில் அமெரிக்க அதிபர் நிக்சன் ஒப்பமிட்டார்.

1999 - கல்விச் சுற்றுலா சென்ற 4 மாணவர்கள் கடலில் மூழ்கி உயிரிழப்பு. வடமராட்சிப் பகுதியில் சோகம்.

2006 - ஆயுதங்களைக் கீழே வைத்துப் பேச வருமாறு விடுதலைப் புலிகளை அழைக்கிறார் மகிந்த ராஜபக்ச. பிரச்சினைக்குத் தீர்வு காண பேச்சைத் தொட அரசு தயார் என்றும் அறிவிப்பு.

2016 - பௌத்தத்துக்கான முன்னுரிமை நாட்டுக்கு மீண்டும் ஆபத்து என்று சிறிதரன் எம்.பி. எச்சரிக்கை

2016 - வடமராட்சி தம்பகாமம் நீரேரியில் 4 லட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

2016 - எகிப்து முன்னாள் அதிபர் மோர்சிக்கு விதிக்கப்பட்ட சாவுத் தண்டனை கைவிடப்பட்டது.

2016 - செருப்பு அணிந்த குரங்கு என்று மிச்செல் ஒபாமா மீது விமர்சனங்கள்.

2016 - லிபியா அகதிகள் படகு விபத்து 100 பேரைக் காணவில்லை.

UNESCO

1945 - யுனெஸ்கோ நிறுவப்பட்டது.



(24 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பார்வைக் கோளாறுகள்...

திரையின் பிரகாசம் கண்களை உறுத்தும் வகையில் இருக்கக்கூடாது. கணினித்திரையில் இருந்து கண்கள் குறைந்த பட்சம் 20 அங்குல தூரத்துக்குள் இருக்கக்கூடாது.

கண் இமைகளை தேவையான அளவுக்கு அசைக்காத போது, கண்களில் உள்ள தசைகள் இறுக்கமடைந்து விடுகின்றன. அதனால் கண்களில் வலி ஏற்படும். ஆக, குறிப்பிட்ட கால இடைவெளியில் கண்களுக்கு ஓய்வு கொடுக்கும் விதமாக கணினியை விட்டு நகர்ந்து சிறிது தூரம் நடந்து விட்டு வர வேண்டும்.

தலைக்கு மேல் இருந்து வரும் ஒளியோ, ஜன்னலில் இருந்து வரும் ஒளியோ கண்களில் நேரடியாகப் படக்கூடாது. ஒளிபடும் சந்தர்ப்பத்திலே அதனை உடனடியாக மறைத்துவிட வேண்டும். அதிக வெளிச்சம் காணப்படின் மின் விளக்குகளை அணைத்து விடலாம்.


## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 02 . 1928



இறப்பு 14 . 11 . 2017

### இராமுப்பிள்ளை தர்மலிங்கம்

**(இளைப்பாறிய தபாலதிபர், சுன்னாகம்)**

ஏழாலைதெற்கு, மயிலங்காட்டைபிறப்பிடமாகவும்சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை தர்மலிங்கம் 14.11.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும் பொன்னுத்துரை (நாகரத்தினம்மா) சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றகமலாம்பிகையின் அன்புக்கணவரும் இராமச்சந்திரன், ஜெயச்சந்திரன், இரவீந்திரன், தவேந்திரன், தர்மாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, பொன்னம்மா, செல்லம்மா, ஆனந்தசுந்தரம், தனபாலசிங்கம் மற்றும் நடராஜா, விஸ்வலிங்கம், சுப்ரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தெய்வேந்திரன் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் விமலா, வாசுகி, சுமதி, மைத்திரேயி, ஆனந்த கிருஸ்ணன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அச்சுதன், பிரியங்கா, நிஷானா, கிருசாளினி, சங்கீதன், கீர்த்தன், சந்தோஷ், நிருதா, அபிலாஷ், இலக்கியா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2017) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.150, இலங்கை வங்கி அருகாமை, K.K.S Road, சுன்னாகம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 224 0411, 077 803 9435**

## மரண அறிவித்தல்



### சிவபாதசுந்தரம் நகுலன்

யாழ்ப்பாணம், நல்லூர், ராச வீதியைப் பிறப்பிடமாகவும் டொறன்டோ கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதசுந்தரம் நகுலன் அவர்கள் 14.11.2017 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் நிர்மலா தம்பதியரின் புதல்வனும், கேசவியின் பாசமிகு கணவரும் ராஜ்கௌதம், ராஜ்வர்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷ்யந்தனின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் சரஸ்வதி தம்பதிகள், கந்தையா செல்லம்மா தம்பதிகள் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற புஷ்பரட்ணம் மற்றும் ராதாராணியின் மருமகனும் முரளி கிருஷ்ணா, நிவேதிதா, காயல் ஆகியோரின் மைத்துனரும், ஜெகதீசன், கேசவன், காலஞ்சென்ற சிவநேசன் மற்றும் காந்திமதி ஆகியோரின் மருமகனும் விமலா, பாலசுந்தரம், ராஜசுந்தரம் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்கனடாவில்இடம்பெறும். இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்: கேசவன்**
**021 222 9830**

## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 07 . 1950



இறப்பு 15 . 11 . 2017

### வல்லிபுரம் முருகேசு

**(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர், சீனன்குடா)**

குடமியன் வரணியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு வீரபத்திரர் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் முருகேசு ( ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர் ,சீனன்குடா) நேற்று (15.11.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகர் வல்லிபுரம் இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற காசித்தம்பி வல்லிபுரம் நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சரசம்மாவின் அன்புக் கணவரும் ஜெயா, ஜெயராம்(தொழில்நுட்ப உத்தியோகத்தர் பிரதேச செயலகம், வவுனியா), கீதா ஆகியோரின் அன்பு தந்தையும் சங்கர்குமார் (இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் ,வவுனியா), துர்க்கா(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், வவுனியா), செல்வரூபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தங்கராசா, யோகராசா, மார்க்கண்டு, பொன்னம்மா, மாணிக்கம் (தென்மராட்சி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ,கொடிகாமம்), முத்துக்குமாரு (ஆசிரியர், யா\எழுது மட்டுவாழ் அ.த.க மற்றும் யா\மந்துவில் றோ.க.த.க), அன்னம்மா, சிவசோதி(ஆசிரியை யா\வரணி இடைக்குறிஞ்சி), யோகேஸ்வரி, சிவானந்தன் (சுவிஸ்), ஞானக்கொழுந்து (சுவிஸ்), காலஞ்சென்ற சாரதா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவபாக்கியம், சிவகாமி, தங்கமணி, பரமேஸ்வரிகாலஞ்சென்றபரமேஸ்வரிமற்றும்யோகேஸ்வரி, சந்திரமதி, ரேவதி (சுவிஸ்), உதயகுமார் ஆகியோரின் மைத்துனரும் புவித்திரா, ஜனுஜா, டனுசிகா, கம்சிகா, தமிழ்இனியன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2017) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சாவகச்சேரி வடக்கு. வீரபத்திரர்கோயிலடி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 612 4732 (மனைவி)**

## மரண அறிவித்தல்



### தம்பிஐயா நகுலேஸ்வரன்

**(காந்திமாஸ்ரர், இளைப்பாறிய ஆசிரியர்)**

இணுவில் மேற்கு, இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா நகுலேஸ்வரன் (காந்திமாஸ்ரர், இளைப்பாறிய ஆசிரியர்) 14.11.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களானதம்பிஐயா செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்கள்ன வைரவநாதர் சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தங்கேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும். சிவதீபன் (லண்டன்), நிரோசன்(ஆஸ்திரேலியா), லோகப்பிரதாப்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தனுஜா(லண்டன்), சங்கீர்த்தா(ஆஸ்திரேலியா), யனாத்தனி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கமலேஸ்வரி காலஞ்சென்ற கமலேஸ்வரன் மற்றும் பரமேஸ்வரன், காலஞ்சென்ற இரவீந்திரன் மற்றும் கமலாகரன், ரஜனி, மனோகர், பாஸ்கரன்(லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற கிருஸ்ணராசா மற்றும் நாகேஸ்வரி காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2017) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"திருப்பதி" இணுவில் மேற்கு, இணுவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி ஞானதேவி சுப்பிரமணியம்

நேற்றைய தினம் பிரசுரிக்கப்பட்ட திருமதி ஞானதேவி சுப்பிரமணியம் அவர்களின் இறுதிக்கிரியைகள் (16.11.2017) வியாழக்கிழமை என உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. தவிர்க்கமுடியாத காரணத்தால் நாளை (17.11.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுதாகரன் (மகன், சுதாகரன் பந்தல் சேவை)
சாவகச்சேரி. 077 276 7164

# பார்வைக் கோளாறுகள் தரும் செயலியாக கணினி

கணினியில் அதிக நேரம் வேலைகளைச் செய்யும்போது கண்கள் பாதிப்படைகின்றன. கணினியை பயன்படுத்தக்கூடியவர்களுள் 85 சதவீதமானோர் பார்வை தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

நவீன தொழில்நுட்ப சாதனங்களின் ஆதிக்கம் நிறைந்த விஞ்ஞான உலகில், தற்போது எந்தத் துறையை எடுத்து நோக்கினும் அங்கு கணினி முதன்மைக் கருவியாக திகழ்கிறது. பொருள்கள் விற்பனை தொடக்கம் சான்றிதழ்கள் பெறுவது வரை அனைத்தும் இணைய வழியாக இடம்பெறுகிறது. இதனால் கணினி துறை சார்ந்து கல்வி பயின்றோருக்கு வேலை வாய்ப்புகள் அதிகம் உண்டு.

அனைத்துக் கல்விச் சாலைகளிலும் குறிப்பாக, கல்லூரிகளில் கணினிக் கல்வியை பயில முடிகிறது. இதனால் அலுவலகங்கள், தொழில் நிறுவனங்கள், வீடுகள் என அனைத்து இடங்களிலும் கணினி அத்தியாவசியப் பொருளாகி விட்டது.

கணினிப் பயன்பாடு அதிகரித்த பார்வைக் கோளாறுகளை ஏற்படுத்துகிறது. இந்த பிரச்சினைக்கு 'கணினி விஷன் சின்ட்ரோம்' எனப் பெயர் குறிப்பிடுகின்றனர். இந்தப் பிரச்சினை 21ஆம் நூற்றாண்டு மனித குலத்துக்கு உவந்தளித்த தண்டனையாகப் பார்க்கப்படுகிறது. அந்த வகையிலே 'கணினி விஷன் சின்ட்ரோம்' குறித்து அறிந்து கொள்ளுதல் நன்று.

"இந்த நோயின் முதல்நிலை அறிகுறி கண்களில் வலி ஏற்படுவதோடு ஆரம்பமாகும். பின்னர் மங்கலான பார்வை, உலர்ந்த கண்கள், தலைவலி போன்றவையும் ஆரம்ப காலத்தில் ஏற்படும். கழுத்து வலி, முதுகு வலி மற்றும் கணினியின் முன் அமர்ந்து கொண்டு எமது கண்களின் பார்வைப்புலம் கொண்டு செயலாற்றுவதற்கும் தொடர்பு உண்டு" என்கிறார்கள் மருத்துவர்கள்.

இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அதில் முக்கியமான காரணமாக நோக்கக்கூடியது, நாம் சாதாரணமாக பார்க்கும் போது அடிக்கடி கண் சிமிட்டும் இயல்பான தன்மையைக் கொண்டுள்ளோம். கணினி திரையை உற்றுப்பார்க்கும் போது கண் சிமிட்டும் இயல்பான தன்மை குறைந்து விடுகிறது. நாம் வழக்கமாக ஒரு நிமிடத்துக்கு 16 தடவைகள் கண் சிமிட்டுகின்றோம். ஆனால் கணினியின் முன் அமர்ந்து வேலை செய்யும் போது 5 தொடக்கம் 6 தடவைகள் கண் சிமிட்டுகின்றோம். இது கண்களில் அரிப்பு, கண்கள் உலர்ந்து போகும் தன்மையை ஏற்படுத்துகிறது.

இதனைத் தடுப்பதற்கு கணினித் திரையை கீழாக இறக்கி வைக்க வேண்டும். திரையின் நடுப்பகுதி கண்களின் நேர் பார்வையில் இருந்து 5 தொடக்கம் 6 அங்குல அளவுக்கு கீழாக இருக்க வேண்டும். நேருக்கு நேர் கண்களில் படக்கூடாது.

கணினி திரைமூலம் பிரதிபலிக்கும் ஒளியைக் கட்டுப்படுத்தும் கண்ணாடிகளை வேலை செய்யும் போது அணிய வேண்டும். 'கொன்ராக்ட் லென்ஸ்' அணிந்திருப்பவர்களும் இதைப் பயன்படுத்த வேண்டும். 40 வயதுக்கு மேல் வெள்ளெழுத்து என்று கூறப்படும் குறைபாடு வரக்கூடும். அவர்கள் அணியும் 'கண்ணாடி லென்ஸ்' திரையில் பிரதிபலிக்கும் ஒளியைக் கட்டுப்படுத்தும் லென்சாக அமைந்திருக்க வேண்டும்.

கணினித் திரை தட்டையாக இருப்பது நல்லது. திரையில் கறுப்பு நிற எழுத்து மற்றும் உருவங்கள் கண் பார்வைக்கு உகந்தவை. சாதாரணமாக உங்களால் பார்க்க முடியும் சிறிய எழுத்துக்களை விடவும் 3 மடங்கு பெரிய எழுத்துக்களையே கணினியின் திரையில் காணவேண்டும்.

(தொடர்ச்சி 23)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை கந்தசாமி



தோற்றம் 18.02.1937 மறைவு 13.11.2017

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கந்தசாமி 13.11.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-செல்லாச்சிதம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - மதியாபரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும் இராஜேஸ்வரி (ஜேர்மனி), சிவராசா (ஜேர்மனி), ஸ்ரீகாந்தன் (பிரான்ஸ்), திலீபன் (பண்ணாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தெய்வேந்திரன் (ஜேர்மனி), ஸ்ரீதேவி (ஜேர்மனி), லாவண்யா (பிரான்ஸ்), றஜிதா (பண்ணாகம்) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான சோதிப்பிள்ளை (ஓட்டுசுட்டான்), சிவசுப்பிரமணியம் (கொக்குவில்) மற்றும் நாகம்மா (பண்ணாகம்), நீலாட்சி (கொக்குவில்) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் (கொழும்பு), தனபாலசிங்கம் (வவுனியா), தர்மகுலசிங்கம் (கனடா), வில்லிமலர் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் றஜீவன், றஜீவா, றஜித்தன் ராதிகா, சுவேற்றா, பிரகாஸ், கனிஸ்கா, மீகாஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2017) வியாழக் கிழமை மு.ப. 9.00மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலைஇந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர். 075 210 0358

## விண்ணக வாழ்வின் 6 ஆம் வருடம்



பிறப்பு 25 . 09 . 1945 இறப்பு 16 . 11 . 2011

அமரர்
### தம்பிராசா பீற்றர்சன் விஜயசிங்கம்
(ஓய்வு பெற்ற வரி மேற்பார்வையாளர், Shamrock நிர்வாகி)

அவருடைய மரணத்தின் வாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்.

SHAMROCK
குடும்பத்தார்.
ஈச்சமோட்டை.










## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை போல்



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை போல் யாழ். நகரில் 14.11.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இல.52,மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள இல்லத்தில் இன்று (16.11.2017) வியாழக்கிழமை பி.ப 3.00 மணி தொடக்கம் அஞ்சலிக்கு வைக்கப்படும். அன்னாரின் இறுதிச்சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.52, மருதடி வீதி,
நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர்.
021 221 9237

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை காங்கேசன்துறை (மல்லாகம்).

### சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகள் என்பன குத்தகைக்கு /வாடகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல். - 2018

கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித்திகதி:- 24.11.2017 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி:- 24.11.2017 வெள்ளிக்கிழமை 02.00 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி:- 24.11.2017 வெள்ளிக்கிழமை பி.ப 02.30 மணி

| இல. | குத்தகை விவரம் | மாத வாடகை | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| மல்லாகம் உப அலுவலகம் | | | | | |
| 01 | அளவெட்டி மலை வேம்படி கருவாட்டுக் கடை | - | 7980.00 | 1000.00 | 1000.00 |
| 02 | மல்லாகம் பொதுச் சந்தை | - | 94150.00 | 1000.00 | 1000.00 |
| 03 | இறால் மடம் சந்தை | - | 990.00 | 250.00 | 250.00 |
| 04 | கும்பலைச் சந்தை | - | 166500.00 | 1000.00 | 1000.00 |
| தெல்லிப்பளை உப அலுவலகம் | | | | | |
| 01 | கூந்தன் சீமா சந்தை கோழிக்கடை | 1050.00 | 46530.00 | 1000.00 | 1000.00 |
| 02 | கூந்தன் சீமா சந்தை | - | 9950.00 | 1000.00 | 1000.00 |
| 03 | கூந்தன் சீமா கருவாட்டுக் கடை | - | 7200.00 | 1000.00 | 1000.00 |
| மயிலிட்டி உப அலுவலகம் | | | | | |
| 01 | வீமன்காமம் ஆட்டிறைச்சிக் கடை | - | 18000.00 | 1000.00 | 1000.00 |
| 02 | வீமன்காமம் கருவாட்டுக் கடை | - | 7200.00 | 1000.00 | 1000.00 |

குறிப்பு:- மேலதிக விவரங்கள், நிபந்தனைகளுக்கு 26.10.2017 (புதன்கிழமை) ஆம் திகதியன்று உதயன் பத்திரிகையில் வெளியான எமது சபையின் **"கேள்வி அறிவித்தல் - 2018"**என்ற அறிவித்தலை பார்வையிடவும்.

வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).
16.11.2017.

திரு.இராமலிங்கம் பகீரதன்.
செயலாளர்.

## சிங்களவரின்...

வடக்கில் இனவாதத்தைத் தூண்டுவது ஏற்புடையதல்ல என்று மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்தார்.
அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் மேலும் கூறியதாவது:
நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவுகின்றது. அமைதியைச் சீர்குலைக்க சிலர் சூழ்ச்சி செய்கின்றனர். முஸ்லிம், தமிழ் மாணவர்கள் இன்று மும்மொழிகளிலும் தேர்ச்சியடைந்துள்ளனர். சரளமாகச் சிங்கள மொழியைப் பேசுகின்றனர். இதுவே இனநல்லிணக்கத்தின் வெற்றி. ஆனால் தெற்கில் உள்ள அரசியல்வாதிகள் இன ஒருமைப்பாடு இல்லை என்று குறை கூறுகின்றனர்.
சிங்கள மாணவர்கள் தமது தாய்மொழியினை மட்டுமே கற்க முனைகின்றனர். அவர்களுக்கு தமது மொழியைக்கூட முறையாகக் கற்க முடியாத நிலையே காணப்படுகின்றது. தெற்கில் உள்ள அரசியல்வாதிகள் தமது பிள்ளைகளுக்கு தமிழ் மொழியை கற்பிக்கின்றார்களா என்பது சந்தேகமே.
கொழும்பில் பிறந்து, கல்வி கற்று சிங்கள மக்களுடன் அரசியல் விடயங்களிலும் ஈடுபட்டவரும் சிங்களவருடன் குடும்ப உறவைக் கொண்டவருமான விக்னேஸ்வரன் வடக்குக்குச் சென்று இனப்பிரச்சினையை உருவாக்க முற்படுவது முறையற்றது. புலம்பெயர் வாழ் தமிழரது விருப்பங்களை நிறைவேற்றுவதை விட இலங்கையில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதைப் பற்றி சிந்திப்பது அவரது பதவிக்குப் பொருத்தமாகும் -என்றார். (உ-5,31)

## ராணுவம்...

யப்பட்டது. இவர்களில் 9பேரின் மனுக்கள் ஏற்கனவே அநுராதபுரம் மேல் நீதிமன்றில் நிலுவையாக உள்ளமையால், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் அவற்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று நீதிபதி மா.இளஞ்செழியன் அறிவித்தார்.
எஞ்சிய மூவரின் மனுக்கள், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நேற்றுப் புதன்கிழமை திகதியிடப்பட்டன.
"மூவர் சார்பான மனுக்களும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. எதிர் மனுதாரர்களாகக் குறிக்கப்பட்டுள்ள இராணுவத் தளபதி, யாழ்ப்பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கு அறிவித்தல் அனுப்புமாறு மன்று உத்தரவிடுகிறது. பிரதிவாதிகள் பதில் அணைக்கும் வகையில் மனுக்கள் மீதான விசாரணை 2018ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்படுகிறது" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்றுக் கட்டளையிட்டார். (உ-5,8,101)

## சிம்பாப்வேயில்...

ஹராரே, நவ. 16
ஆபிரிக்க நாடான சிம்பாப்வேயில் நேற்று முதல் இராணுவ ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 37 ஆண்டுகள் நடைபெற்றுவந்த அதிபர் முகாபேயின் ஆட்சி முடிவுக்கு வருகிறது.
சிம்பாப்வேயில் கடந்த 1980ஆம் ஆண்டு முதல் அதிபராக இருந்து வருகிறார் முகாபே. உப அதிபரான எமர்சன், ஆட்சியைக் கைப்பற்ற முயல்கிறார் என்று குற்றஞ்சாட்டி அண்மையில் அவரைப் பதவி நீக்கம் செய்தார் முகாபே.
சிம்பாப்வேயின் தலைநகர் ஹராரேயில் நேற்று அதிகாலை (அந்தநாட்டு நேரத்தின்படி) இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். உயர்நீதிமன்றம், அரச, தனியார் ஊடகங்கள், அதிபர் மாளிகை ஆகியவை படிப்படியாக இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து முகாபே வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டார். இதையடுத்து சிம்பாப்வேயில் நேற்று முதல் இராணுவ ஆட்சி ஏற்பட்டது. (ம)

## இன்று..

தன் தலைமையில் இன்று காலை கூடவுள்ளது. இந்தக் கூட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்துகொள்ளமாட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த ஒன்பதாம் திகதி கூடியிருந்த நாடாளுமன்றக் குழுவில் வரவு- செலவுத்திட்டம் குறித்து கலந்துரையாடப்பட்டபோதும் எவ்விதமான முடிவுகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்புக்கு முன்னதாக (இன்றைய தினத்துக்கு முன்னர்) அரச தலைவரைச் சந்தித்துப் பேசுவது என்றும், அதன் பின்னரே முடிவு எடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரையில் அரச தலைவர் மைத்திரிபாலவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவினர் சந்திருக்கவில்லை. இவ்வாறானதொரு நிலையிலேயே இன்று காலை கூட்டம் நடைபெறவுள்ளது. தேசியக் கொள்கை மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக மக்கள் நலத் திட்டங்களை முன்னெடுப்பதற்காக இரண்டு கோடி ரூபா பெறுமதியான சிறப்பு நிதியொதுக்கீடு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள ரெலோ மற்றும் புளொட் அமைப்புக்கள், தமக்கும் அந்த நிதி ஒதுக்கீடு வழங்கப்படவேண்டும் என்றும் அவ்வாறு வழங்கப்படாவிட்டால் வாக்கெடுப்பில் பங்கேற்காமல் விடுவோம் என்றும் எச்சரித்துள்ளன. (உ-5,31)

## பிணையில்...

கடந்த சில தினங்களாக வாள்வெட்டுச் சம்பவங்கள் திடீரென அதிகரித்துள்ளன. 4 நாள்களில் 7 சம்பவங்களில் 9 பேர் காயமடைந்தனர்.
"பொலிஸாரின் சுற்றுக் காவல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் சுற்றுக் காவல் அணிகள் ஒரு இடத்தைக் கடக்கும் வரை காத்திருந்து அந்தப் பகுதிக்குச் சென்று வாள்வெட்டு நடத்துகிறார்கள். பொலிஸாருக்குச் சவால் விடும் வகையில் இந்த வாள்வெட்டுக் கும்பல்கள் செயற்படுகின்றனவா என்ற கோணத்திலும் நாம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம்" என்றார் அந்த அதிகாரி.
கடந்த காலங்களில் வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்ட சிலர், தற்போதைய வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளமையைத் தாம் அவதானித்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். "அவர்களை அடையாளம் கண்டுள்ளோம். விரைவில் கைது செய்வோம்" -என்றார் அந்த அதிகாரி. (உ-5,26)

## இளைஞர்கள்...

தொடக்கம் 24 வயதுக்கு இடைப்பட்டவர்கள். கொக்குவில், கோப்பாய் மற்றும் மானிப்பாயைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அரியாலைக் கடந்த வாரம் நடைபெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் அவர்களுக் தொடர்பு இருப்பதாக சந்தேகம் வெளியிட்ட பொலிஸார் அது தொடர்பில் அவர்களிடம் விசாரணை முன்னெடுக்கப்படுவதாகக் குறிப்பிட்டனர். (உ-5,101)

## பொலிஸார்...

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் நேற்றுக் காலை வழங்கினார்.
யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாள்களாக வாள்வெட்டுச் சம்பவங்களும், அடாவடித்தனங்களும் மீண்டும் அதிகரித்துள்ளன.
இந்த நிலையிலேயே பொலிஸாரின் விடுமுறைகள் அனைத்தையும் நேற்றிலிருந்து மறு அறிவித்தல்வரை இடைநிறுத்துமாறு வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தினார். (உ-5,26)

## நல்லிணக்க...

னால் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய கடப்பாட்டில் நாம் உள்ளோம்.
இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.
நாடாளுமன்றில் நேற்றுப் புதன் கிழமை வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
போரால் 400 பில்லியன் ரூபா இரு தரப்பும் செலவிட்டதாக அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். இனப்பிரச்சினை தீர்க்கப்படாதமையாலேயே விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்கும் பணத்தைச் செலவிடவேண்டி ஏற்பட்டதாகக் கூறினார். அப்படியாயின் இனப்பிரச்சினையை தற்போதைய ஆட்சியிலாவது இழுத்தடிப்புச் செய்யாமல் தீர்ப்பது நல்லது.
வடக்கைப் பொறுத்தவரையில் ஒரு இலட்சம் வீடுகள் தேவையாக உள்ளன. தற்போதைய வரவு- செலவுத்திட்டத்தில் 50 ஆயிரம் கல்வீடு நிர்மாணிக்க உத்தேசித்தமையை வரவேற்கின்றோம். போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வாழ்பவர்களும் இந்திய ஏதிலி முகாம்களில் உள்ளவர்களும் தமது பூர்வீக நிலங்களுக்குத் திரும்பினால் எந்தவொரு வசதியும் இல்லாத நிலமையே காணப்படுகின்றது.

**மங்களவுக்குப் பாராட்டு**

அமைச்சர் மங்கள சமரவீர நேர்மையான அரசியல் தலைவராவார். அவரது நேர்மையை மதிக்கவேண்டும். இந்தத் திட்டங்களை நிறைவேற்ற நாம் ஆதரவு வழங்க வேண்டும். நாம் நேற்று (நேற்று முன்தினம்) நிதி அமைச்சரை சந்தித்த போது மேலதிக கோரிக்கைகளை வழங்கினோம். அதனை நிறைவேற்றுவதாகத் தெரிவித்தார்.
மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்துக்குத் தேவையான விடயங்கள் உள்ளடக்கப்பட்டாலும் ஐஸ் தொழிற்சாலைகளை நிர்மாணிக்கவேண்டும். நோர்வே அரசு ரூபா 15 கோடிக்கு மேல் வழங்க முன்வந்துள்ளது. வடக்கு -கிழக்கை பொறுத்தவரையில் தனியான மதிப்பீடு இருக்கவேண்டும். அதற்கான குழுவொன்றை நிறுவ வேண்டும்.

**இராணுவ ஆக்கிரமிப்பு**

பாதுகாப்புக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எமது நிலங்கள் இராணுவத்தினரது கட்டுபாட்டில் உள்ளன. எங்களது நிலங்களை பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு அவர்கள் பயன்படுத்துகின்றனர். எமது சொந்த நிலங்களை விடுவிக்க வேண்டும். இராணுவத்தில் பல திறமையானவர்கள் உள்ளனர். இவர்களில் பொறியிலாளர்கள், பயிர்ச்செய்கையாளர்கள் உள்ளனர். இவர்களை மகாவலி, மாதுறுஓயா, மல்வத்து ஓயா பகுதிகளில் குடியேற்றினால் வடக்கிலுள்ள காணிப் பிரச்சினையும் இராணுவ ஆக்கிரமிப்பும் தீரும்.

**பியர் விலை குறைப்புக்கு எதிர்ப்பு**

கித்துள் மற்றும் பனம் கள் விடயத்தில் நிதி அமைச்சர் அண்மையில் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலால் பாரபட்சம் காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த வரித் திட்டத்தால் மோசமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. கித்துள், பனை உற்பத்திகளுக்கு வரி விதித்து விட்டு பியர், வைன் வரி நீக்கப்பட்டமையைக் கண்டு கவலைப்படுகின்றோம். அதனை நீக்க வேண்டும்.

**மக்கள் கிளர்ச்சி**

வடக்கு -கிழக்கு இளைஞர்களுக்கு பொருத்தமான வேலைகளை வழங்க வேண்டும். இனப்பிரச்சினையைத் தீர்க்க அரசுக்கு ஒத்துழைப்பினை வழங்குவோம். ஐ.நா. தீர்மானத்தை அரசு நிறைவேற்றாவிட்டால் பன்னாட்டுச் சமூகத்தின் ஆதரவையும் தமிழ் மக்களின் நம்பிக்கையையும் இழக்க நேரிடும். அதுமாத்திரமின்றி ஜனநாயக முறைமையிலான பாதையில் இருந்து விலகி மீண்டும் மக்கள் கிளர்ச்சி ஏற்படலாம். வடக்கு -கிழக்கு மக்களை கிளர்ச்சிக்குள் தள்ள வேண்டாம் -என்றார். (உ-5,31)

## உள்ளூராட்சி...

அமைச்சின் செயலர் எச்.டி.கமல் பத்மசிறி ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.
உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பில் நியமிக்கப்பட்ட உப குழுவின் பரிந்துரைகளைப் புறந்தள்ளி அமைச்சர் பைசர் முஸ்தபாவினால் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதாக, மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதுபோன்று செயற்பட அவருக்கு அதிகாரம் இல்லை எனவும், அது முறைகேடானது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.
இந்த வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றதாக அறிவிக்குமாறு, மனுவில் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இந்த மனு மீதான விசாரணைகளை இன்று எடுத்துக்கொள்ள மேன் முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (உ-5,31)

## பெரும்பான்மை...

இரா.சம்பந்தனைப் பார்த்துக் கேள்வி எழுப்பினார்.
"அதிகாரப் பகிர்வு கிடைக்கும் என்பதைக் காரணம் காட்டித் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைக்குரிய தீர்வுகளைக் கோராது இருக்க முடியாது என்பதை மூத்த அரசியல்வாதி இரா. சம்பந்தன் ஐயா ஏன் உணரவில்லை" என்று தனது கீச்சகத்தில் நாமல் ராஜபக்ச கேள்வி எழுப்பியிருந்தார்.
அதற்கு இரா.சம்பந்தன், "எம்மை விமர்சிப்பவர்கள் நியாயபூர்வமாக அரசியல் தீர்வு சம்பந்தமாகவும், ஏனைய விடயங்கள் சம்பந்தமாகவும், தங்களுடைய நிதானமான ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை நல்குவார்களாக இருந்தால் சகல பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு. பொறுப்பற்ற பேச்சில் ஈடுபடாமல் அவ்விதமான ஆதரவை நல்கும்படியாக நாம் கேட்டுக்கொள்கின்றோம்" என்று பதிலடி கொடுத்திருந்தார்.
இதற்குக் கீச்சகத்தில் நாமல் ராஜபக்ச நேற்றுப் பதிலளித்தார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
மிகவும் அனுபவம் வாய்ந்தவரும் நான் மதிக்கத்தக்க அரசியல்வாதியாக விளங்குபவருமான சம்பந்தன் ஐயா, அரசியல் தீர்வை கண்டறிவதில் தோல்வியுற்றதன் காரணமாக, தமிழ் இளைஞர்களின் சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை காணமுடியாது என்று கூறும் விளக்கம் எனக்கு வியப்பாகவும் ஏமாற்றமாகவும் உள்ளது.
தமிழ்த் தேசியவாத அரசியல்வாதிகள் தங்கள் சொந்த அரசியல் வேணவாக்களுக்காக இலங்கை இளைஞர்களின் எதிர்காலத்தை இன்னும் எவ்வளவு காலம் வீணடிக்க போகிறார்கள்?
சம்பந்தர் ஐயா இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காணமுடியாதத்தற்கு பெரும்பான்மை சமூகம் மட்டுமே காரணம் என்று கபடமான கருத்தை முன்வைத்துள்ளார்.
ஒரு பண்புள்ள மனிதரான சம்பந்தன் ஐயா, பல தசாப்தங்களாகத் தொடரும் அரசியல் தீர்வு சம்பந்தமான பிரச்சினைக்கான முட்டுக்கட்டை பெரும்பான்மை இனத்தினர் மட்டுமே என்று இனவாதத்தை தூண்டும் விதமாக கூறுவது அழகல்ல.
இனவாதக் கருத்துக்கள் எந்தவொரு சமூகத்தினதும் பிரதிபலிப்பாகாது. துரதிர்ஷ்டவசமாக ஒவ்வொரு சமூகமும் இனவெறியாளர்கள் மற்றும் பெருங்குழப்பவாதிகளையே கொண்டுள்ளது.
ஜி.ஜி.பொன்னம்பலம் ஐயாவின் ஜனநாயகமற்ற கோரிக்கையான 50க்கு 50, என்பது 70 சதவீத பெரும்பான்மையினத்தினரின் உரிமையை குறைத்து, 50 சதவீத நாடாளுமன்ற பிரதிநித்துவத்தைக் கோரி நின்றது. இது எப்படிச் சாத்தியம்? எப்பொழுதும் பெரும்பான்மை இனத்தினரை நீங்களே சீண்டிவிட்டு, எம்மைப் பார்த்து இனவாதிகள் என்று கூறுவதில் என்ன நியாயம் இருக்கின்றது ஐயா?
மேலும் தமிழ்த் தேசியவாதிகளால் எண்ணற்ற அரசியல் மாதிரிகள் என்ற பெயரில் ஒரு பிரிவினையான இனவாத தாயகத்தை உருவாக்குவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளும் நீடித்த தீர்வு காணப்படுவதைத் தடுக்கின்றன. அரசுகள் பேச்சுக்கு இறங்கி வருகின்ற ஒவ்வொரு சந்தர்பத்திலும் தமிழ் தலைமைகள் விட்டுக்கொடுப் பற்ற நிபந்தனைகளை முன்வைத்தமைதான் இழுபறிகளுக்குக் காரணம்.
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உட்கட்டமைப்பு, சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் பில்லியன் ரூபாவை முன்னைய எமது அரசு முதலீடு செய்தது. போர் முடிவடைந்ததன் பின்னர் இடிபாடுகளுக்கு மத்தியில் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு பற்றி பேசிப் பயனில்லை. ஆகையால்தான் எமது மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகவே எமது அரசு வடக்கு கிழக்கில் பெரும் அபிவிருத்திகளை மேற்கொண்டது.
எனது முன்னைய கூற்றை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன், தமிழ் இளைஞர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் அதிகாரப் பகிர்வு என்ற பெயரில் தியாகம் செய்யப்படக்கூடாது. நாம் இருவரும் வெவ்வேறு அரசியல் கொள்கைகளைக் கொண்டிருக்கலாம், ஆனால் முதலில் எமக்கு வாக்களித்த மக்களின் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டு அரசியல் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் – என்றுள்ளது. (உ-5,31)

## வடக்கு...

ருந்து இரவு 8.45 மணியளவில் மதவாச்சியில் தடம் புரண்டதாலேயே வடக்குக்கான தொடருந்துப் போக்குவரத்து தடைப்பட்டது.
கொழும்பிலிருந்து வடக்கு நோக்கி வந்த தொடருந்துகள் அநுராதபுரம் தொடருந்து நிலையம் வரை பயணத்தை மேற்கொண்டன. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிய தொடருந்துச் சேவைகள் அனைத்தும் நேற்று நிறுத் தப்பட்டன.
தொடருந்துப் பாதையை விரைவாகச் சீர்செய்து தொடருந்துப் போக்குவரத்தை வழமைக்குக் கொண்டுவருவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தபோதிலும் நேற்றிரவு வரையில் அது கைகூடவில்லை. இன்றைய தினம் தொடருந்துப் பாதை சீரமைக்கப்பட்டு சேவை வழமைக்குத் திரும்பும் என்று தெரிவிக்கப்பட்டது.
(உ-5,31)



இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்தி வரும் தேசியமட்ட கராத்தே தொடரில் பூநகரி சக்குறா சோட்டோக்கன் கராத்தே கழக மாண வர்களுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்துள்ளது. கொழும்பு சுகததாச உள்ளரங்கில் அண்மை யில் இடம்பெற்ற 7 வயதுப்பிரிவு பெண்களுக் கான காட்டாப் போட்டியில் அ.ஜெனிஸ்ரிக்காவும் 10 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் இ.ஜெனிஸ்ரனும் தங்கப்பதக்கம் வென்றனர்.

(ம-23)



வடமாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கத்தின் பன்முகப்படுத் தப்பட்ட நிதியின் கீழ் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழ கத்துக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் நேற்றுமுன் தினம் வழங்கப்பட்டன. கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் எஸ்.ரஜீவ் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

(ம-108)




புத்தம் புதிய
AVENGER
STREET 150

மிதமிஞ்சிடும் நம்பிக்கையுடன் சௌகரியமிக்க பயணத்தை அனுபவித்திடுங்கள்.



mandarinfeld

DPMC
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270

75, ஹைட்பார்க் கோனர், கொழும்பு 02. 0773-675508, 0777-668142, 0772-981010, 0114-700600 011 4 700 677 info@dpmco.com www.dpmco.com/www.dpg.lk

DPMC app இனை google play store அல்லது apple app store ஊடாக தரவிறக்கம் செய்துகொள்ளுங்கள்.

## வருத்தத்துடன் விடைபெற்றார் பாகிஸ்தானின் சஜீட் அஜ்மல்

பாகிஸ்தானின் சுழல்பந்து வீச்சாளர் அஜ்மல் மூன்றுவகை ஆட்டங்களிலும் தனது ஓய்வு முடிவை நேற்றுமுன்தினம் அறிவித்தார்.
பாகிஸ்தானின் முன்னணி சுழல் வீரராக நீண்டகாலம் தொடர்ந்து வந்தார் அஜ்மல். கடந்த 2012ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக 24 இலக்குகளைக் கைப்பற்றியமை இவரை புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றது. அதன் பின்னர் அஜ்மல் பந்தை, பன்னாட்டு கிரிக்கெட் சபையால் ஏற்றுக்கொள் ளப்பட்ட விதிமுறைகளுக்கு முரணாக வீசுகிறார் என்று அதாவது பந்தை எறிகிறார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அதன் பின்னர் தனது பந்துவீச்சு முறையை மாற்றியமைத்துக் களமிறங்கினார் அஜ்மல். பந்துவீச்சை மாற்றியமைத்த பின்னர், முன்புபோல் அஜ்மலால் இலக்குகளைக் கைப்பற்ற முடியவில்லை. சில தடவைகள் அணியில் இருந்து நீக்கப்பட்டார். இதையடுத்து வருத்தத்துடன் தனது ஓய்வுமுடிவை நேற்று அறிவித்தார்.
"பந்துவீச்சுக் குறித்து என் மீது விதிக்கப்பட்ட தடை என்னைப் பெரிதும் காயப்படுத்தியது. புரோட் என்மீது வைத்த விமர்சனம் என்னை முடிவற்றுக் காயப்படுத்தியது. ஆனால் நான் அனைவரையும் மன்னித்து விட்டேன். சந்தேகத்துக்குரிய பந்துவீச்சுப் பாணிகளை உடைய பந்துவீச்சாளர்கள் இன்றும் விளையாடிக் கொண்டுதான் இருக்கின்றனர். எதிர்காலத்தில் பயிற்சியாளராகத் திட்டமிட்டுள்ளேன்" என அஜ்மல் மேலும் தெரிவித்தார். (ம)




இத்தாலியின் வீரர்கள்

### உலகக்கிண்ண கால்பந்தாட்டம்

# இத்தாலிக்கு பேரதிர்ச்சி!

ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதி பெறாமல் வெளியேறியது மிகப்பெரும் ஜாம்பவானான இத்தாலி.
தகுதிச்சுற்று ஆட்டத்தில் இத்தாலியை எதிர்த்து சுவீடன் மோதியது. இரண்டு அணிகளும் தமது மைதானத்தில் ஓர் ஆட்டத்திலும், மற்றைய அணியின் மைதானத்தில் ஓர் ஆட்டத்திலும் மோத வேண்டும் என்பது விதி. சுவீடனில் முன்னதாக நடைபெற்ற ஆட்டத்தில் 1:0 என்ற கோல் கணக்கில் சுவீடன் வெற்றி பெற்றது. இந்த நிலையில் இத்தாலியில் நேற்றுமுன்தினம் இரண்டாவது சுற்று ஆட்டம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் சுவீடனை ஒரு கோல் வித்தியாசத்தில் வீழ்த்தினால் மட்டுமே இத்தாலியால் உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடருக்குத் தகுதி பெறமுடியும் என்ற நிலை இருந்தது.
இரண்டு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாததை அடுத்து முதலாவது ஆட்டத்தில் (சுவீடனில் நடைபெற்ற ஆட்டத்தில்) வெற்றிபெற்ற சுவீடன் உலகக் கிண்ணத் தொடருக்குத் தகுதிபெற இத்தாலி வெளியேற்றப்பட்டது.
இத்தாலி அணி இதற்கு முன்னர் 1934, 1938, 1982, 2006ஆம் ஆண்டுகளில் சம்பியனானது. இவ்வாறு நான்கு தடவைகள் மகுடம் சூடிய அணி இம்முறை குறைந்த பட்ச தகுதி பெறாமல் வெளியேறியிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 1958ஆம் ஆண்டுக்குப் பின்னர் உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடருக்கு இத்தாலி தகுதிபெறாமல் வெளியேறியிருப்பது இதுவே முதல் தடவை. (ம)


சுவீடனின் வீரர்கள்

## தோல்வியுடன் விடைபெற்றார் ஜல்லூயிஜி

ரஷ்யாவில் அடுத்தாண்டு இடம்பெறவுள்ள கால்பந்தாட்ட உலகக் கிண்ணத்துக்கான தகுதிச் சுற்றில் இருந்து இத்தாலி வெளியேற்றப்பட்ட நிலையில், இத்தாலிய கோல் காப்பாளரான ஜல்லூயிஜியின் கால்பந்தாட்ட வாழ்க்கை தோல்வியுடன் முடிவுக்கு வந்துள்ளது.
39 வயதான ஜல்லூயிஜி புபான் 1997ஆம் ஆண்டு ரஷ்யாவுக்கு எதிரான ஆட்டத்தில் அறிமுகமானார். 20 ஆண்டுகளுக்கு மேலாக விளையாடும் காலத்தில் 175 ஆட்டங்களில் இத்தாலியை பிரதிநிதித்துவப்படுத்தியதோடு 2006ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற அணியில் இடம்பிடித்திருந்தார். மிகப்பெரும் ஜாம்பவானான ஜல்லூயிஜின் வாழ்க்கை தோல்வியுடன் முடிவுக்கு வந்துள்ளது. (ம)



## குரோசியா – சுவிற்சர்லாந்து உலகக்கிண்ணத்துக்குத் தகுதி

ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்கு குரோசியா, சுவிற்சர்லாந்து அணிகள் தகுதி பெற்றுள்ளன.
தகுதிச் சுற்று ஆட்டத்தில் குரோசியாவை எதிர்த்து கிரேக்கம் மோதியது. இந்த ஆட்டத்தில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதிபெற்றது குரோசியா.
மற்றொரு ஆட்டத்தில் சுவிற்சர்லாந்தை எதிர்த்து அயர்லாந்து மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் சுவிற்சர்லாந்து வெற்றிபெற்று உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றது. (ம)


சுவிற்சர்லாந்து அணி

# தோல்வியுடன் விலகினார் ரபேல் நடால்

உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரில் இருந்து வெளியேறினார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.
உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள நடாலை எதிர்த்து டேவிட் கோபின் மோதினார்.
மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் கோபின்.



இரண்டாவது செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார் நடால். ஆட்டத்தை நிர்ணயிக்கும் மூன்றாவது செற் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி வெற்றிபெற்றார் கோபின். இந்த ஆட்டம் அடுத்த சுற்றைத் தீர்மானிக்கும் விதத்திலான ஆட்டமாக அமையவில்லை. எனினும் காயம் க்ாரணமாக நடால் தொடரில் இருந்து விலகிச் சென்றார். (ம)

**யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம், யாழ்ப்பாணம்.**
**பழைய மாணவர் சங்கம்**
**வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2017**

காலம் - 19.11.2017 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் - பி.ப 3.00
இடம் - பாடசாலை பிரதான மண்டபம்

மேற்படி பொதுக்கூட்டத்தின் போது புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம் பெறும். பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறிய மாணவர்களும் இக் கூட்டத்தில் பங்குகொள்ள அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

அதிபர்
யா/திருக்குடும்ப கன்னியர்மடம்.

## வேலைவாய்ப்பு

இலங்கையில் தேசிய ரீதியில் முகாமைத்துவ செயற்பாடுகளை மேற் கொள்ளும் எமது நிறுவனத்தின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி கிளைகளின் விசேட கள முகாமைத்துவ பணியில் செயற்பட பகுதி நேர, முழு நேர நிரந்தர கள உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

**தகைமைக்கு ஏற்ப பதவி நிலை**

கவர்ச்சிகரமான சம்பளத்துடன் விசேட கொடுப்பனவுகள் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்/பெண் இருபாலாருக்கும் ஓய்வு பெற்றவர்களுக்கும் தொழில்வாய்ப்பு.

**அழையுங்கள் :- 077 763 8633 , 077 134 0818**

# இலங்கை - இந்திய அணிகளின் ஆட்டம் கொல்கத்தாவில் ஆரம்பம்



இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது. கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் இன்றைய ஆட்டம் ஆரம்பமாகிறது.

இந்திய அணி அண்மையில் இலங்கைக்குச் சுற்றுப் பயணம் செய்திருந்தது. டெஸ்ட், ஒருநாள், ரி-20 என்று மூன்று தொடர்களையும் சேர்த்து 9 ஆட்டங்கள் இடம்பெற்றிருந்தன. இலங்கை மண்ணில் வைத்து இலங்கைக்கு சிறு வாய்ப்பையேனும் வழங்காமல் 9:0 என்று கம்பீரமான வெற்றியுடன் நாடு திரும்பியது இந்தியா. இந்தத் தோல்வியின் பின்னர் தற்போது மீண்டும் இந்தியாவை இலங்கை எதிர்கொள்கிறது. இந்த முறை இந்திய மண்ணில் ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

தலா மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட், ஒருநாள், ரி-20 தொடர்களில் முதலாவதாக டெஸ்ட் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

இரண்டாவது ஆட்டம் நாக்பூரில் எதிர்வரும் 24ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் டெல்லியில் அடுத்த மாதம் 2ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. ஒருநாள் தொடரின் மூன்று ஆட்டங்களும் முறையே டிசெம்பர் 10, 13, 17ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

ரி-20 தொடரின் மூன்று ஆட்டங்களும் முறையே டிசெம்பர் 20, 22, 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

(ம)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
உடனடியாக பதிவு செய்யுங்கள்
யாரும் இலவசமாக அமெரிக்கா போகலாம்
இன்னும் 2 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
0768226243
V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240
சாவகச்சேரி 0768226242 | நெல்லியடி 0776699892
பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960

## மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 09 . 2004
இறப்பு 15 . 11 . 2017

### செல்வி நிசாஹரி சிவனேஸ்வரன்
(றொபேக்கா)

மாலாவத்தை, புலோலி வடமேற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நிசாஹரி சிவனேஸ்வரன் நேற்று (15.11.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சிவனேஸ்வரன் (இ.போ.ச. உள்ளக கணக்காய்வாளர், கோண்டாவில்), பாலநந்தினி தம்பதியரின் பாசமிகு மகளும் அம்சனாவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நல்லையா மற்றும் சரஸ்வதி காலஞ்சென்ற முருகுப்பிள்ளை (தம்பு), மற்றும் பூமணி தம்பதியரின் பேர்த்தியும் சரத்சந்திரன், இரவிச்சந்திரன், சதீஸ்குமார், புஸ்பராணி, சிவகுமாரி, கவிதா, ரஞ்சி ஆகியோரின் மருமகளும் குலேந்திரன், விந்தன், நிதர்சன், பாலகௌரி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.11.2017) வியாழக்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாலாவத்தை,**
**புலோலி வடமேற்கு, புலோலி.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 226 3984**

## மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 11 . 1933
மறைவு 15 . 11 . 2017

### திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் (தற்காலிக வசிப்பிடமாக நோர்வே) கொண்ட திருமதி பரமேஸ்வரி சுப்பிரமணியம் நேற்று (15.11.2017) புதன்கிழமை நோர்வேயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சாந்தினி, பத்மினி, ஜெயந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சித்திவிநாயகர், சுவர்ணராஜ், கமல்ராஜ் ஆகியோரின் அன்பு மாமியும் பிரணவன், செந்தூரன், லதுஷன், விஷணி, கரிஷன், கபிலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நோர்வேயில் நடைபெறும். இது தொடர்பான தகவல் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**V.தயாசீலன்**
**077 8417511**




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.